
# தமிழரசு

திங்கள் இருமுறை ஆக 1-1971 35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சுவனமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
TIDCO
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை எண். 5206, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்




# தமிழரசு

மலர் 2 | 1-8-1971 | இதழ் 3

## இந்த இதழில்


வளம் தரும் காவேரி

தாய்மை வெல்லும்

அரசு ஸ்டுடியோ

பருப்பு வகைகள் பயிரிடுவோம்

அரசு அலுவலகங்களுக்கு அள்ளித்தரும் அருவி

பதவி உயர்வு (சிறுகதை)

ஏன் இந்தக் காதல் ? (தொடர்கதை)

மாணவர் அரங்கம்

வெண்பாப் போட்டி

முதல்வரின்

அண்ணாமலைப் பல்கலைக்கழகப்
பட்டமளிப்பு விழாப் பேருரை


முகப்பில் :
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்
தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு
'டாக்டர்' பட்டத்தை, தமிழக ஆளுநர்
கே. கே. ஷா தருகிறார்.

பின் அட்டையில் :
வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தைத்
தொடங்கிய தொழில் அமைச்சர்
திரு மாதவன் அவர்களை, முதல்வரும்
ஏனைய அமைச்சர்களும்
வழியனுப்பும் காட்சி.



# கல்லை வைரமாக்கும் கல்வி முறை தேவை!

பல்கலைக்கழக வேந்தரவர்களே!

இணைவேந்தரவர்களே!

துணைவேந்தரவர்களே!

பேராசிரியப் பெருமக்களே!

மாணவர்களே!

"இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு
தெருட்சாருஞ் சுத்த சன்மார்க்க நன்னீதி"

வழங்கிய அருட்சோதி வள்ளலார் காட்டும் தூயநெறி நின்று பணியாற்ற வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் எனும் மகிழ்ச்சியுடன் அடிகளார் வாழ்ந்து சிறந்த தில்லை மூதூரில்;

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாய்
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய்
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய்
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய்

எழுந்து நிற்கும் அறிவுக்கூடமாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறக் குழுமியுள்ள என் அன்பு உடன் பிறப்புக்களே! உங்களையெல்லாம்,

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம்பருப்பிடியும் விரவி
இனித்த நறுநெய் அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதாம்

என் தமிழ்மொழியால் வாழ்த்துகின்றேன். அறிவுத் துறைக்கு ஆக்கம் சேர்த்த ஆல்பிரட் நோபல், ராக்பெல்லர் போன்ற கல்வித் துறைக்குக் கரம் சிவக்க வாரி வழங்கியவர் அண்ணாமலை அரசர். அந்த ஏந்தலின் புகழ்பாடும் எழில் மாளிகையாகத் திகழ்வதே இந்தப் பல்கலைக் கழகம். அந்தப் பெரியவரின் கீர்த்திக்கொடி வான் முட்டப் பறந்திட அரும் பணியாற்றிடும் ஆசிரியப் பெருமக்களும் மாணவ நண்பர்களும் தமிழுலகின் பாராட்டுக்குரியவர்களாவர் என்பதில் வியப்பேதுமில்லை.

விரிந்து மலர்ந்து தழைக்கும் அறிவுலகில் ஆற்றலாளர்களாய்ப் பீடுநடை போடப் பட்டம் பெறுகின்றீர் இன்று. உமக்கிடையே வாழ்த்துரை தந்திட வந்துள்ள எனக்குமோர் பட்டமளிப்பினை நடாத்துகின்ற நிகழ்ச்சிக்கு எவ்வாறு நான் நன்றி கூறுவேன்! சங்க காலத் தமிழகத்தில் விழுப்புண் படாது இயற்கையாக ஒருவன் இறந்திடுவானாயின் அவன் சடலத்தைப் புதைப்பதற்கு முன்னர் கத்தியால் ஓர் காயத்தைச் செய்து அவனை விழுப்புண் பெற்றவனாய் ஆக்குதல் மரபாம். அவ்வாறே இன்று எனக்கும் ஓர் பட்டத்தை அளித்து என்னையும் பட்டம் பெற்றவனாக

ஆக்குகின்றீர் என எண்ணுகின்றேன். என் உழைப்பில் நான் மேலும் உற்சாகம் பெற்றிட—என் கொள்கைகளில் நான் மேலும் உறுதி கொண்டிட—இந்தச் சிறப்பு எனக்குத் தரப்பட்டுள்ளதாகக் கருதி, இந்த விருது தமிழ் உணர்வுக்கும், கலையார்வத்துக்கும், பண்பட்ட பகுத்தறிவுக் கொள்கைக்கும் அளிக்கப்பட்ட விருது எனக்கொண்டு, இந்தப் பெருமையை என்னருந் தமிழர்க்கும் எனை வளர்த்த தலைவர்க்கும் காணிக்கையாக்குகின்றேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலே பேருரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒன்றை நானும் இப்போது நினைவு கூர்கிறேன்.

''என்னுடைய வரம்புகள் எனக்குத் தெரிவது எனக்கு ஆறுதலாக இருக்கிறது. ஏனெனில் நான், புதிதாகச் சுயமாக என்னால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்களையோ தத்துவங்களையோ உங்களுக்கு இப்போது வழங்கப்போவதில்லை. அறிஞர் பல்லோரின் அறிவுரைகளையே உங்களுக்கு நினைவுபடுத்தப் போகிறேன். கல்வித் துறையில் சம்பந்தப்பட்ட வல்லுநர்களின் கருத்துக்களை, சாமான்ய மனிதனின் பார்வையிலே நோக்க விரும்புகிறேன். இது சாமான்யர்களின் யுகம். இது சிலருக்கு வருத்தம் தருவதாக இருக்கலாம். ஆனால் இது மறுக்க முடியாத உண்மை. நான் அந்தச் சாமான்யர்களின் பிரதிநிதி.''


இப்படி அண்ணா அவர்கள் தன்னைப் பற்றிக் கூறிக்கொண்டது முற்றிலும் எனக்கும் பொருந்துமென்றே மகிழ்கிறேன். நீங்கள் வழங்கிடும் ''டாக்டர்'' விருது மேலும் என்னை அடக்கமுடையவனாக ஆக்கிடும் என்று உறுதி கூறுகின்றேன்.

நம்நாடு, கல்வித் துறையில் வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டுவருகிறது. சமூகத்தில் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த ஒரு சிலரின்—வசதியும் வளமையும் படைத்திருந்த உயர்குடி மக்கள் ஒரு சிலரின்—தனி உரிமையாகக் கல்வி இருந்த காலம் மாறி, இன்று சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்யர்களும், தலைமுறை தலைமுறையாக அறிவாலயத்தில் நுழைய அருகதையற்றவர்களாயிருந்தவர்களும், கல்வி பயிலும் உரிமையும், வசதியும் பெற்று ஒளி விளக்குகளாய் மின்னிடும் காட்சி காணுகிறோம். தகுதி, திறமை என்பவை எந்த ஒரு பிரிவினருக்கும் ஏகபோகமானவையல்ல; உரிய வாய்ப்பும் வசதியும் ஊக்கமும் அளித்தால் உயர்வடையும் தகுதியுள்ள மாணவர்கள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர் எனும் உண்மை உணர்ந்து அவ்வழி செயல்படும் காலம் இது.

இன்று பழைய கொள்கைகளும் கோட்பாடுகளும் தங்கள் செல்வாக்கை இழந்துவிட்டன. ஆனால் அவற்றின் இடத்தில் புதிய குறிக்கோள்களும் இலட்சியங்களும் இன்னும் நிலைநிறுத்தப்படவில்லை. இன்று சமூகத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள பல சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் அறைகூவலை ஏற்று, காலத்தோடு ஒட்டிய நெறிமுறைகளை—வாழ்க்கைப் பண்புகளை—வகுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். புதுமை வேகத்துடனும், புரட்சிக் கருத்துடனும் பொங்கிவரும் இலட்சியத் துடிப்புடனும் பொதுநல நோக்குடனும் இளைஞர் சமுதாயம் நாட்டின் நல்வாழ்வில் பங்கு கொள்ள வகைசெய்வதில் முன்னணியில் நிற்கவேண்டியவர்கள் மாணவர்களேயாவர்.

பல்கலைக் கழகம், தேசிய வாழ்க்கையின் கண்ணாடியாக இருக்க வேண்டும். சமுதாய வளர்ச்சியைப் பிரதிபலித்திட வேண்டும். மாறும் உலகிற்கேற்பப் புதிய தலைமுறையினரைத் தயாரிக்கவேண்டும்.





வாலிபம் ஒரு வசந்தம். மிக வசீகரமானதுங் கூட! ஆனால் அதில் உள்ள ஒரு குறை என்னவென்றால்; ஒவ்வொரு நாளும்—ஒவ்வொரு மணித் துளியும்—ஒவ்வொரு விநாடியும்—வாலிபத்தை, வயோதிகம் வாகை சூடிக்கொண்டே யிருக்கிறது. இளமை சிரஞ்சீவியாக இருக்கவேண்டுமெனில், அது உடலை விடுத்து உள்ளத்தை அடைக்கலம் புகுந்திட வேண்டும். ''வயதில் அறிவில் முதியோராய் வாய்மைப் போருக்கு என்றும் இளையோராய்'' தங்கள் சிந்தனையோட்டத்தின் திசை திருப்பிட வேண்டும்.

ஏட்டுக் கல்வி, வளரும் தருவுக்கு வாகான உரம் என்பேன். அதற்காக உரம் மட்டுமே மரம் என இயம்பிடல் தவறன்றோ! கொடி பற்றும் கிளையும், கொழுந்தும் பழுப்புமாக இலையும், காய்கனிக் குலையும் கொண்டு, களைத்தோர்க்கு நிழலும் அளிப்பதன்றோ நன்மரமாகும்! கல்வியின் பயனும் அங்ஙனம் இருந்திடல் வேண்டும். பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பயின்றாலும் பிறர்க்கு நம்மைப் பயன்படுத்தும் கல்வி பெருவிட்டால் நாட்டுக்கு ஏது நன்மை? ஏட்டறிவு மட்டும் போதாது; இயற்கை அறிவும் வளப்படுத்தப்பட வேண்டும்.


சிறந்த கல்வி மேதை திரு ஏ. எல். முதலியார் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்துப் பேழை ஒன்றினை உம் எதிரே திறந்திடல் பொருத்தமென எண்ணுகிறேன்.

"Success or failure at School or College supplies no standards by which the promise of the future may be estimated. Originality of thought, or achievement is not measurable by the same units as those of absorbing power of a prescribed *Pabulum* usualy tested by a written examination. To be able to reproduce the words of others or to shuffle mathematical symbols rapidly may be creditable but it is not to be compared with the power of orginating ideas or devising new solutions to problems. A student may possess many examination certificates and yet be only a kind of *Text-Book Gramophone*.

"Unless he also acquires the desire to see and do things independently he knows nothing of the scientific spirit which yearns for new knowledge gained by new inquiry."

கூழாங் கற்களை வைரமாக்கும் கல்வி முறை வேண்டும்—வைரத்தில் எண்ணெய் இறங்கிட வைத்திடும் கல்வி முறை கூடாது. ''வைரமாக்குகின்றீர் எம்மை! ஏழையின் வீட்டில் வைரத்திற்கு மதிப்பு ஏது? சீமாட்டியின் மூக்குத்தி போலி வைரமாயினும் கோகினூர் என்பர்! குப்பை மேட்டில் வைரத்திற்குக் கௌரவம் உண்டோ?'' எனக் கேட்டுப் பட்டை தீட்டப்பட்ட வைரமெனப் பட்டம் பெற்ற நீவிர்; வேலை எங்கே பணம் தேடிட எனக் குமுறுவது யாருக்கும் தெரியாமல் இல்லை. படிப்பின் இலட்சிய நோக்கு வேலை ஒன்று தான் எனக் கூறிட இயலாதாயினும் வேலை வாய்ப்பு அளித்திடும் திட்டத்தையும் விரைவுபடுத்தி விரிவுபடுத்தினால்தான் நாடு வறுமைக் காடாகும் நிலையிலிருந்து விடுபடும் என்பதை உணர்ந்தே செயல்பட வேண்டும்.

பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடித் தருவதற்குப் பல்கலைக் கழகத்தில் வேலை தேடித்தரும் தனிப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியம் என்று இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. நம் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் இத்தகைய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பிரிவினால் உருப்படியான நன்மை ஏற்பட வேண்டுமென்றால், பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களிலுள்ள வேலைகளுக்குத் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுக்கும் போது, இப்பிரிவின் தொண்டினைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.



பட்டம் பெற அணி வகுத்து வரும் மாணவ மணிகள்

கிடைக்கும் வாய்ப்பை மட்டும் எதிர் பார்த்துக்கொண்டிராமல் தாங்களே சொந்த மாகத் தொழில் முயற்சிகளைத் தொடங்கிடல் வேண்டும். அவ்வாறு தொழில் மேற் கொள்ள வரும் படித்தவர்களுக்குப் பண உதவி அளிப்பதற்கு இப்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் முன் வந்துள்ளன.

வேளாண்மைத் துறையில் பட்டம் பெற்ற வர்கள் கூடச் சொந்தத்தில் வேளாண்மைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்குதல் ஏனோ? இவர்கள் பயிற்சியும் படிப்பும் நாட்டுக்குப் பயனுள்ளவையாக அமைந்திட வேண்டுமென்றால், அவர்கள் வேளாண்மையில் ஈடுபட முன்வரவேண்டும். அது போலவே பொறியியல் பயிற்சியில் பட்டம் பெற்றவர்களும் கிராமங்களுக்குச் சென்று, சிறு சிறு தொழிற் கூடங்களும் பட்டறை களும் அமைத்துக் கொள்வது, அவர்களுக்கும் நல்லது; சமுதாயத்திற்கும் பெரும் உதவியா யிருக்கும். நம் வளர்ச்சித் திட்டங்களை யொட்டி, கிராமங்களில் பல்லாயிரக் கணக் கான நீர் இறைவை இயந்திரங்களும், பூச்சி மருந்து தெளிப்பான்களும், இதர முற்போக்கு வேளாண்மைக் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளன. இவற்றில் பல, இன்று பழுதாகியுள்ளதை நாம் காண்கிறோம். இந்த இயந்திர சாதனங்களுக்குத் தேவைப் படும் பழுதுபார்க்கும் வேலையைச் செய் வதற்கு உள்ளூரிலேயே திறமையுள்ளவர்கள் கிடைக்காத காரணத்தினால், இக்கருவிகள் பல, இயங்காமல் முடங்கிக் கிடக்கின்றன. இந்தக் குறையினைப் போக்கிட வேண்டு மென்றால், பொறியியல் பயிற்சி பெற்ற மாணவர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று கிராமத்திலேயே தொழிற் கூடங்கள் அமைத்து, அங்குள்ள வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்த்துச் செம்மையாக அவை இயங்குவதற்கு உதவி செய்திட முன் வரவேண்டும்.

மேனாடுகளில் தனியார் தொழில்களில் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அத்தொழில் நிறுவனங்கள் கல்லூரிகளுடன் தொடர்பு கொண்டு, சிறந்த மாணவர்களைத் தேர்ந் தெடுத்து, அவர்கள் கல்லூரியிலிருந்து தேர்வு பெறுவதற்கு முன்பாகவே அவர் களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க முன் வருகின்றன. அத்தகைய நிலை நம் நாட்டில் உருவாவதற்கு இன்னும் பல ஆண்டு கள் செல்லக்கூடுமென்ற போதிலும், இதில் உடனடியாக ஒரு தொடக்கம் காண்பது அவசியமாகிறது. பல்கலைக் கழகங்கள் வேலை தேடித்தரும் பிரிவை அமைக்கும்போது தனியார் தொழில் நிறுவனங்களின் அதிபர் களைக்கொண்டு ஆலோசனைக் குழு ஒன்றினை அமைத்தல் நலம். தென் பகுதியிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஒன்று சேர்ந்து பொதுவான ஒரு குழுவினை அமைப் பது நல்ல பலன் தரும். தனியார் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தேர்ச்சி யுடைய மாணவர்களைத் தயார் செய்யும் வகையினில் பல்கலைக் கழகங்கள் தம்முடைய பாடத் திட்டங்களையும் பயிற்சி முறைகளையும் திருத்தியமைத்துக்கொள்வது அவசியம்.

ஐந்தாண்டுத் திட்டப் பணிகளையொட்டி, வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன. இருந்த போதிலும் படித்தவர்கள் அனைவருக் கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நிலையினை நாம் உடனடியாக எய்திட முடியாது. இன்னும் ஒரு சில ஆண்டுகளாகிலும் படித்தவர்கள் அனைவரும், அரசாங்க அமைப்புகளிலோ தனியார் தொழில் நிறுவனங்களிலோ, வேலை

இப்போது அறிவியல் படிப்பில் மாண வர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கது. ஆயினும், அறி வியல் படித்த மாணவர்கள், வரலாறு, கலை யியல் ஆகியவற்றைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரு நிலையையும், கலையியல் மாணவர்கள் அறிவியல் ஆர்வமோ ஆற்றலோ ஒரு சிறிதும் இல்லாத ஒரு நிலையையும், நாம் காண்கின்றோம். மாணவர்கள் முழுமை யான ஆற்றல் பெற்றிட இந்நிலை உகந்தது அல்ல. பள்ளிப் படிப்பு வரை, அறிவியல், கலையியல் எல்லாப் பாடங்களையும், பொது வாகக் கற்றுவரும் மாணவர்கள், கல்லூரி யில் புகுமுக வகுப்பு நிலைக்கு வந்தவுடன், கலையியல் பாடப் பயிற்சியையோ, அறிவியல் பாடப் பயிற்சியையோ தேர்ந்தெடுத்து, இரு தனிப் பிரிவுகளாகிச் சென்று விடுகின்றனர். கல்லூரி மட்டத்தில் கலையியல் பாடத்தை அவர்கள் படிக்கும்போது அறிவியல் அனுபவம்

பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு எதுவுமே இல்லாமல் போய் விடுகிறது. அது போலவே அறிவியல் பயிற்சியைத் தேர்ந் தெடுப்பவர்கள், கலையியல், வரலாறு, பொருளியல், ஆகிய பாடங்களோடு சிறிதும் தொடர்பில்லாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்த நிலையினைப் போக்கிட, அறிவியல் பாடங்களில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுபவர் களும், கலையியல், வரலாறு, பொருளியல், போன்ற பாடங்களில் ஒன்றினைக் கட்டாய மாகக் கல்லூரிப் பயிற்சிக் காலம் முழுவதும் படிக்கவேண்டுமென்று விதிப்பதும், வரலாறு, கலையியல் போன்ற பாடங்களைத் தேர்ந் தெடுத்தவர்கள், இயல்பியல், வேதியியல், உயிரியல், போன்ற அறிவியல் பாடங்களில் ஒன்றினைக் கற்றிடவேண்டுமென்று விதிப் பதும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.



ஒரு மாணவர் ஆளுநரிடம் பட்டம் பெறுகிருர்

இது பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தி லேயே முற்றிலும் புதிய ஒரு மாறுதல் என்று சிலர் தயங்கலாம். ஆனால் நம் முடைய மாணவர்கள் ஒரு சீரான அறிவைப் பெற்று, எல்லாத் துறைகளிலும் ஓரளவு ஈடு பாடு கொண்டு, அதனை அடிப்படையாக வைத்துச் சில சிறப்புப் பாடங்களில் நுட்பத் தேர்ச்சி பெற வேண்டுமென்றால், இந்தச் சீர்திருத்தம் இன்றியமையாதது என்பது என்னுடைய திடமான எண்ணம். அறிவியல், கலையியல் இரண்டு துறைகளிலுமே இணைந்த அறிவு, மாணவர்களுக்கு இன்றி யமையாததாகிறது. அந்த இரண்டு அறிவு களையும் இணைத்து நாம் வழங்கத் தவறு வதால் தான், மாணவர்களிடையே தேர்ச்சிக் குறைவும், வேலை வாய்ப்புகள் பெறுவதில் சிரமங்களும் ஏற்படுகின்றன. கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட வல்லுநர், நான் கூறியுள்ள இக்கருத்தைப் புதிய கருத்து என்ற காரணத்திற்காகவே புறக்கணித்து விடாமல் அறிவியல், கலையியல் ஆகிய இரண்டு துறைகளிலும் மாணவர்களுக்கு முழுமையாகப் பயிற்சி அளிப்பதற்கு இப்போ துள்ள பாடத் திட்டங்களில் மாறுதல்கள் செய்திட முன்வர வேண்டும் என்று பணி வுடன் வேண்டுகின்றேன்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடு களிலே படித்த இளைஞர்கள் சமுதாயப் பணியில் ஈடுபடுவதற்காக, அமைதிப்படை இயக்கம், தொண்டர்படை இயக்கம் போன்ற இயக்கங்கள் இயங்கி வருகின்றன. இது போலவே நம் நாட்டு இளைஞர்கள் சமு தாய உயர்வுப் பணியினில் ஈடுபடத் திட்டங் களைத் தீட்டுவது அவசியமாகிறது. பட்டம் பெற்ற அனைவரும் ஓராண்டாகிலும் சமூகத் தொண்டினில் ஈடுபடுவதைக் கட்டாயமாக்க வேண்டுமென்று சிலர் ஆலோசனை கூறி யுள்ளார்கள். தொண்டினைக் கட்டாயப் படுத்திச் செயல் படுத்திட முடியாது. அதே சமயத்தில், மாணவர்கள் கிராமங் களுக்குச் சென்று சேவை செய்யவேண்டு மென்று மேடையில் முழங்குவதாலும், அறி வுரைகள் கூறி, அறைகூவல் விடுவதாலும் மட்டுமே, நாம் எதையும் சாதித்துவிட முடியாது. உண்மையிலேயே உருப்படி யான பலன் ஏற்பட வேண்டுமென்றால் மாணவர்களைத் தொண்டில் ஈர்த்துத், தாமாகவே விரும்பி முன்வந்து இந்த சேவைத் திட்டங்களில் பங்கு கொள்வதற்குச் சாதகமான சூழ்நிலையினை நாம் உருவாக்கித் தரவேண்டும். அதற்காக அவர்களுக்குப் பண உதவிகளும் சலுகைகளும் அளிக்க வேண்டும்.

இதை மனத்திற் கொண்டுதான் தமிழ் நாட்டில் 2,000 படித்த இளைஞர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று தொண்டு செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு இந்த ஆண்டு கொண்டுவந்துள்ளது. இலட்சியத் துடிப்பும், ஆர்வமும், ஆற்றலும் கொண்ட இளைஞர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விழை கிறேன்.

வேலை வாய்ப்புகள்—அதன் வாயிலாக வருவாய்—இவை யெல்லாம் இளந் தலை முறையை இயந்திரமாகச் செய்துவிடல் கூடாது. தானுண்டு தன் பெண்டு பிள்ளை யுண்டு என ஒவ்வொரு இளைஞனும் மாதந் தோறும் ஊதியக் கணக்கு வரவு-செலவுகளை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தால் நாட்டின் பொதுவான முன்னேற்றம் தடைபட்டுப் போய்விடும். அந்த முன்னேற்றம் முகிழ்க்க முனைந்துநிற்கவேண்டியது இளைஞர் பேரணியே யாகும்.


இளைஞர்கள்தான் முற்போக்கு எண்ணங் களின் முன்னோடிகள். இளைஞர்களின் அமைதியின்மை—இந்தியப் பிரச்சினை அல்ல; அனைத்துலகப் பிரச்சினை! ஒவ்வொரு பழைய தலைமுறையும், புதிய தலைமுறையைப்

பழித்தே பழக்கப்பட்டிருக்கிறது. பிளேட்டோ காலத்திலிருந்து இப்படித்தான்; இன்று நேற்றல்ல!

''இந்தத் தலைமுறை முன்புபோல் இல்லை;
தரம் குறைந்து விட்டது.''

இது நமது பாட்டனார் காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்படும் குறை! குடுமித் தலையில் மாற்றம் ஏற்பட்ட போதும் குமுறல்—இப்போது உடலைப் பிடிக்கும் உடைகளைக் காணும்போதும் குமுறல்—நடையுடைகளில் ஏற்படும் மாற்றங்களல்ல; மனத்தில் ஏற்படும் மாற்றங்கள்தான் சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் புதிய கோணங்களை ஏற்படுத்த வல்லவை! ஒரு தலைமுறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் வேறுபாடு இருப்பது தவறில்லை. ஆனால், இடையில் ஆக்க பூர்வமான வளர்ச்சி தழைத்திடல் தேவை. பிளேட்டோ காலத்தில் சில நூறு மாணவர்கள் இருந்தார்கள்; ஆனால் இன்று அமெரிக்க நாட்டின் மக்கட் தொகையில் பாதிப் பேர் மாணவர்கள்.

இந்தியாவில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கும் மாணவர்களின் தொகை, பிரான்சு நாட்டு மக்கள் தொகைக்குச் சமம். மாணவர்களில் ஒருசிலரது உள்ளத்தில் தீவிரவாதம் பொங்கியெழுந்து வழிந்தோடுகிறது. நான் தீவிர வாதத்தின் பகைவனல்ல. முகத்திலே இருக்கும் பருக்கள் அழகைக் கெடுக்கின்றன. உண்மை தான். அதற்கு அடிப்படைக் காரணமுணர்ந்து மருந்திடல்தான் முறையே தவிரச் சந்திர பிம்பமெனும் வதனத்தை விகாரமாக்கும் பருக்களைக் கிள்ளி எறிகிறேன் என நகங் கொண்டு பெயர்த்தெறிந்தால் ரத்தம் கொப்பளிக்கும். தழும்புகள் தோன்றும். சில வேளைகளில் புண்பட்டுப் புரையோடி உயிருக்கே உலை வைக்கும். குறு மருக்களை அகற்றும் கொள்கையில் வேறுபாடில்லை. முறையில் தானே முரண்பாடு! இலட்சியத்தைப் போலவே இலட்சியத்தை அடையும் வழிமுறைகளும் நன் முறைகளாக இருத்தல் வேண்டும்.



டாக்டர் கலைஞரும் தமிழக ஆளுநரும்

பல்கலைக் கழகத்திற்கு வரும் பாதையிலே பால் வடியும் முகத்தினன்—மாணவன் ராஜேந்திரன் சிலையாக நின்றுகொண்டிருக்கிறான். தன்னை வளர்த்த மொழியைக் காக்க அவன் தன்னுயிரைத் தாரை வார்த்தான். இலட்சியம் ஈடேறப் பிறரை வருத்தல்—பிறரை அழித்தல்—முறையல்ல! கூடாது! கூடவே கூடாது!

''கொலைவாளினை
எடடா; மிகு
கொடியோர்
செயல் அறவே!''

என்றார் பாரதிதாசன். கவிதையை உற்றுக் கவனியுங்கள்! கொடியோர் செயல் அறவே; கொலைவாளினை எடடா என்றாரே தவிர; கொடியோர் தலை அறவே கொலைவாளினை எடடா எனக் கூறினார் இல்லை! சிலர் செயல் அறத்தான் அந்தச் சிங்கநாதம் செய்தார்.

அந்தச் சிங்கக் கூட்டத்தைத் தான் என் எதிரே காணுகின்றேன். இறும்பூதெய்துகின்றேன்.

கருமுகில் கண்டு திருமயில் ஆடுமென்பர்.

கதிரொளி கண்டு தாமரை மலருமென்பர்.

என் நிலையும் அதுதான்!

உமது விழியொளி கண்டு மகிழ்கின்றேன்—விடை பெற முடியாது பிரிகின்றேன்.

வணக்கம்.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்' தொலை பேசி எண் : 20367

தபால் பெட்டி எண் : 226

| | (வருடத்திற்கு சதவீதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் | 0·50 |
| சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட் | 4·00 |
| சீசன் டெபாஸிட்டுகள்—ரூ. 1000ம் அதற்கு மேலும். | |
| 15 நாட்கள் | 2·00 |
| 46 நாட்கள் | 3·00 |
| பிக்செட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும் | |
| 91 நாட்கள் | 4·75 |
| 6 மாதங்கள் | 5·25 |
| 12 மாதங்கள் | 6·25 |
| 2 வருடங்கள் | 6·75 |
| 3 வருடங்கள் | 7·25 |
| 5 வருடங்கள் | 7·50 |

குறைந்த பட்சகால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களில் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டிவிகிதத்தை விட ½ சதவீதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் : தவணைகளுக்குப் பெறும் மொத்தப்பணம்.

| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும். ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.




# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:** விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:** இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ** வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.





**தார்ப்பொருள்கள்:** பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலெண்ட் ஃபினல் கலவை.

**நெகோலின்:** சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—1**

FDSNLC946TM

பிராட்வே என்று பெயர் அமைந்திருந்தபோதும் பெயருக்குப் பொருத்தமில்லாதவாறு குறுகலாக அமைந்திருக்கும் சாலை-அங்கே லோன் சதுக்கம் என்று சொல்லப்படும் சிறிய பூங்கா-அருகே சென்னை நகருக்கே தனித்தன்மையை உருவாக்கிக் கொடுக்கும் புகழ் பெற்ற கொத்தவால் சாவடி-அங்கிருந்து கணந்தோறும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் தனியார் சரக்கு ஊர்திகளின் பேரிரைச்சல்-தங்கசாலை, திருவொற்றியூர் நோக்கிச் செல்கின்ற-தியாகராய நகர், விவேகானந்தர் இல்லம், நீதி மன்றம் நோக்கி வருகின்ற அரசுப் பேருந்துகளின் ஓட்டம்— இன்னும் இது போன்ற பல பரபரப்பான சூழ்நிலைகளுக்கு இடையிலே தான் கரிகால் மன்னனின் கடமையிலே வளம் பெற்ற காவிரி நதியைப் போலக் காட்சி தந்து கொண்டிருக்கும் 'காவேரி' சிறப்பு அங்காடி, வட சென்னையிலே வாழ்கின்ற மக்களுக்கு வளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

1969-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் துவக்கப்பட்ட இந்தச் சிறப்பு அங்காடிக்குக் 'காவேரி' என்ற அழகுப் பெயரை-வரலாற்றுப் பெயரை அன்புடன் சூட்டியவர் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் ஆவார்கள்.

இந்த அங்காடி துவக்கப்பட்ட புதிதில் பலசரக்கு மட்டும் தான் விற்பனை செய்யப்பட்டதாம். அப்போது பொதுமக்கள் மிகுந்த அளவில் வரவில்லையாம். அங்காடியைப் பார்க்கும் அநேகரில் ஒரு சிலர்தான் துணிவுடன் உள்ளே நுழைவார்களாம். அவர்களிலும் ஒரு சிலர்தான் பலசரக்குப் பொருள்களை வாங்கிச் செல்வார்களாம். மிகப் பலர் சிறப்பு அங்காடியைக் கண்காட்சியாகக் கருதிச் சென்று விடுவார்களாம். ஆனால் இன்று வட சென்னை வாழ் மக்களுக்கு இந்தச் சிறப்பு அங்காடி ஜீவநதியாக விளங்குகிறது.




எழுத்தர்கள், விற்பனை உதவியாளர்கள், மற்றும் பலவித அலுவல் புரிவோர் அனைவரையும் சேர்த்து மொத்தம் 150 பேர்கள் பணிபுரியும் இந்தச் சிறப்பு அங்காடியில் பலசரக்குகள், அழகுச் சாதனங்கள், கைத்தறி ஆடைகள், மில் துணிகள், மருந்துகள், குழந்தைகளுக்குரிய பாலுணவு வகைகள், மின்சாரச் சாதனங்கள், காலணிகள், கண்ணாடிப் பொருள்கள், மரச் சாமான்கள், விளையாட்டுப் பொம்மைகள், காய்கறிகள் போன்ற பலவகைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.


ஜவுளி வகைகள் சென்னை மாநில நுகர்வோர் கழகத்தின் (Madras State Consumers Federation) வாயிலாகவும், பருப்பு வகைகள் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கழகத்தின் (National Co-oprative Consumer's Federation) வாயிலாகவும், அரிசி வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கழகத்தின் (Tamil Nadu Consumer's Federation) வாயிலாகவும் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஏனைய பொருள்கள் டெண்டர் விடப்படுகின்றன. காய்கறி வகைகள் வெளிச் சந்தையில் கொள்முதல் செய்யப்படுகின்றன.


இங்கே விற்பனை செய்யப்படும் அழகு சாதனப் பொருள் ஒவ்வொன்றின் விலையும் வெளிச்சந்தையின் விலையை விட 5 பைசாவாவது குறைவாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனைக் கழகத்திற்கு அரசு கொடுத்துள்ள 17 இலட்ச ரூபாயை மூலதனமாக வைத்துத் துவக்கப்பட்டது தான் இந்தக் **'காவேரி'**. இந்த இரண்டாண்டுக் காலத்தில் இந்த அங்காடியில் பத்து ரூபாய் பங்குத் தொகை செலுத்திய உறுப்பினர்கள் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதத்திற்குச் சராசரி 6 இலட்சத்திலிருந்து 8 இலட்சம் ரூபாய் வரையிலும் இந்த அங்காடியில் விற்பனை நடைபெறுகிறது. கடந்த தீபாவளியின் போது மட்டும் பத்து இலட்சத்திற்கு விற்பனை நடைபெற்றிருக்கிறது. பட்டாசு மட்டும் 60 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கிறது.







பொதுவாக, மாதத்தின் முதல் வாரத்தில் இங்கே விற்பனை அதிக அளவில் நடைபெறுகிறது. அதிலும் சனிக்கிழமைகளில் இங்கே பொருள்கள் வாங்க வருகின்ற மக்கள் கூட்டம் கணக்கிலடங்காது. சில சமயங்களில் அலுவல் நேரத்தைக் கடந்து சுமார் ஒரு மணி நேரம் விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது.

''எங்கள் 'காவேரி'யைத் தேடி வருவோர், பொருள்கள் வாங்க முடியாமல் ஏமாற்றமடைந்து திரும்பக் கூடாதே'' என்ற நல்லெண்ணத்தால்தான் அதிக நேரமாவதைப் பொருட்படுத்தாமல் எங்கள் ஊழியர்கள் பணி புரிகிறார்கள்''-என்கிறார் பொது மேலாளர் திரு ஆர். சேஷாத்திரி.


பொதுமக்கள், தங்களுக்குத் தேவையான பல சரக்குப் பொருட்களைத் தாங்களே தெரிந்து எடுத்துக் கொள்ளும் ( Self Service ) முறை இங்கே குறிப்பிடத்தக்கது. இந்த (Self service) முறை பொது மக்களைக் கவர்ந்திருக்கிறது என்பது, நாள்தோறும் இங்கு குடும்பத்துடன் வந்து இந்த முறையில் ஈடுபடும் ஏராளமானவர்களின் உற்சாகத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. சிறுவர் சிறுமியர்கள் கூட இந்த முறையைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

சென்னை நகரத்துக்கே பெரிய வாணிபச் சந்தையாகக் கருதப்படும் கொத்தவால் சாவடி அருகில் இருக்கிறது. அங்கேயும் பொதுமக்கள் செல்கிறார்கள்; இந்தக் 'காவேரி'யையும் நாடிவருகிறார்கள். கொத்தவால் சாவடி போன்ற பெரிய சந்தையில் விலைகள் ஒவ்வொரு நாளும் வேறுபடலாம். ஒரு நாள் குறையலாம். மறுநாள் அதிகமாகலாம். பொதுமக்களின் தேவையை அறிந்து விலைகள் நிர்ணயிக்கப்படலாம்; சூழ்நிலையை உணர்ந்து, விலைகளில் ஏற்ற இறக்கங்கள் தென்படலாம். ஆனால் 'காவேரி'யில் அம்மாதிரிச் செய்ய முடியாது. கொள்முதல் விலையைக் கொண்டு அதிக இலாபம் கருதாத அளவில் ஒரு விலையை நிர்ணயித்து விட்டால், பின்பு அதிகப்படுத்தவும் முடியாது—குறைக்கவும் முடியாது. நிமிடத்துக்கு நிமிடம்

விலையேற்றமும் விலை இறக்கமும் நடைபெறுகின்ற வெளிச் சந்தையைப் போலக் 'காவேரி' இயங்க முடியாது. அப்படி இருந்த போதிலும் இங்கே அதிகமான விற்பனை நடைபெறுகிறது என அறியும்போது, பொது மக்களின் இதயத்தில் 'காவேரி' நன்னம்பிக்கை பெற்றிருக்கிறது என்பது உறுதியாகிறது.

'' எங்களுக்கு அதிக இலாபம் தேவையில்லை. 'காவேரிக்குச்' சென்றால் தரமான பொருள்கள் கிடைக்கும் என்று பொது மக்கள் கருதி வருகிறார்களே—அந்த ஒரே பெருமை எங்களுக்குப் போதுமானது ''—என்று கூறும் சிறப்பு அலுவலர் திரு மா. கனக சபை அவர்களின் சொற்களை நாம் ஆமோதிக்காமல் இருக்க முடியாது.

இந்தக் 'காவேரி' யின் உறுப்பினர்கள் உண்மையிலேயே பயன் பெறத்தான் செய்கிறார்கள். பத்து ரூபாயைப் பங்குத் தொகையாகச் செலுத்திய ஓர் உறுப்பினருக்கு, அவர் வாங்கும் பொருள்களின் விலையில் இரண்டு சதவீதம் தள்ளுபடி கொடுக்கப் படுகிறது. வெளிச் சந்தைகளில் எளிதாகக் கிடைக்காத பொருள்களும்—உண்மையான விலையை விட அதிக விலையில் விற்கப்படும் பொருள்களும் இங்கே எளிதில் கிடைக்கின்றன.



ரகம் ரகமாக அரிசி !

சில நேரங்களில் வெளிச்சந்தையில் வாணிபம் புரிவோர்கூட இங்கே வந்து சில பொருள்களை வாங்கிச் செல்கிறார்களாம். சில நாட்கள் கழித்து அந்தப் பொருள்களை அதிகமான விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்கிறார்களாம்.

''இப்படிப் பட்டவர்களுக்கு இங்கே விற்பனை கிடையாது என்று நீங்கள் சொல்லக் கூடாதா?'' —நமது கேள்வி


'' எப்படிச் சொல்ல முடியும்? வெளியிலே அவர் வியாபாரியாக இருக்கலாம். எங்கள் சிறப்பு அங்காடிக்குள் நுழைந்து விட்டால் அவர் வாடிக்கைக் காரர்களில் ஒருவர்—நுகர்வோரில் ஒருவர். அவர் கேட்கின்ற பொருளை அவருக்குத் தர முடியாது என்று நாங்கள் எப்படிக் கூற முடியும்? பொதுமக்களுக்குச் சேவை செய்யத் துவங்கியுள்ள நாங்கள், மறுப்பது நியாயமா?'' என்று கூறிவிட்டு, சிறிது இடைவெளிக்குப் பின்னர், '' நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்! பொது மக்களின் நலத்துக்காக உருவாகியுள்ள அமைப்பில் 'நம்மைப் போன்ற வியாபாரிகள் சென்று, பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மையை அபகரித்துக் கொள்ளக் கூடாது' என்ற நல்ல மனப்பான்மை வியாபாரிகளுக்குத் தோன்ற வேண்டும்'' என்று மன வருத்தத்துடன் சொல்லி முடித்தார் மேலாளர்.


'' இங்கே பொருள்களை வாங்குவதற்கு, அதிக அளவில் அரசு ஊழியர்கள் வருகிறார்களா, அல்லது சாதாரணப் பொதுமக்கள் வருகிறார்களா '' என்றொரு வினாவைச் சிறப்பு அலுவலரிடம் கேட்டோம்.

'' இங்கே அதிக அளவில் வருவது அரசு ஊழியர்கள் அல்ல—சாதாரணப் பொதுமக்கள்!'' என்றார் சிறப்பு அலுவலர். அவரது மறுமொழி நமக்கு வியப்பைத் தந்தது; அரசின் உதவியுடன் நடைபெறும் ஒரு கூட்டுறவுச் சிறப்பு அங்காடிக்கு அரசு ஊழியர்களே அதிக அளவில் வருவதில்லை என்பதை அறிந்த போது நமக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது.

வண்ண வண்ணக் கைத்தறி ஆடைகள் இங்கே விற்பனைக்கு உள்ளன. அரசு ஊழியருக்குக் கடன் வசதிகள் செய்து தரப் படுகிறது இங்கே. ரகம் ரகமான ஆலைத் துணிகளும் இங்கே உள்ளன. தயாரித்து வைக்கப்பட்டுள்ள உடனடி ஆடைகளும் (Ready Made Dresses) இங்கே விற்பனை செய்யப் படுகின்றன. தையலகமும் இங்கே இருக்கிறது. தையற் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இந்தப்பிரிவில் பணிபுரிகிறார்கள். பொது மக்களின் தேவையையும் விருப்பத்தையும் அறிந்து நவீன காலத்திற்கேற்ற முறையிலும் விரைவாகவும் ஆடைகளைத் தயாரித்துக் கொடுக்கின்றனர்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் 'இண்டேன்' காற்று உருளை ( Gas Cylinder ) இங்கே சிறந்த






**வளமான வளர்ச்சிக்கும்**

அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

மற்றும்

# ரோவிஸால் ஓரல்

**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு :**

உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் சிக்கனமாகவும் அளிக்க கனிஜங்களால் கெடாத **ரோவிமிக்ஸ்** விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால்—அதிகப்படியான விடமின்களுக்கு :**

ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிக சூடு, அதிக குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்துக்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள் :


ROCHE **ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்**
பம்பாய்-34 WB

மற்ற விவரங்களுக்கு கீழ்க் காணும் ஏக வினியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள் :

VOLTAS **வால்டாஸ் லிமிடெட்**

கெமிக்கல்ஸ் டிவிஷன், த. பெ. 7803, பம்பாய் 33-DD

த. பெ. 125, பெங்களூர் 1 • த. பெ. 385, புது டில்லி 1
த. பெ. 1898, சென்னை 1 • த. பெ. 34, கொச்சி 3
த. பெ. 606, கல்கத்தா 1 • த. பெ. 35, கான்பூர் 1
த. பெ. 90, சிகந்தராபாத் 3


VT-6021

முறையில் விற்பனை செய்யப்படுகிறது. பல வகைக் காற்றடுப்புகளும் இங்கே உள்ளன. ஓர் உருளைக்கு மூன்று ரூபாய் இலாபம் கிடைக்கிறதாம். ஏறக் குறைய 3,000 வாடிக்கைக்காரர்கள் உள்ளனர்; இந்தக் காற்று உருளைகளைத் தனது சொந்தச் செலவிலேயே வாடிக்கைக்காரர்களுக்கு அனுப்பி வைக்கிறது 'காவேரி.' மண்ணெண்ணெய் அடுப்பைவிட, இந்தக் காற்றடுப்பு, பலவகையிலும் வசதியாக இருக்கிறதாம். சுமார் மூன்று மணி நேரம் எண்ணெய் அடுப்பில் செய்யப்படும் சமையல் பணி, இந்தக் காற்று அடுப்பின் உதவியினால் $1\frac{1}{2}$ மணி நேரத்தில் முடிவடைந்து விடுகிறது.



தமிழகத்தில் எந்தச் சிறப்பு அங்காடியிலும் இல்லாத ஒரு புதுமை—பெருமை இந்தக் 'காவேரி'யில் உண்டு. நாள்தோறும் பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரை இங்கே ஒரு டாக்டர் உண்டு! இங்கே வரும் வாடிக்கையாளர்களுக்கு இந்த டாக்டர் இலவச மருத்துவ ஆலோசனைகளைத் தருகிறார். வாடிக்கையாளர்கள், தங்களுக்குரிய ஊசி மருந்துகளை வாங்கிக் கொண்டு வந்து தந்தால், கட்டணம் இல்லாமல் ஊசி போட்டனுப்புகிறார் இந்த டாக்டர். 'காவேரி'யில் கிடைக்கும் இந்த அரிய தொண்டின் காரணமாக இங்கே பொதுமக்கள் விருப்பமுடன் வருகிறார்கள். வாணிபமும் வளர்ச்சியுறுகிறது.

இங்கே, மருந்துப் பொருள்களும் நிறைய இருக்கின்றன. பொதுவாக வெளிச் சந்தையில் பல கடைகள் ஏறி இறங்கினால் கூடக் கிடைக்காத உயர்தர மருந்துகள் எல்லாம் இங்கே, வாடிக்கையாளர்களுக்காக வரவழைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

அண்மையில் குமிடிப்பூண்டியில் செயல்படத் துவங்கியிருக்கும் நடமாடும் மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவக் கருவிகளில் பெரும்பான்மையானவை இந்தக் 'காவேரியின்' வாயிலாகவே வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பொருள்களின் மதிப்பு சுமார் 50 ஆயிரம் ரூபாய் இருக்கும்.

ஏற்கனவே, குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்களை விற்பனை செய்து வந்த இந்தக் காவேரி, இந்த ஆண்டு முதல், அரசினர் வெளியிட்டுள்ள பாடப் புத்தகங்களை விற்பனை செய்யத் தொடங்கியிருக்கிறது.

நவீன நகைகள்—என்று சொல்லப்படும் தங்கமுலாம் பூசிய நகைகள் தமிழ்நாட்டிலேயே இந்தச் சிறப்பு அங்காடியில் தான் விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலையில் நல்ல தரத்தில் உள்ள-முலாம் பூசப்பட்ட இந்த அணிகள், பொன்னணி கூடத் தோற்றுப் போகும் அளவுக்கு-உன்னத வேலைப்பாடு கொண்டு மிளிர்கின்றன. அமர் நிறுவனத்தின் தயாரிப்பு இந்த நகைகள்.

ஏற்கனவே, வேப்பேரி, தியாகராயநகர் ஆகிய பகுதிகளில் இந்தக் காவேரியின் கிளைகள், 'மினி காவேரி' (Mini Cauvery) என்ற பெயரில் இயங்கி வருகின்றன. விரைவில் மயிலையிலும் ஒரு புதிய கிளை திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; அந்தக் கிளையில் மேலாளரைத் தவிர, மீதி எல்லா ஊழியர்களும் பெண்களாகவே இருக்கலாம் என்றும் ஒரு திட்டம் உள்ளதாம்.

''இந்த இரண்டாண்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தி ஏதாவது உண்டா?'' என்று கேட்டோம்.

உடனே, மேலாளர் ஒரு சில விநாடிகள் ஆலோசித்துப் பார்த்தார்; மறுகணம்.... ''ஆங்! நினைவு வருகிறது....'' என்று பேச்சைத் தொடர்ந்தார்:

''காவேரி துவக்கப்பட்ட காலத்தில் 25 ரூபாய்க்கு மேல் இங்கே வாங்குபவர்களுக்கு வெகுமதிக் கூப்பன் தந்தோம். அவற்றைக் குலுக்கி எடுத்தோம்; மைய அரசின் தொலைபேசித் துறையின் சென்னை அலுவலகத்தில் பணிபுரியும் ஓர் ஊழியருக்கு முதற் பரிசாகிய வைர மோதிரம் கிடைத்தது. அந்த மோதிரத்தின் விலை சுமார் ஆயிரம் ரூபாய் இருக்கும்.

ஏறக்குறைய 50 பரிசுகள் வைத்திருந்தோம். ஆண்டு விழாவின் போது அந்தப் பரிசுகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் விநி

யோகம் செய்தார்கள். ஆந்திர மாநிலம், ராஜஸ்தானம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிலரும் பரிசு பெற்றவர்கள் பட்டியலில் இருந்தனர். பரிசுகளை வாங்கிச் செல்வதற்கு அவர்கள் நேரில் வராததால், பரிசுப் பொருள்களை அவர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டோம்''—மேலாளர் சொன்னார்.

'' ஆமாம்! பிற மாநிலத்தவர்க்கு இங்கே எப்படிப் பரிசு கிடைத்தது ?'' என்று கேட்டோம்.

'' அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது, எங்கள் 'காவேரிக்கும்' வருகை புரிந்திருக்கிறார்கள். 25 ரூபாய்க்கு மேல் சரக்குகள் வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வெகுமதிக் கூப்பன் தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் நல்வாய்ப்பு இருந்திருக்கிறது-பரிசு கிடைத்திருக்கிறது.'' —மேலாளர் விளக்கம் சொன்னார்.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2


பரிசுச்சீட்டில் மட்டுமல்ல-சாதாரண வெகுமதிச் சீட்டிலும், தமிழ்நாடு பிற மாநிலங்களுக்குப் பரிசு தருகிறது என்ற செய்தி நமக்கு மகிழ்வைத் தருகிறது.


இவ்வளவு சேவை செய்தும் கூட இந்தக் 'காவேரிக்கு' ஒரு மனக்குறை இருக்கத்தான் செய்கிறது.

மிகவும் நெருக்கடியான பகுதியில் இந்த அங்காடி அமைந்திருப்பதால் நிறையப்பேர் வருவதற்குரிய வாய்ப்புக் குறைந்திருக்கிறது. அது மட்டுமல்ல; 'காவேரியை' நாடி நாள்தோறும் சொந்த உந்துகளிலும் ஊர்திகளிலும் வரும் செல்வந்தர்கள், ஊர்திகளை நிறுத்துவதற்குத் தகுந்த வசதிகள் இல்லாதது ஒரு பெருங்குறை. இந்த வசதி மட்டும் கிடைத்துவிட்டால், பிறருக்கு வளம் தரும் ''காவேரி'', தானும் மிகுந்த வளம் பெற்றுத் திகழ்வாள் என்பதில் ஐயமில்லை.


காலக் கண்ணாடி

[illegible] கம்பீரமாக நிற்கின்றன, [illegible] கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற வடுக்களை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

# செய்திகள்

## ஒற்றைத் தலைவலிக்கு மின்விசைத் தூக்கம்.

ஒற்றைத் தலைவலி காரண மாகவும், களைப்புக் காரணமாக வும் தொல்லைப்படுவோர் பலர் இருக்கின்றனர். இவ்விரு நோய்களையும் வருங்காலத்தில் இலேசான மின் அதிர்ச்சிகளால் தூண்டப்படும் அயர்ந்த தூக்கத் தின் மூலம் குணப்படுத்த முடியும் என்று ருமானிய மருத்துவர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய இரு நோய்களா லும் அவதிப்பட்டவர்களில் சுமார் 300 பேருக்கு மின் அதிர்ச்சிகளால் சிகிச்சையளித்த தில் பாதிப் பேருக்குமேல் குண மடைந்திருக்கிறார்களாம்.

## கணவர்க்கான கருத்தடை மாத்திரை.

கருத்தடைக்கான பல்வேறு சாதனங்களில் மாத்திரைகள் உட்கொள்வதும் ஒன்று. இன்று பலவகையான கருத்தடை மாத் திரைகள் கடைகளில் விற்பனை யாகின்றன. எனினும் இந்த மாத்திரைகள் அனைத்தும் பெண்களுக்காகவே உள்ளன.

தற்போது ஆண்களும் உட் கொள்ளக்கூடிய ஒருவகைக் கருத்தடை மாத்திரை பிரிட்ட னில் தயாரிக்கப்பட்டுள்ளது. இலண்டனில் உள்ள பார்த்தோ லோமியோ மருத்துவக் கல் லூரியைச் சேர்ந்த டாக்டர் டென்னிஸ் லெவி என்பார் இதனைக் கண்டு பிடித் துள்ளார்.

இந்தக் கருத்தடை மாத்தி ரையின் பிறவிளைவுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார் டாக்டர் லெவி.

எதிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமான மாகி வருகிறார்கள். கருத் தடை மாத்திரையிலும் அந்த நிலையை அவர்களுக்கு அளிக் கலாமே! பிள்ளை வேண்டாம் என்று கருதுகிறபோது கணவன் ஆறு மாதங்களுக்கும் மாறி மாறி மாத்திரை உட்கொள்ள லாம்; இந்தப் பொறுப்பையும் இருவரும் பகிர்ந்துகொண்டால் இல்லறவாழ்வு மேலும் மகிழ்ச்சி யுடனும் அமைதியுட னும் இருக்கும் என்று கூறு கிறார்.

## பார்வையற்றோருக்குக் கண்ணாடி

பார்வையற்றவர்கள் பய னடைய வேண்டுமென்பதற்காக புதுமையான மூக்குக் கண்ணாடி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அந்தக் கண்ணாடியில் ஒரு மெல்லிய கம்பியை (Wire) இணைத்துக் காதில் மாட்டிக் கொண்டால் எதிரே வரும் கார், ஆள், மிருகம், மரம், கட் டடம் ஆகியவைகளை எளிதில் பார்வையற்றவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

அந்த மூக்குக் கண்ணாடி எதிர்ப்படும் பொருளுக்குஏற்ப— அதாவது கார் வருமானால் ஒரு சத்தமும், மரம் இருந்தால் வேறு ஒரு சத்தமும் ஆக— ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ் வொரு வகையான ஒலியை ஏற்படுத்தும். அந்த ஒலி பார்வையற்றவர்களின் காதில் மெல்லிய ஒலியாகக் கேட்கும்.

அந்த மூக்குக் கண்ணாடி அணிந்துகொண்டால் எதிரே என்ன பொருள் இருக்கிறது என்பதைப் பார்வையற்றவர்கள் எளிதில் புரிந்துகொண்டு நடக்க முடியும். அந்தக் கண்ணாடியை இங்கிலாந்து நிபுணர்கள் கண்டுபிடித்து உள்ளார்கள்.

## வானவெளியில் வளர்கிறது செடி!

வானவெளி ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ரஷியா விண் வெளிக்கு அனுப்பியுள்ளது. அந்த நிலையத்தில் 3 வான வெளி வீரர்கள் தங்கியிருந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வரு கின்றனர். அவர்கள் தங்க ளுடன் எடுத்துச்சென்ற சில விதைகளை அந்த ஆராய்ச்சி நிலையத்தில் முளைக்க வைத்துள் ளார்கள். வானவெளியின் எடையற்ற தன்மையில் அந்த விதைகள் முளைத்து இலை விட்டு வளர்ந்து வருகின்றன.

கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது, அந்தச் செல்வம் காட்டிலே — பாறைக்கடியிலே — சுரங்கத்தில் இருக்கும் தங்கக் கட்டிகளாக இருக்கக் கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்தி, பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்கவேண்டும்.



# ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

## 2. நெஞ்சம் பதறுதே !

மாதவனின் வார்த்தைகள் வழங்கிய அதிர்ச்சியால் தேன்மொழியின் மனம் குலுங்கியதைப் போலவே, அவள் ஓட்டிச் சென்ற அந்த ஒயிலான சிறிய காரும் ‘கிரீச்’ என்று ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

நெஞ்சம் முழுவதுமே தீப்பிடித்து எரிகின்ற நேரம் அது; அந்தக் கொடிய உணர்ச்சிக் கொந்தளிப்பிலும் அவளால் எப்படித்தான் திருவல்லிக்கேணி—தீயணைப்புப் படை நிலையத்திற்கு எதிரே சாலையோரமாக—விபத்து ஏதும் விளைந்திடாதவாறு அவ்வளவு நிதானமாகக் காரை நிறுத்த முடிந்தது என்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கையாகும்.

‘‘ ஏன் நிறுத்திட்டீங்க ? இங்கே ஏதாவது வாங்க வேணுமா ?’’

—அருகில் உள்ள ஓர் ‘ இனிப்புப் பண்டக் கடையை ’ எண்ணிய வண்ணமே கேட்டான் மாதவன்.

தேன்மொழிக்கோ திரும்பிப் பார்த்து விடை பகரக்கூட முடியாத அளவுக்குத் தென்பே இல்லாத சோர்ந்த நிலை; தான் இறுக்கிப் பற்றியிருந்த ‘ ஸ்டீயரிங் ’ (‘சுழற்றுவான்’) மீதே தன் நெற்றியைப் பதித்து முன்புறமாகச் சாய்ந்துவிட்டாள் அவள்.

‘‘ ஏன், தேன்மொழி? என்ன பண்ணுகிறது உடம்புக்கு ?’’—

—உரத்த குரலில் பதற்றத்துடனேயே கேட்டான் மாதவன்.

‘‘ ஒண்ணும் இல்லே, தலையைச் சுற்றிக் கொண்டு மயக்கம் வரும்போல் இருக்கிறது.’’

மிக மெலிவாக மிதந்து வந்தன அவளது சொற்கள்.

‘‘ வெறும் வயிறோடு கிளம்பி இருப்பீங்க ; இந்தக் காலை வெயிலும் பித்தத்தைத்தான் கொடுக்கும்; பசியும் பித்தமும் சேர்ந்து விட்டால் பிறகு மயக்கம் வருவதற்குக் கேட்க வேணுமா?’’

—தன்னுடைய சித்த மருத்துவ ஆராய்ச்சித் தெளிவுரைகளைச் (?) சிந்திய வாறே, மாதவன் காரை விட்டுக் கீழே இறங்கினான் ; அவள் அருகே விரைந்து சென்று,

‘‘ சரி, பின்னால் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள் நான் ஓட்டுகிறேன். ’’ —என்றான்.


தன்னால் எழுந்திருக்கவே முடியாதோ என்று கூடத் தோன்றியது தேன் மொழிக்கு. தன் பக்கத்தில் கிடக்கும் மாலைகளையும் மல்லிகைச் சரத்தையும் பின் புறம் தூக்கிப் போட்டு விட்டு முன்னிருக்கையிலேயே சற்று நகர்ந்துதான் உட்காரலாமா என்றும் அவள் எண்ணினாள்.

ஆனால், அடுத்த கணமே..

அந்த நினைவுக் கிளை அவளது மனத் தருவிலிருந்து முறிந்து விழுந்தது.

சில நிமிடங்களுக்கு முன்னர் மாதவனின் வாயிலிருந்து புறப்பட்டு வந்த கூரான ஈட்டிகளை—அவை துளைத்த துளைப்பை—அவை கொடுத்த தாங்கொணாத வலியை—அதற்குள் அவளால் மறந்து விட முடியுமா ? இந்தத் ‘ தலைச் சுற்றலே ’ அவனுடைய சொல்லம்புகளுக்குப் பிறந்த ‘தறுதலைப் பிள்ளை’ தானே ?





பல்லைக் கடித்துக் கொண்டு, காரின் கதவைத் திறந்து, மெள்ள எழுந்து நின்ற தேன்மொழிக்கு ஒரேயடியாகத் தள்ளாடிற்று ; மறு நொடியிலேயே தன் எதிரே நிற்கும் மாதவன் மீதே சரிந்து விழுந்தது அவளது கொடியுடல். அதனை ஏந்திப் பிடித்துக்கொண்ட அவன் கைப்பற்றுதலாக அவளைப் பின்னிருக்கைக்கு இட்டுச் சென்று சற்று முடங்கியவாறே படுக்க வைத்தான். அவளது காதருகே தனது முகத்தைத் தாழ்த்தி,

'' பசிக் களைப்பாக இருக்கும் போல் தெரிகிறதே ! முதலில் ஓர் ஓட்டலுக்குப் போய் ஏதாவது சாப்பிட்டு விட்டுப் பிறகு போகலாமா ?'' —என்று கேட்டான்.

'' வேண்டாம்.''

—என்று முணகினாள் தேன்மொழி.

'' ஒரு சோடாவாவது வாங்கி வரட்டுமா ? ''

'' ஊ....கூம்...... ''

மாதவன் பிறகு முன்னிருக்கைக்குச் சென்றமர்ந்து காரைக் கிளப்பினான்.

'' ஆமா, வண்டியை இப்போ எங்கே திருப்புறீங்க ? ''

—உயிரைக் கொடுத்துக் கேட்டாள் தேன்மொழி.

'' உங்கள் வீட்டிற்குத்தான்.''

'' அங்கே ஏங்க இப்போ ? முதலில் என் தோழி துளசி வீட்டுக்குப் போகணுமே ?''

'' உங்கள் உடம்பு இருக்கிற நிலையிலே நீங்கள் இன்றைக்கு எங்குமே போகக் கூடாது ; வீட்டிலே நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளணும் ; டாக்டரையும் கூட்டி வந்து காட்டணும்.''

மாதவன், அதற்குமேல் அவளது கட்டளை எதற்கும் காத்திருக்கவில்லை.

கார், சித்தார்த்தர் தெருவை நோக்கி மிக விரைவாகப் பறக்க முற்பட்டது.

முன்னிருக்கையில் கிடந்த மாலைகளும், மல்லிகைச் சரமுமே ....திருமண வயதையெல்லாம் தாண்டிவிட்ட' பேரிளம் பெண்'களைப் போல மெருகு மங்கி உலர்ந்துகொண்டிருந்தன.

* * *

' சென்னையிலே சித்தார்த்தர் தெரு ' என்று உண்மையிலேயே ஒரு தெரு இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது; ஆனால், நம்முடைய தேன்மொழி வாழும் மாபெரும் மாளிகை இருப்பது என்னவோ ' சித்தார்த்தர் தெருவில் 'தான் !

அங்கே ஓட்டைக் குடிசைகளையோ, ஒட்டிய வயிறுகளையோ அழுக்கு உடைகளையோ ஆறாய்ப் பெருகும் வேர்வைத் துளிகளையோ நாம் காணவே முடியாது. பளபளப்பான மாடிக் கட்டடங்கள்—பசுமையான பூஞ்சோலைகள், —பகட்டான ஆடைகள்—படகு போன்ற கார்கள்—இவற்றையே அங்கு நாம் பார்க்கலாம்.

' சித்தார்த்தர் எல்லாவற்றையும் துறந்தவராயிற்றே ! அவர் பெயரில் உள்ள தெருவில் வாழ்கிறவர்களுக்கு அந்தத் 'தந்நல மறுப்பு' இல்லையா ? அவர்களுக்கு அப்படியொரு சிறப்பான செல்வச் செழிப்பு எப்படித்தான் ஏற்பட்டது?' என்று சிலர் வியப்போடு வினவலாம். இதற்கு விடை அளிப்பது அப்படியொன்றும் கடினமான செயல் இல்லை. கள்ளச் சந்தை, கலப்படம், கொள்ளை இலாபம், குடி கெடுத்தல்—முதலான எல்லா வகையான இழி செயல்களும் ஒன்றாய்க் கூடித் தங்களை வாழ வைக்குமாறு அங்குள்ள ' பெரிய மனிதர்களை ' வேண்டிக்கொள்ளும்பொழுது, பாவம் அவர்களால்தான் அந்த முறையீட்டை இரக்கம் இல்லாமல் எப்படிப் புறக்கணிக்க முடியும் ? ' சித்தார்த்தர் தெரு 'விலே செல்வங் கொழித்ததற்கு இதுதான் அடிப்படைக் காரணம்.



அந்தப் ' பெருந்தகையார்' களிலேயும் பெரும் புள்ளியாகத் திகழ்ந்தவர் பேரின்பமுத்து என்பவரே ; அவர்தாம் நம்முடைய தேன்மொழியின் அருமைத் தந்தை ஆவார்.

தம்முடைய இருபதாவது வயதில் தாம் பிறந்த சிறிய கிராமத்தில் சாதாரண ' மாட்டுத் தரகுத் தொழிலில்தான்' அவருடைய வளமான வாழ்க்கை தொடங்கிற்று. அந்தத் ' தரகு வேலை ' பிறகு ஒவ்வொன்றுக்காகத் தாவி நெல்மண்டிக்காரராக, அரிசி ஆலை சொந்தக்காரராக, நெடுஞ்சாலைக் ' காண்டிராக்டராக ' கட்டடங்களுக்குத் தேவையான இரும்புச் சாமான்கள் விற்பனையாளராக, பின்னர் அவற்றையே ஓரளவு உற்பத்தி செய்பவராக, அவரை உயர்த்தி விட்டது.

சென்னை மாநகரிலே இப்போது அவர் செய்யாத தொழில் இல்லை; திரட்டாத சொத்தும் இல்லை ; சுவைக்காத பொருளும் இல்லை ; துய்க்காத இன்பமும் இல்லை.

ஆம், பேரின்பமுத்து பெரும் பெரும் இன்பங்களில் எல்லாம் முத்துக் குளிப்பவராகத்தான் மாறிவிட்டார். அதே சமயம், ஆன்மீக வாதிகளின் அகராதியில் வருமே ' பேரின்பம் ' அதனை அடைவதற்கும் தம்மைத் தவிர வேறு ' சமயக் கொழுந்து ' இல்லை என்கிற முறையிலே தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதிலும் அவருக்கு நிகர் அவரேதான் !

தம்முடைய இரண்டடுக்கு மாளிகையைச் சுற்றிலும்

தென்னை மரங்களையும், பன்னீர் மரங்களையும் எழுப்பும்பொழுதே சுற்றுச் சுவரை ஒட்டினாற் போல ஒரு பிள்ளையார் கோவிலையும் அவர் கட்டி வைக்கத் தவறவில்லை. அந்தப் பிரம்மச்சாரித் தெய்வத்தைக் கையெடுத்துக் கும்பிடாமல் எந்தக் காரியத்திலேயும் ஈடுபடுவதும் இல்லை.

பிள்ளையார் பெருந்தன்மையானவர்!

அவருடைய இரக்கத்தினால்தான் — அருள்பாலிப்பினால்தான் — தமக்கு அடுக்கடுக்காகச் செல்வங்கள் சேர்ந்து வருவதாகப் பேரின்பமுத்து எல்லாரிடமும் பேசி மகிழ்வார்; பெருமையும் அடித்துக்கொள்வார்!

சில சமயங்களில் மட்டும் 'இவற்றையெல்லாம் அனுபவிக்க நம்முடைய மனைவி இல்லாமல் போய்விட்டாளே!' என்கிற எண்ணம் அவரிடம் தலைநீட்டுவதுண்டு.

ஆனால் அவள் இப்போது உயிரோடு இருந்திருந்தால் தமது இச்சைப்படியெல்லாம் இப்போதைப் போல அவர் சிற்றின்பங்களிலே திளைத்துக் களித்திருக்க முடியுமா? இந்தக் கண்ணராவிக் காட்சிகளையெல்லாம் காணவேண்டாம் என்று கருதித்தானோ என்னவோ இரண்டு ஆண் குழந்தைகளையும் மூன்றாவதாக ஒரு பெண்ணையும்



பெற்றுப் போட்டுவிட்டு அவள் கண்ணை மூடிக்கொண்டு மண்ணுக்குள்ளே போய்விட்டாள் மகிழ்ச்சியினைத் தேடி! அவளைத் தொடர்ந்து இரண்டு ஆண்பிள்ளைகளும் அடுத்தடுத்துச் சாவினைத் தழுவிக்கொள்ளவே தேன்மொழி மட்டுமே தேங்கி நின்றாள்.

உறவினர்கள் சிலர் இரண்டாந் தாரமாக இன்னொருத்தியைக் கட்டிக்கொள்ளுமாறு பேரின்பமுத்துவை வற்புறுத்தினர்; அவருடைய சொத்துக்களை அனுபவிக்க ஆண் வாரிசு—வழித்தோன்றல்—இல்லாமல் போய்விடுமே என்கிற கவலை அவர்களுக்கு. ஆனால் அவரோ, ''வருகின்றவள் தேன்மொழியைக் கண்கலங்குமாறு விட்டுவிட்டால் என்ன செய்வது? அதனால்தான் நான் மறுபடியும் திருமணம் செய்துகொள்வதாக இல்லை''— என்று அவர்களுடைய வாய்க்கெல்லாம் பூட்டுப்போட்டு விட்டார்.

உண்மையிலேயே அவர் மறுமணம் புரிந்துகொள்ள மனம் வைக்காததற்குக் காரணம் தம்முடைய ஒரே மகளின் மீதுள்ள ஒப்பற்ற பாசந்தானா? அல்லது இனிமேலாவது பிள்ளையாரின் வழியைப் பின்பற்றிப் 'பிரம்மச்சரிய விரதத்தைக் கடைப் பிடிப்போம்' என்கிற பக்தி மேலீடா?

இரண்டும் இல்லை.

மனைவி மங்களத்தோடு அவர் வாழ்ந்த வாழ்க்கை இருக்கிறதே அது அவர் எதிர்பார்த்தவாறு இனிப்பாக அமையவில்லை; கசப்பாகவே முடிந்தது. கசப்பு என்றால் சாதாரணக் கசப்பா?

எலுமிச்சம் விதையைக் கடித்துவிட்டால் அது வாயில் மட்டுமே கசக்கும்; கண்டங்கத்தரிக்காயை மென்று பார்த்தாலோ அந்தக் கசப்பு தொண்டையோடுகூட நிற்காமல், வயிறுவரை சென்று குமட்டாதா?

மங்களத்தின் முன்கோபமும் முரட்டுப் போக்கும், குதர்க்க வாதமும் குத்தல் பேச்சும், ஆணவமும், அடக்குமுறையும் பேரின்பத்தைப் பெண்ணினத்தின்மீதே வெறுப்புக்கொள்ளத் தூண்டின. அந்த அனுபவங்களின் விளைவுகளை அவரால் எளிதில் மறந்துவிட முடியவில்லை. மனைவி என்கிற பிணைப்பே ஆடவனின் கழுத்தை நெரித்துக் கொல்லும் சுருக்குக் கயிறாகவே அவருக்குத் தோன்றியது. அதேபோல, கணவன் என்கிற பிணைப்பும் எத்தனையோ பெண்களுக்குச் சுளுக்கியாகச் சித்திரவதை செய்யக்

---

என்னப்பா! தோசை ஒரே மாவா இருக்குது!

மாவா, ரவாவா? எது வேணும்னு கேட்டப்போ, மா தோசையே கொண்டு வான்னு நீங்கதானே சொன்னிங்க!



---

கோயம்புத்தூர் லெட்டருக்கு என்ன பதில் எழுதுறதுங்க?

" உங்க கடுதாசி கிடைச்சுது! நீங்க சொல்ற விலைக்கு எங்க சரக்குகளை அனுப்ப முடியாது! உங்களுக்கு சந்தேகம் இருந்தா இன்னும் நாலைஞ்சு இடத்திலே விசாரிச்சுக்குங்க! கொள்முதல் விலையே ரொம்ப அதிகமா இருக்கு " அப்படின்னு ஒருவரியிலே எழுதிப்போடுய்யா.



கூடும் என்றெல்லாம் அவர் சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்தித்துத் தெளிவடைவதாலோ, சகித்துக் கொள்வதாலோ அவருக்கு என்ன இலாபம்தான் ஏற்படப் போகிறது? அவரைப் பொறுத்தவரை மீண்டும் ஒருமுறை அவர் 'மனைவி' என்கிற விலங்குக்குள்ளே மாட்டிக் கொண்டு திணற விரும்பவில்லை. அதோடு கணவன் என்கிற கூண்டுக்குள் மாட்டிக் கொண்டுவிட்ட ஆண் பிள்ளை தன் இச்சைப்படியெல்லாம் எல்லாக் கனிகளையுமே கொத்தித் தின்னத்தான் இயலுமா? அதனை 'அறம்' என்றுதான் இன்றைய உலகம் ஏற்றுக்கொள்ளுமா?

எனவேதான், தமக்கும் ஒரு பெண் இருக்கிறாள் என்கிற பொறுப்புக்கூட இல்லாமல் பூவுக்குப் பூ தாவும் பொன்வண்டாகத் தம் உடற்பசிக்குத் தேவையான உணவு வகைகளைத் தேடி அவர் அலையலானார்.

பேரின்பமுத்துவின் அகவாழ்வுதான் இப்படிச் சிதிலமடைந்து சீர்குலைந்ததே தவிர, அவருடைய புறவாழ்வோ—தொழில் துறைகளில் அவருக்குள்ள ஈடுபாடோ—கட்டுக்கோப்பு, உறுதிப்பாடு, ஒழுங்குமுறை முதலானவற்றை இம்மியும் மீறாமல் ஓங்கி வளர்ந்த வண்ணம் இருந்தது. கள்ளக் கடத்தல் புரிந்தாலும், கொள்ளை இலாபம் அடித்தாலும் அந்த வட்டத்திலும் தாம் ஒரு நாணயம் உள்ளவர்—நம்பிக்கைக்கு உரியவர்—என்கிற நற்பெயரை அவர் எப்படியோ எடுத்து வைத்திருந்தார்.

அவருடைய தொழில் துறைகள் தொடர்பான நிறுவனங்கள் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலே சிதறிக் கிடந்தன; எனினும் அவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கக்கூடிய செயலகம் ஒன்றையும் அவர் ஏற்படுத்தியிருந்தார். அதிலே ஏறத்தாழ நூறு பேர்களாவது அலுவல் பார்ப்பார்கள். அவர்களில் ஒருவனே நம் மாதவன்.

உண்மையாகவும், சுறுசுறுப்பாகவும் உழைக்கக்கூடிய அவனைப் பேரின்பமுத்துவுக்கு எடுத்த எடுப்பிலேயே பிடித்துப்போனதில் வியப்பேதும் இல்லை.

தமது நிறுவனம் ஒன்றைப் பார்வையிடும் பொருட்டு, வாசலில் தமக்காகக் காத்து நிற்கும் 'பிளைமவுத்' காரிலே ஏறப்போன பேரின்பமுத்து தம்முடைய மகளுக்கென்று தாம் ஒதுக்கிய ஃபியட் வண்டியை மாதவன் ஓட்டிக் கொண்டு வருவதைக் கண்டதும் அப்படியே திகைப்பிலே ஆழ்ந்துபோனார்.

சுற்றுச் சுவரைக் கடந்து உள்ளே வந்து ஓர் ஒதுக்குப் புறமாகக் காரை நிறுத்தினான் மாதவன்; பிறகு கீழே இறங்கிப் பின்னிருக்கைக்குரிய கதவினைத் திறந்து அவன் உள்ளே எட்டிப் பார்த்ததுமே, தேன்மொழிக்கு ஏதோ தெரியவில்லை என்று திடமாகப் பட்டுவிட்டது பேரின்பமுத்துவுக்கு.

அவருடைய திகைப்பு அடுத்த கணமே திடுக்கிடாகவும் மாறிவிட்டது.

''ஏன், தேன்மொழிக்கு என்ன ஆச்சு?''

—என்று கேட்டவாறே அவர் அந்த ஃபியட் வண்டியை நோக்கி நடந்தார்.

அவள் காரின் உள்ளே மயங்கிக் கிடந்த அலங்கோல நிலையும், அவளது கலைந்த கேசமும், நீலம் பாரித்த வெள்ளை விழிகளும் அவரை மேலும் பதற வைத்தன.

(தொடரும்)


டாக்டர் பட்டம் பெற்ற தமிழக முதல்வர்
தஞ்சை கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு
எங்கள் வாழ்த்துக்கள்!

**அகில இந்திய வர்த்தக சுற்றுலா**

**கலைப் பொருட்காட்சி**

**நாகை அவுரித் திடலில் 25-7-1971 முதல் தமிழ்நாட்டின் தலைவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

தினசரியும் தமிழ்நாட்டின் பிரபல சினிமா நட்சத்திரங்களின்
நாடகங்கள், நடனங்கள், மெல்லிசைக் கச்சேரிகள்
மற்றும் ஏராளமான கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன!

**ஸ்டால்கள் தேவைப்பட்டோர் விரைந்து வருக!**

G. நவாப்ஜீ,
போன்: 328. அமைப்பாளர், "காதரியா என்டர் பிரைசஸ்,"
நாகைப்பட்டினம்.

*** பல லட்சக்கணக்கான மக்கள் கூடும் இம்மாதிரிப் பொருட்காட்சிகளில் தமிழக அரசினர் சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு, போலீஸ் ஆகிய ஸ்டால்களை விசேஷமாக அமைத்து உதவ வேண்டுகிறோம்.

—பொருட்காட்சிக் குழுவினர்.




வீட்டில் காபிப் பொடியை வடி கட்டி டிக்காசனைக் கலந்தபின் காபிப்பொடியை வீசி எறிகிறோம். அழுகிய தேங்காய் என்றால் முகத்தைச் சுழித்துத் தூர வீசி எறிகிறோம். ஆனால் திருமதி சாந்தா நாராயணனிடம் இவை கிடைத்தால் வடிகட்டிய காபிப் பொடி வண்ணக் கோலத்திற்கான (ரங்கோலி) கலவைப் பொடியாகி விடும். அழுகிய தேங்காயைத் துருவி சாயம் கலந்து, காய வைத்து சமுக்காளக் கோலம் வரைந்து விடுவார் இந்த சாந்தா நாராயணன்.

திரை உலகத் தாரகை பலரைத் திரைப்படங்களில் கண்டு ரசித்திருப்பீர்கள். அதே போன்று தரை உலகத் தாரகை திருமதி சாந்தா நாராயணன், சாதாரணமாக உள்ள எந்தத் தரையையும் தனது கலைத் திறனால் வண்ண வண்ணக் கோலம் வரைந்து அதனைக் கலைக் கூடமாக மாற்றி விடக்கூடியவர்.

சாந்தா நாராயணன் வண்ணத் தூள்களைக் கொண்டு தரையில் சமக்காளம் வரைந்தால் பார்ப்பவர்கள் அது சமுக்காளம் என்றே நினைப்பார்களே ஒழிய, அது வெறும் வண்ணப்பொடி என்று கருதமாட்டார்கள். அவ்வளவு தத்துரூபமாக இருக்கும்.

ஒருமுறை கோவையில் இவர் போட்டிருந்த சமுக்காளக் கோலத்தைப் பார்த்த ஒரு மூதாட்டி அது உண்மையிலேயே சமுக்காளம் என நினைத்துச் சுருட்டப் போய் விட்டாராம்.

15 ஆண்டுகளாக இக்கலையில் ஈடுபட்டுள்ள திருமதி சாந்தா வண்ணப் பொடிகளால் மட்டுமல்ல; தானியங்களாலும், பூக்களாலும் கோலம் போடுவார். நிலத்தில் மட்டுமல்ல; நீர் மேலும் கோலம் போடத் தெரியும் திருமதி சாந்தாவுக்கு.

பரிசுச் சீட்டு துவக்க விழாவின் போது இராசாசி மண்டபத்தில் இவர் நீர்க்கோலத்தில் வரவேற்பு (நல்வரவு) எழுதி இருந்ததைப் பார்த்து அண்ணாவும் முன்னாள் ஆளுநரும் பாராட்டினர்கள்.

வண்ணப் பொடியால் உருவாகிய "அண்ணா"



''ஒருமுறை அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு இந்த நீர்க்கோலத்தைப் பார்த்து விட்டு அதிசயப் பட்டார். 'தண்ணீரில் எப்படிக் கோலம் போடுகிறாய்? அந்த ரகசியத்தைச் சொல்! இல்லாவிட்டால் இன்று எனக்குத் தூக்கமே வராது' என்று சொன்னார்'' என்று பூரிப்புடன் தெரிவிக்கிறார் திருமதி சாந்தா.

திருமதி சாந்தாவின் கலைக் குழுவில் மற்றொரு அதிசயம். இவருடன் பணியாற்றும் இரு இளைஞர்களான திரு வி. பி. கிருஷ்ணமூர்த்தியும் திரு. துளசியும் பொறியியல் பட்டதாரிகள்.

திருமதி சாந்தா, சமுக்காளம் போடுவதிலும் நீர்க்கோலமிடுவதிலும் வல்லவரானால், அரசியல் தலைவர் படங்களை அப்படியே வரையக்கூடியவர் பி.எஸ்சி., பி.இ., பட்டதாரியான கிருஷ்ணமூர்த்தி. சமீபத்தில் இவர்கள் வரைந்த வண்ணக் கோலங்கள் சென்னை என்.கே.டி. கலா மண்டபத்தில் இடம் பெற்றிருந்தன. அதில் அரசியல் தலைவர்களையும், திரைப்படக் கலைஞர்களையும் அழகாக வண்ணக் கலவைகளால் உருவாக்கியிருந்தார். அண்ணாவும், கலைஞரும், நாவலரும், புரட்சி நடிகரும் அவரது கைவண்ணத்தால் அங்கு அழகு ஓவியமாகக் காட்சி தந்தனர்.

அரசியல் தலைவர் ஒருவர் படத்தினை இக்கோலத்தில் வரைய ஒரு நாள் ஆகிறது. வண்ணப் பொடிகளுக்கு ஆகும் செலவு சுமார் 20 ரூபாய்.

'ரங்கோலி கலாவல்லி' என்ற பட்டம் பெற்ற திருமதி சாந்தா, விவேகானந்தர் இல்லம் பகுதியில் முருகப்ப முதலித் தெருவிலுள்ள தனது இல்லத்தில் 30 மாணவ மாணவிகளுக்கு வண்ணக் கோலம் கற்றுத் தருகிறார். அதற்கு அவர் வாங்கும் கூலி வண்ணப் பொடிகளுக்கு ஆகும் செலவு மட்டுமே!

இவர் போடும் மற்றொருவகைக் கோலத்தின் பெயர் இசைக் கோலம். பாடிக்கொண்டே கோலம் போட வேண்டும். பாட்டு முடிந்ததும் கோலமும் முடிவடைய வேண்டும். இதுவே இசைக் கோலம்.




கண்டவுடன் ஆர்வம் பொங்க என்னை வரவேற்கும் என் அருமைச் செல்வியைக் காணவில்லை.

பார்த்தவுடன் ஓடிவந்து மார்புறத் தழுவிக் கொள்ளும் மொழி அறியா மழலைச் செல்வத்தைக் காணவில்லை !

அலுவலகத்திலிருந்து வருவதற்குச் சிறிது நேரம் தாமதமாகி விட்டால் கூட, வீட்டு வாசலிலேயே கால் கடுக்க நின்று கனிவுடன் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என் அருமைக் கண்மணியை—என் வளர்ப்புப் பெண்ணைக் காணவில்லை !

நான்கு நாட்களாகிவிட்டன. எங்கெங்கோ தேடிப் பார்த்து விட்டேன். காவல் நிலையத்திலும் தகவல் சொல்லி வைத்து விட்டேன். ஏமாற்றம் தான் பதிலாகக் கிடைத்தது எனக்கு.

என் சிந்தனை பின் நோக்கிச் சென்றது !

* * *

மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் . . . .! குழந்தையில்லாத எனது மனக்குறை அறிந்து, எனது நண்பரொருவர் அந்தப் பெண் குழந்தையை என்னிடம் தந்தார். பிறந்தவுடனேயே தன் தாயை விழுங்கிய அந்தக் குழந்தையைத் தன் வீட்டில் வைத்திருக்க மனமில்லாமல்தான் என்னிடம் ஒப்படைத்தார். நான் ஆர்வத்துடனும், அதிகப் பரிவுடனும் அந்தக் குழந்தையை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன்.

குழந்தையைக் கண்டவுடன் என் மனைவியின் உள்ளம் உவகைக் கடலில் மிதந்து விடும் என்ற நம்பிக்கையில்தான் வந்தேன். ஆனால் . . . . . ! அவள் கண்களிலே மகிழ்ச்சிக்குப் பதிலாக மிரட்சியே தெரிந்தது.

'' இது . . . . . '' என்று தொடங்கினாள்.

'' தாயை இழந்த சேய்; காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன் !'' நான் அமைதியாகச் சொன்னேன் .

'' நமக்கு எதற்கு?''—அவள் கேட்டாள்.

'' நமக்குக் குழந்தையில்லை அல்லவா ? அதற்காக ''—நான் பதிலிறுத்தேன்.

'' இன்று இல்லை என்றால் நாளை பிறக்காது என்று நினைத்துவிட்டீர்களா?''—கோபத்தைக் கக்கினாள்.

'' மணம் முடிந்து ஐந்தாண்டுகளாக உனக்குக் குழந்தை இல்லை; இனிப் பிறக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை !''—உறுதியுடன் சொன்னேன்.

இதைச் சொன்னதுதான் தாமதம் அவளது சிவந்த வதனம் மேலும் சிவந்து விட்டது. கண், நீரைக் கொட்டிவிட்டது. அன்று முதல் என் செல்வியின்மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. செல்வியின்மீது ஓராயிரம் குற்றச்சாட்டுகளைத் தயாரித்து ஒப்புவிப்பாள். நான் அனைத்தையும் வலது காது வழியாக வாங்கி இடது காது வழியாக விட்டுவிடுவேன்.

என் இதயத்தில் இடம் பெற்றுவிட்ட என் அருமைச் செல்வியை எவராலும் பிரிக்க முடியவில்லை. உண்ணும்போதும், உறங்கும் போதும் என் அருகிலேயே இருந்து வந்தாள். அப்படி இருந்தவள் என்னைப் பிரிந்து எங்கோ சென்றுவிட்டதை எண்ணும்போது என் கண்கள் கலங்க ஆரம்பித்துவிட்டன.

கடந்த நான்கு நாட்களாக நான் ஆகாரம் கூட உண்ணவில்லை. ஆனால் என் மனைவியின் உள்ளமோ மகிழ்ச்சிக் கடலில் துள்ளிக் குதித்தது. என் மனைவியே என் வளர்ப்பு மகளை விரட்டி விட்டாளோ என்ற ஐயமே எனக்கு ஏற்பட்டது.

செல்வியைப் பற்றி அவளிடம் கேட்ட கேள்விகளுக்கு அவள் சரியாக விடையளிக்கவில்லை ; அவளது மௌனம் அவள் செய்த குற்றத்தை எதிரொலிப்பதாகவே எனக்குப் பட்டது. அதற்குமேல் எனக்குப் பொறுமை இல்லை. என் கரங்கள் அவளது முதுகில் விளையாடத் தொடங்கின. அந்த நேரத்தில் வீட்டின் வெளிக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! காணாமல்போன என் வளர்ப்புப் பெண்—செல்வி என்னும் பெயருடையாள்—அன்பு ததும்ப என்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள், ''லொள் லொள்'' என்ற இசை முழக்கத்துடன்.

ஆம் ! என் நண்பர் கொடுத்த அன்புப் பரிசு—என் வளர்ப்புப் பெண்—ஆறறிவு படைத்த மனிதப் பிறவி அல்ல ! நன்றி உணர்வுக்குப் பெயர்போன நாலுகால் பிறவி—நாய்!



கதர் கிராமத் தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்பு,
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
புதிய சலுகை!
கதர்ப் பட்டுத் துணிகளுக்கு 10 சதவீதம் கழிவு தரப்படுகிறது.
கதர், கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

# பருப்பு வகைகளை பயிரிடுவோம்



"முன்னேறி வரும் நமது நாட்டில், குழந்தைகளுக்குத் தேவையான அளவு புரதச் சத்து (Protein) மிகுந்த உணவுகளைக் கொடுத்து வளர்க்காவிட்டால், இன்னும் 20 ஆண்டுகளில் அறிவு வளர்ச்சி குன்றிய ஓர் மக்கள் சமுதாயமே தோன்றி விடும்" என்று புது டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் எச்சரித்துள்ளார்.

"மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சி குன்றிப் போவதால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கப் புரதச் சத்து மிக்க பருப்பு வகைகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய உழவர் பெரு மக்கள் முன்வர வேண்டும்; அதற்கு அரசாங்கம் உதவ வேண்டும்" என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித இனத்தின் மூளை வளர்ச்சிக்குப் பருப்பு வகைகளில் உள்ள புரதச் சத்து மிகவும் இன்றியமையாதது என்பது புதிய கண்டு பிடிப்பாகும்.

குழந்தைக்கு 2 வயது ஆகும் பொழுதே, அதன் மூளை உறுப்புகளின் பெரும் பாகம் முழு வளர்ச்சி பெற்று விடுகிறது. குழந்தையினுடைய மூளை பிறந்த 4 ஆண்டுகளில் 80 முதல் 90 சதவீதம் வளர்ச்சியடைந்து வருகிறது. குழந்தைக்கு 7 வயது ஆகும்பொழுது மூளையின் உறுப்புகள் முழு வடிவம் பெற்று விடுகின்றன. அதன் பின் மூளை வளருவதில்லை. எனவே, குழந்தைகளுக்குத் தேவையான அளவு புரதச் சத்தை அளிக்காவிட்டால் குழந்தைகளின் மூளை தகுந்த அளவு வளர்ச்சியின்றிப் போய் விடும். அதனால் குழந்தைகளின் நினைவாற்றல், புத்திக் கூர்மை, கற்பனை ஆற்றல் ஆகிய அனைத்தும் மந்தப்பட்டு விடும் என்று மருத்துவ வல்லுநர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள். ஆகவே, குழந்தைகளுக்குப் புரதச் சத்து நிறைந்த பருப்புச் சோறு கொடுத்து வளர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

அண்மையில் ரோம் நகரில் கூடிய உணவு வேளாண்மைக் கழகத்தின் (Food and Agriculture Organisation) புரதச் சத்து அறிவுரைக் குழு, முன்னேறி வரும் நாடுகளில் உள்ள 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளில் 20 சதவிகிதக் குழந்தைகள் புரதச் சத்துக் குறைவினால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், அதில் 3 சத விகிதக் குழந்தைகள் —அதாவது 1,20,00,000 குழந்தைகள் கடுமையான புரதச் சத்துப் பற்றுக் குறைவின் காரணமாக இறந்துவிடும் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பொதுவாக முன்னேறிவரும் நாடுகளில் சக்தி (கலோரி) பற்றுக் குறை நிலவி வருகிறது. எனவே, முன்னேறிவரும் நாடுகளிலெல்லாம் கிடைக்கும் புரதச் சத்தில் ஒரு பகுதி, சக்தியை வழங்குவதற்காகவே பயன்படுத்தப் படுவதால், தேவையான அளவு புரதச் சத்தும் கிடைப்பதில்லை.

புரதச்சத்துப் பற்றுக்குறையின் காரணமாக மூளை வளர்ச்சியின்மை, சாதாரண நோய் தாக்குதலையும் தாங்கிக் கொள்ளாத தன்மை, இரைப்பை இருதய முரண்பாடுகள், தசைகளின் வளர்ச்சிக் குறைவு இயக்கம் குன்றல் போன்றவை ஏற்படுகின்றன. இதனால் குழந்தைகளின் சாவு பெருகி வருகிறது.

புரதச்சத்தை அதிக அளவு உட்கொண்டால், பிணிகளிலிருந்து விரைவில் குணமடைய முடியும் என்பதும் தெளிவாகியுள்ளது.

இன்றைய குழந்தைகள் எதிர் காலத்தில் விஞ்ஞான வித்தகர்களாகவும், அறிவிற் சிறந்த நிபுணர்களாகவும், மருத்துவ வல்லுநர்களாகவும். பொறியியற் கலைஞர்களாகவும், அரசியல்—பொருளாதார மேதைகளாகவும், நாடு காக்கும் வல்லுநர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் விளங்க வேண்டுமானால்; அவர்களுக்குத் தேவையான புரதச் சத்து மிகுந்த பருப்புக்கலந்த உணவுகளை அளிக்கவேண்டியது நமது கடமையாகும்.

புரதச்சத்து குழந்தைகளுக்கு மட்டுமே முக்கியமானது என்று எண்ணிவிடக் கூடாது. வயது வந்தவர்களுக்கும் புரதச்சத்து மிகவும் இன்றியமையாததாகும். எனவே புரதச்சத்துப் பற்றுக் குறையை நீக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பொதுவாக, பருப்பு வகைகளில் புரதச்சத்து மிகுந்து உள்ளது. ஒவ்வொருவரும் சாப்பிடும் பருப்பு வகைகளின் அளவை உயர்த்தினால், இந்தியாவைப் பொறுத்த வரையில் புரதச்சத்துப் பற்றுக்குறையை அகற்றி விடமுடியும். ஆனால் தொடர்ந்து மக்கள் தொகை பெருகி வருவதால், இந்தியாவில்

# புரதச்சத்துப் பெருக்கிடுவோம்



தனிப்பட்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பருப்பின் அளவு ஆண்டிற்கு ஆண்டு குறைந்து வருகிறது. 1959-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்குச் சராசரியாக 74·7 கிராம் பருப்புகள் கிடைத்துள்ளன. ஆனால் இப்பொழுது கிடைப்பது 41·8 கிராம் பருப்புதான் என்பதை நினைக்கும்பொழுது, இந்தியாவில் பருப்புப் பற்றுக்குறை வளர்ந்து வருகிறது என்பது புலனாகிறது.

வயது வந்த ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு 85 கிராம் (3 அவுன்சு) பருப்பு சாப்பிட வேண்டும் என்று ஊட்டச்சத்து வல்லுநர்கள் (Nutrition Experts) வற்புறுத்துகிறார்கள். ஆனால் இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் இன்றைய நிலையில், தேவையில் பாதியளவு பருப்புக் கூடக் கிடைக்கவில்லை என்பது மேற்கண்ட புள்ளி விவரங்களால் தெரிய வருகிறது.

## பருப்பு உற்பத்தியும் குடும்பக் கட்டுப்பாடும்

''உணவில் புரதச்சத்துக் குறைவதற்கும், மக்கட்தொகை பெருக்கம் அதிகரிப்பதற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மக்கள் அதிகமாகப் புரதச்சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் வியப்பூட்டும் வகையில் பெருகிவரும் மக்கட்தொகையைக் கட்டுப்படுத்த இயலும்'' என்று இந்திய மருத்துவச் சங்கத் துணைத்தலைவர் டாக்டர் ஜி. டி. கோபாலகிருட்டிணன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். புரதச்சத்து மிகுந்த பருப்புகளை மக்கள் அதிகமாக உண்பதால், இயற்கையாகவே குடும்பக் கட்டுப்பாடு ஏற்பட்டு விடுமாதலின் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவது மேலும் அவசியமாகிறது.

## இந்தியாவும் பருப்பு உற்பத்தியும்.

உலகத்திலேயே இந்தியாவில் தான் பருப்புவகைப் பயிர்களின் பரப்பு அதிகமாக உள்ளது. தற்பொழுது இந்தியாவில் 2 கோடியே 40 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில், ஆண்டொன்றுக்கு 1 கோடியே 20 இலட்சம் டன் பருப்பு உற்பத்தியாகிறது. இக்கணக்கின்படி ஒரு ஹெக்டேர் (2·47 ஏக்கர்) நிலத்தில் உற்பத்தியாகும் பருப்பு ஆண்டொன்றுக்குச் சராசரி 400 கிலோவாகவே உள்ளது. 1949-ஆம் ஆண்டிலிருந்து 1965-ஆம் ஆண்டு வரையில் பருப்பு உற்பத்தி 1·86 சத அளவே உயர்ந்துள்ளது. இந்த உயர்வும் சாகுபடியாகும் பரப்பினை உயர்த்தியதால் ஏற்பட்டதேயாகும். ஹெக்டேர் ஒன்றுக்குக் கிடைக்கும் மகசூலில் குறிப்பிடத்தகுந்த உயர்வு இதுவரை ஏற்படவில்லை. மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து பார்க்கும் பொழுது, பருப்பு சாகுபடியாகும் பரப்பை இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகப்படுத்தினால்தான் பருப்பின் தேவையை ஈடுசெய்ய முடியும்; அல்லது ஹெக்டேர் மகசூலை இரண்டு பங்கிற்கும் மேலாக உயர்த்தினால்தான், நம் நாட்டின் மக்களுக்குத் தேவையான பருப்பை உற்பத்தி செய்ய இயலும், என்பது புலனாகிறது. இது முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமாக.

கிராமப் புறங்களில் உள்ள வளமில்லாத நிலங்களிலும் வளரக்கூடிய பயிராகவே பருப்பு வகைப் பயிர்கள் உள்ளன. உணவு தானியப் பயிர்களை விடப் பருப்புவகைப் பயிர்கள் வறட்சியைத் தாங்கிக் கொள்ளும் தன்மையுடையதாக இருப்பதால், மழை குறைவாகப் பெய்யும் பகுதிகளில் உழவர்களுக்குப் பருப்புவகைப் பயிர்களே கைகொடுத்து உதவுகின்றன. பருப்புவகைப் பயிர்களைப் பயிரிடுவது, இழந்துவிட்ட வளத்தை, நிலம், மீண்டும் பெறுவதற்கு வழிவகுக்கும் என்பதையும் நீண்ட காலமாகவே உழவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனால் இதுவரை பருப்பு உற்பத்தியில் ஓரளவு கவனமே செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதனால் ஒரு பக்கம் மகசூல் மிகவும் குறைவாக உள்ளதுடன், மறுபக்கம் பருப்புவகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் பரப்பும் தனிப்பட்ட உழவர்களின் மனப்போக்கிற்கு ஏற்பக், கூடியோ குறைந்தோ வருகிறது.

உயர் விளைச்சல் தரும் தானிய வகைகள், கரும்பு போன்ற பயிர்கள் மிகுந்த இலாபம் தருவதாக உள்ளதால், உழவர்கள் பருப்பு வகைப் பயிர்களைச் செய்யத் தயங்குகிறார்கள்.

எனவே பருப்பு வகைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை இரு மடங்கிற்கு மேலும் அதிகப்படுத்துவதென்பது இயலாத செயலாகும். ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகு விளைச்சல் தரும் குறுகிய காலப் பருப்பு வகைப் பயிர் ரகங்களை—ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு—சாகுபடி செய்தால் சராசரி ஹெக்டேர் மகசூலை இரண்டு மடங்கிற்கு

மேலும் அதிகப்படுத்த முடியும் என்பது பரிசோதனைகளின் மூலம் தெரிய வருகிறது. எனவே, பருப்பு வகைப் பயிர்களின் பரப்பையும், அவைகளின் ஹெக்டேர் மகசூலையும் அதிகப்படுத்தப் பெருமுயற்சி எடுப்பதே பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழியாக உள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்ட ஆராய்ச்சியின்படி, தகுந்த மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் 1974—75-ஆம் ஆண்டிற்குள் கூடுதலாக 1 கோடி மெட்ரிக் டன் அளவு பருப்பு உற்பத்தி செய்ய முடியும் என்பது உறுதியாகியுள்ளது.

பருப்பு உற்பத்தியைப் பெருக்க அரசு, உழவர் பெருமக்கள் ஆகிய இருசாராரும் மேற்கொள்ளும் தீவிர முயற்சியினல் தமிழ்நாட்டில் நிலவும் புரதப் பற்ருக்குறையை அகற்ற முடியும் என்பது திண்ணம்.

எனவே உழவர் பெருமக்கள் தானிய வகைப் பயிர்களை மட்டுமே சாகுபடி செய்வதை விட்டுவிட்டு, எதிர்கால சமுதாயத்தின் நலன் கருதியும், நாட்டின் செழிப்புக் கருதியும், வசதியும் வாய்ப்பும் உள்ள இடங்களில் புரதச்சத்து மிக்க பருப்பு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், அப்பழக்கத்தை உழவர் பெருமக்களிடையே ஏற்படுத்தத் தமிழ்நாடு வேளாண்மைத்துறை அலுவலர்களும், ஊழியர்களும் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்ருேம்.

## தமிழ்நாடு அரசின் முயற்சி

தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான, பருப்பு வகைகளை வழங்க வேண்டுமானல் ஆண்டொன்றுக்கு 8 இலட்சம் டன் பருப்பு தேவைப்படுகிறது. ஆனல் தமிழ் நாட்டில் விளையும் பருப்பின் அளவு, தேவையில் 8-ல் ஒரு பங்காகவே உள்ளது. தேவையை ஈடுசெய்யத் தமிழ் நாட்டிற்குத் தேவையான பருப்புகள் வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. இதனலேயே பருப்பு வகைகளின் விலை அதிகமாக உள்ளது.

பருப்பு வகைகளின் விலையைக் குறைக்கவும், புரதச்சத்து மிக்க பருப்புகளின் உற்பத்தியைப் பெருக்கித் தமிழ்நாட்டு மக்களுக்கு வளமான வாழ்வு அளிக்கவும் வேண்டியே, தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் 9·46 இலட்சம் ஹெக்டேர்களில் (23·38 இலட்சம் ஏக்கர்) பருப்புவகைப் பயிர்களைச் சாகுபடி செய்ய ஆவன செய்து வருகிறது. இதனல் இந்த ஆண்டில் பருப்பு உற்பத்தி ஏறத்தாழ 6 இலட்சம் டன்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீதி 2 இலட்சம் டன் பருப்புகள் மட்டுமே வெளி மாநிலத்திலிருந்து வரவழைக்கப்படும். படிப்படியாகப் பருப்பு வகைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பையும், தீவிரச் சாகுபடி முறைகளையும் அதிகப்படுத்தி, தமிழ்நாட்டிற்குத் தேவையான பருப்பு வகைகளின் முழு அளவையும் தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் இம் முயற்சி உண்மையிலேயே பெருமுயற்சியாகும். ஏனெனில், தமிழ்நாட்டில் சராசரியாக ஆண்டு தோறும் 1 இலட்சம் டன் பருப்பு மட்டுமே இதுவரை உற்பத்தியாகி உள்ளது.

1969—70-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படித் தமிழ்நாட்டில் 4,39,000 ஹெக்டேரில் மட்டுமே பருப்பு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, 1,20,000 டன் பருப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆனல் இந்த ஆண்டில் 9·46 இலட்சம் ஹெக்டேரில் பருப்பு வகைப் பயிர்களைப் பயிரிட்டு 6 இலட்சம் டன் பருப்பு உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு முயற்சிசெய்து வருவதால், நாட்டு மக்களின் நல்வாழ்வில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள அக்கறை தெளிவாகின்றதல்லவா? தமிழ்நாடு அரசின் இப்பெரு முயற்சிக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு நல்குவது நம் கடமையல்லவா? எனவேதான், 'தமிழரசு' இதழ் பருப்பின் அவசியத்தை விளக்கியதுடன், பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழி முறைகளையும் கடமை உணர்ச்சியுடன் வெளியிட்டுள்ளது. படித்து வழிமுறைகளைத் தெரிந்து கொண்டு, பருப்பு உற்பத்தியைப் பெருக்குவது உங்கள் கடமையல்லவா?

## பருப்பு உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்

பருப்பு வகைகளில் மிகவும் முக்கியமானது துவரம் பருப்பு. ''பருப்பில்லாத திருமணமா?'' என்ற பழமொழி ஏற்படுமளவுக்குத் துவரம் பருப்பு முக்கியத்துவம் வாய்த்துள்ளது. அன்ருட வாழ்வில் ஏழைகளும் தவருமல் சாம்பாரிலோ ரசத்திலோ பயன்படுத்துவது துவரம் பருப்பேயாகும். 1969—70-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி தமிழ் நாட்டில் 52,000 ஹெக்டேர்களில் மட்டுமே துவரை சாகுபடியாகியதாக அறிய முடிகிறது. அதிலிருந்து 30,000 டன் துவரை உற்பத்தியாகியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியுடன் தமிழ்நாட்டின் தேவையை ஒப்பிட்டுப் பார்த்தால்; தற்பொழுது உற்பத்தியாகும் துவரை மிகமிகக் குறைவென்பது தெளிவாகிறது. எனவே துவரம் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதில் பெரும் கவனம் செலுத்த வேண்டியதுள்ளது.



புரதச்சத்துப் பற்ருக் குறையால் பாதிக்கப்பட்ட குழந்தை

துவரம் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கீழ்க் கண்ட இரு முக்கிய வழிகள் உள்ளன.

1. துவரை சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்துதல்.

2. இரசாயன உரமிட்டு, பொறுக்கு வித்துக்களை விதைத்து, பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு ஹெக்டேர் மகசூலைப் பெருக்குதல்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் துவரை, சால் பயிராகவே நிலக்கடலை, சிறுதானிய வகைகளுடன் சாகுபடி செய்யப்படுகிறது. சால் பயிராகத் துவரை சாகுபடியாகும் பரப்பை விரிவுபடுத்தத் தமிழ்நாட்டில் பெரும் வாய்ப்பு உள்ளது. பின்கண்ட முறைகளை மேற்கொண்டு துவரை சாகுபடியாகும் பரப்பை விரிவுபடுத்தலாம்.

1. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 8·6 இலட்சம் ஹெக்டேரில் நிலக்கடலைபயிரிடப்படுகிறது. இதில் 2 இலட்சம் ஹெக்டேரில் மட்டுமே துவரை சால்பயிராகச் சாகுபடியாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 6·6 இலட்சம் ஹெக்டேரிலும் திருந்திய சாகுபடி முறையை மேற்கொண்டு துவரையைச் சால் பயிராகச் சாகுபடி செய்தால் ஏறத்தாழ 4·95 இலட்சம் டன் துவரை அதிகமாகக் கிடைக்கும்.



புரதச் சத்துப் பெற்ற பத்து மாதங்களுக்குப் பிறகு, அதே குழந்தையின் அழகுத் தோற்றம்.

2. தமிழ்நாட்டில் 7·68 இலட்சம் ஹெக்டேரில் ஆண்டுதோறும் சோளம் பயிரிடப்படுகிறது. இப்பரப்பு முழுவதிலும் சோளத்துடன் துவரையைச் சால்பயிராகப் பயிரிட்டால் ஏறத்தாழ 5·76 இலட்சம் டன் துவரை விளைவிக்க முடியும்.

3. அதுபோலவே தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் பயிராகி வரும் 2,60,000 ஹெக்டேர் வரகுடனும், 1,85,000 ஹெக்டேர் சாமையுடனும் துவரையைச் சால்பயிராக விதைக்கலாம். இதன்மூலம் 3·33 இலட்சம் டன் துவரை உற்பத்தியாகக் கூடும்.

4. தமிழ்நாட்டின் விஞ்ஞானி திரு ஜி. டி. நாயுடு அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள துவரையை வரப்புகளிலும், தோட்டங்களிலும், காலியாகக் கிடக்கும் இடங்களிலும் பயிரிடலாம். இத்துவரை மரம்போல் வளர்ந்து பல ஆண்டுகள் பயன்கொடுக்க வல்லது. இம்முறையிலும் குறிப்பிட்ட அளவில் துவரை உற்பத்தியைப் பெருக்க முடியும்.

மேற்கூறப்பட்ட முறைகளில் துவரையைச் சால்பயிராக விதைப்பதனால் மட்டுமே ஏறத்தாழ 14 இலட்சம் டன் துவரையைத் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்ய முடியும். இந்த அளவுக்குத் துவரை உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் தற்பொழுது கிடைத்துவரும் சராசரி ஹெக்டேர் மகசூலையும் பெருக்கவேண்டும். அப்பொழுது தான் மேற்கூறிய அளவு துவரை உற்பத்தியாகும்.

துவரையின் ஹெக்டேர் மகசூலைப் பெருக்கத், தமிழ்நாடு வேளாண்மைத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிட்டுள்ள 'எஸ். ஏ. 1' என்ற ரகத்தையோ கோ-1 (எண் 1141) என்ற ரகத்தையோ வாங்கி விதைப்பது தான் சிறந்தது.

எஸ். ஏ. 1 துவரை, வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் வட்டாரத்தில் பயிரிடப்படும் ஓர் உள்ளூர் ரகத்திலிருந்து உயர் வழித் தேர்வுமூலம் (Pure line Selection) கண்டுபிடிக்கப்பட்டதாகும். இதில் 20.7 சதவிதம் புரதச் சத்து உள்ளது.

கோ.-1 துவரை தென்காசிப் பகுதியில் சாகுபடியாகும் துவரையிலிருந்து உயர் வழித் தேர்வு மூலம் உருவாக்கப்பட்டதாகும். இது குறுகிய கால வயதுடையதாகும்.

மேற்கூறிய பொறுக்கு ரக விதைகளை வாங்கிக், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சாகுபடி முறைகளை மேற்கொண்டு பயிரிட்டால் தமிழ் நாட்டில் துவரை உற்பத்தி பெருகுவது திண்ணமே!

## எஸ். ஏ. துவரை சாகுபடிக் குறிப்புகள்

பருவம் :—ஜூலை முதல் ஆகஸ்ட் மாதம் வரை மானாவாரியாக விதைக்கலாம்.

வயது :—180 நாட்கள்.

விதையளவு :—தனிப் பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 10 கிலோ (ஏக்கருக்கு 4 கிலோ) விதையும், சால் பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 6 முதல் 7½ கிலோ (ஏக்கருக்கு 2½ கிலோ முதல் 3 கிலோ வரை) விதையும் தேவைப்படும்.

நுண்ணுயிர் கலத்தல் :—

துவரை விதையுடன் (Bacterial culture) கலந்து விதைத்தால் மகசூல் அதிகமாகும் என்பது ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே துவரை விதையுடன் துவரைக்கென உள்ள நுண்ணுயிர்களை விதைப்பதற்கு முதல் நாளே கலந்து வைத்திருந்து விதைக்க வேண்டும். நுண்ணுயிர்கள் குடுவையில் (flask) அடைத்து வைக்கப்பட்டிருக்கும். இக்குடுவைகளைக் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் உள்ள மண் இரசாயன வல்லுநர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு குடுவையில் உள்ள நுண்ணுயிர் 12 கிலோ விதைக்குப் போதுமானது.

உரமிடுதல் :—நன்கு மக்கிய தொழு எருவை ஹெக்டேருக்கு 5 டன் (ஏக்கருக்கு 2 டன்=4 வண்டி) வீதம் இட வேண்டும். கடைசி உழவில் ஹெக்டேருக்கு 140 கிலோ ஏக்கருக்கு 56 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிட வேண்டும். மானாவாரி நிலக்கடலை) சோளம், வரகு, சாமை ஆகியவைகளுக்கு இரசாயன உரமிடப்பட்டால் அவைகளில் சால் பயிராகத் துவரையை விதைக்கத் தனியே இரசாயன உரமிட வேண்டியதில்லை.

இடைவெளி :—தனிப் பயிராக விதைக்க வரிசைக்கு வரிசை 90 சென்டி மீட்டர் (3 அடி) இடைவெளியும் வரிசையில் விதைக்கு

விதை 30 சென்டிமீட்டர் (1 அடி) இடைவெளியும் விட வேண்டும். சால்பயிராக விதைக்க 6 அல்லது 8 அடிக்கு ஒரு சால் வீதம் விதைக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு :—அசுவணி இலைப்புழு, வண்டுகள் தோன்றித் தாக்குவதைத் தடுக்க ஹெக்டேருக்கு $12\frac{1}{2}$ கிலோ (ஏக்கருக்கு 5 கிலோ) பி.எச்.சி. 10 சதத் தூளையும், $12\frac{1}{2}$ கிலோ டி.டி.டீ. 5 சதத்தூளையும் கலந்து தூவ வேண்டும். காய்ப்புழு தாக்குவதைத் தடுக்கத் துவரைச் செடி பூத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறையாக 3 தடவை, ஹெக்டேருக்கு 25 கிலோ (ஏக்கருக்கு 10 கிலோ) டி.டி.டீ 5 சதத் தூளையோ அலலது கார்பரில் 10 சதத் தூளையோ தூவ வேண்டும்.

மகசூல் :—தனிப் பயிரிலிருந்து ஹெக்டேருக்கு 1,250 கிலோ (ஏக்கருக்கு 500 கிலோ) மகசூல் கிடைக்கும். சால் பயிரானால் ஒரு ஹெக்டேரிலிருந்து 750 கிலோ (ஏக்கருக்கு 300 கிலோ) மகசூல் கிடைக்கக்கூடும்.

### கோ.- 1 துவரை சாகுபடிக் குறிப்புகள்.

பருவம்:— ஜூலை முதல், ஆகஸ்ட் வரை மானாவாரியாகவோ பாசனப் பயிராகவோ விதைக்கலாம். பிப்ரவரி-மார்ச் மாதங்களில் பாசனப் பயிராக விதைக்கலாம்.

வயது :—135 நாட்கள் (4 மாதம்).

விதையளவு :—தனிப் பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 15 கிலோ (ஏக்கருக்கு 6 கிலோ) விதையும், சால்பயிராக விதைக்க ஹெக்டேருக்கு $7\frac{1}{2}$ கிலோ (ஏக்கருக்கு 3 கிலோ) விதையும் தேவைப்படும்.

நுண்ணுயிர் கலத்தல் :— விதைப்பதற்கு முதல் நாளே ஒரு குடுவையில் உள்ள நுண்ணுயிர்களுக்கு 12 கிலோ விதை வீதம் கலந்து வைத்திருந்து விதைக்க வேண்டும்.

உரமிடுதல் :—தனிப் பயிராகச் சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 5 டன் (ஏக்கருக்கு 2 டன் 4 வண்டி) தொழு எரு இட வேண்டும். கடைசி உழவில் ஹெக்டேருக்கு 110 கிலோ (ஏக்கருக்கு 45 கிலோ) அம்மோனியம் சல்பேட் அல்லது ஹெக்டேருக்கு 50கிலோ (ஏக்கருக்கு 20 கிலோ) யூரியாவையும், ஹெக்டேருக்கு 250 கிலோ (ஏக்கருக்கு 100 கிலோ) சூபர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இட வேண்டும்.


இடைவெளி :—தனிப் பயிராகச் சாகுபடி செய்ய வரிசைக்கு வரிசை 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 30 சென்டிமீட்டர் (1 அடி) இடை வெளியும் விட்டு விதைக்க வேண்டும். சால் பயிருக்கு 6 அடி தூரத்திற்கு ஒரு சால்வீதம் விதைக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு :— எஸ். ஏ 1 துவரைக்குப் பரிந்துரைக்கப் பட்ட முறைப்படியே இந்த ரகத் திற்கும் செய்ய வேண்டும்.

மகசூல் :—தனிப் பயிராகச் சாகுபடி செய்யப்பட்டால் ஹெக்டேருக்கு 1,750 கிலோ (ஏக்கருக்கு 700 கிலோ) மகசூலும், சால்பயிராகச் சாகுபடி செய்யப் பட்டால் ஹெக்டேருக்கு 875 கிலோ (ஏக்கருக்கு 350 கிலோ) மகசூலும் கிடைக்கும்.

### உளுந்து

பருப்பு வகைகளில் துவரம் பருப்புக்கு அடுத்தபடியாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது உளுந்து. ஆனால் மானாவாரியாக உளுந்து விதைப்பதற்கு செப்டம்பர், அக்டோபர் மாதமே ஏற்ற பருவமாகும்.




### பச்சைப் பயறு

பச்சைப் பயறு, உளுந்திற்கு அடுத்தாற்போல் முக்கியத்துவம் வாய்ந்தது. பச்சைப் பயறு உற்பத்தியைப் பெருக்க ஜூலை—ஆகஸ்ட் மாதங்களில் ''கோ -1'' பச்சைப் பயறு விதையை மானாவாரியாக விதைக்கலாம். இதன் வயது 130 நாட்கள். இதில் 24 சத புரதச் சத்து உள்ளது.

எனவே, எதிர்காலச் சமுதாயம் அறிவும், ஆற்றலும், எழிலும், ஏற்றமும் பெற்று விளங்க, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு துவரை, பச்சைப் பயறு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குமாறு வேண்டுகிறோம்.


சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்ற வேண்டும் காசுள்ளபோதே சேர்க்க வேண்டுமல்லவா?
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

# மாணவர் அரங்கம்



## எங்கள் கல்லூரி

எங்கள் பச்சையப்பன் கல்லூரிக்குப் 'பைந்தமிழ்ச் சோலை' என்ற சிறப்புப் பெயருண்டு.


''படிக்கட்டும் பைந்தமிழ் பாடும் பச்சையப்பன் கல்லூரி'' என்று எங்கள் கல்லூரியைச் சிறப்பித்துக் கூறுவர்.

எங்கள் கல்லூரி, பேச்சுப் போட்டியில் இன்றளவும் சிறப்பிடம் பெற்று வருகிறது. சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழக மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் எங்கள் கல்லூரி மாணவர் இராமுதான் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து கோவை பூ.சா.கோ கலைக் கல்லூரி வழங்கும் சுழற் கோப்பையைப் பெற்று வருகிறார். இது தமிழகப் பல்கலைக் கழக அளவிலே மிகப் பெரிய சாதனையாகும்.

விளையாட்டுப் போட்டிகளிலும் எங்கள் கல்லூரி சிறப்பிடம் வகிக்கிறது. குறிப்பாக கிரிக்கெட், கால்பந்து போன்றவற்றில் சிறந்து விளங்குகிறது. சென்னைப் பல்கலைக் கழக மாணவர் கிரிக்கெட் குழுவில் எங்கள் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடம் வகிக்கிறார்கள்.

எங்கள் கல்லூரியில் 'அறுவை மன்றம்' என்ற ஒன்று செயல்பட்டு வருகிறது. இது ஆண்டுதோறும் பேச்சுப் போட்டி நடத்தி அதில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப் படுபவருக்கு 'அறுவைச் சக்கரவர்த்தி' என்ற பட்டம் வழங்கி, ஒரு ரம்பத்தைப் பரிசாக வழங்குகிறார்கள். இரண்டாவது பரிசு பெறுபவருக்கு 'அறுவைப் பேரரசு' என்ற பட்டம் வழங்கி, குத்துக் கத்தி ஒன்று பரிசாக வழங்கப்படுகிறது. மூன்றாவது பரிசைப் பெறும் மாணவருக்கு 'அறுவை மன்னன்' என்ற பட்டமளிக்கப்பட்டு பேனாக்கத்தி ஒன்று பரிசாக வழங்கப்படுகிறது. ஆறுதல் பரிசு பெறுபவருக்கு பிளேடுகள் வழங்கப்படுகின்றன. பட்டம் ஒன்றும் கொடுப்பது கிடையாது.

எங்கள் பச்சையப்பன் கல்லூரிக்கும், பச்சை வண்ணத்திற்கும் தொடர்பு அதிகம். எங்கள் கல்லூரியின் வாயிலில் உள்ள பெயர்ப் பலகையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வடிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் மேல் அடிக்கப்பட்டுள்ள வண்ணம் பச்சை. 'பச்சைப் பசேல்' என்று வெட்டி விடப் பட்டிருக்கும் செடிகளின் நடுவில் அமைந்துள்ள பச்சையப்பர் சிலைக்கு அடிக்கப்பட்டுள்ள வண்ணம் பச்சை. எங்கள் கல்லூரி முதல்வர் பயன்படுத்தும் மையின் நிறம் பச்சை. கல்லூரிக் கடித ஏட்டிலுள்ள எழுத்துக்களின் நிறம் பச்சை. கலைக் கட்டடம், அறிவியற் கட்டடம் என்றிருக்கும் இரு கட்டடங்களுக்கு மேலே செதுக்கப்பட்டுள்ள 'பச்சையப்பன்' என்ற சொல்லின் மேல் அடிக்கப்பட்டுள்ள வண்ணம் பச்சை.




எங்கள் கல்லூரியில் படித்தோரில் பெரும்பாலோர் இன்று அரசியல், இலக்கியம் போன்றவற்றில் புகழ் பெற்றோராக விளங்குகின்றனர். தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்கள் கல்லூரியில் பயின்றவர் தாம்.

எங்கள் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர்களும் அரசியல் இலக்கியம் போன்றவற்றில் சிறந்து விளங்குகின்றனர். நலத்துறை அமைச்சராக இருந்து வரும் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகனும், மதுரைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர்-பண்டாரகர் மு. வரதராசனாரும் எங்கள் கல்லூரியில் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்கள்.

எங்கள் கல்லூரியில் பயிலும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள், ஒருங்கு கூடஒரு கலையரங்கம் இன்றுவரை கிடையாது. அதுதான் எங்கள் கல்லூரியில் உள்ள மிகப்பெரிய குறை. எங்கள் கல்லூரியில் ஒரு கலையரங்கு கட்டி முடிக்கப்பட்டு விட்டால் எங்கள் கல்லூரி பட்டை தீட்டப்பட்ட வைரமாகப் பளபளக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

—ந. த. நடேசன்,
பி. ஏ. (இரண்டாம் ஆண்டு).

## தமிழ் நாடு அரசு
## காவல் துறை

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தமிழ் நாடு காவல் துறைக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை 1—7—1971 முதல் 31—3—1972 வரையுள்ள காலத்திற்கு வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்) கோரப்படுகின்றன.

(2) ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிட்ட கவர்களில் அனுப்ப வேண்டும். அந்தக் கவரின் மேலே சென்னை காவலர்களுக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி, பெறுநர் முகவரியில் திரு கே. ஸ்ரீகுமார மேனன், ஐ.பி.எஸ்., உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்தக் கவர் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ஆம் தேதி மாலை 4·00 மணிக்குள் அவருக்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட நேரமும், தேதியும் கடந்த பின் வந்து சேரும் ஒப்பந்தப் புள்ளி கவனிக்கப்படமாட்டா.

(3) ஒப்பந்தப் புள்ளி வடிவம், ஒப்பந்த நிபந்தனைகள், தேவைப்படும் பொருள்களின் அட்டவணை ஆகியவைகளை ரூபாய் 2·06 (ரூபாய் இரண்டு, பைசா ஆறு மட்டும்) செலுத்தி, சென்னை-4-ல் உள்ள இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(4) மாதிரிப் பொருள்கள் அனுப்பப்பட்டதற்கான ரயில்வே ரசீதை, உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II அவர்களுக்குப் பதிவுத் தபாலில் தனியே அனுப்ப வேண்டும்; பெறுநர் முகவரியில் அலுவலர் பெயர் மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். அனுப்பப்படும் மாதிரிப் பொருள்கள் இந்த அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் பொருட்களை ஒத்ததாக இருக்க வேண்டும்.

(5) ஒப்பந்தப் புள்ளிகளை 30—8—1971 அன்று மாலை 4·00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

(ஒ-ம்.) கே. ஸ்ரீகுமாரமேனன்
ஐ.பி.எஸ்.
உதவி இன்ஸ்பெக்டர்-
ஜெனரல் ஆப் போலீஸ்.

---

### டெண்டர் அறிவிப்பு.

1—9—1971 முதல் 31—12—1971 வரையுள்ள காலத்தில் மருந்துகள் (drugs and medicines) சப்ளை செய்ய, புகழ்பெற்ற வட்டார நிறுவனங்களிடமிருந்து "Tender for the supply of medicines due on 21—8—1971" என்று

உறையின்மீது தலைப்பிடப்பட்ட டெண்டர்கள் 21—8—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. டெண்டர் பாரம், அடியில் தரப்பட்ட முகவரியில் 20—8—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் கிடைக்கும். "XXIII. Medical—J. Miscellaneous—Other receipts" என்ற தலைப்பில் டெண்டர் பாரத்தின் விலையான ரூ. 3-ஐ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கட்டி அந்தச் செலானைத் தந்து டெண்டர் பாரம் பெறலாம். 11 காசுக்கு தனியாக ஒரு செலான் "XII Sales tax—Receipts under States Sales tax Act M. G. S. T. for sale of Tender Forms" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தலைப்பில் கட்டப்பட்ட கட்டணம் எந்தச் சூழ்நிலையிலும் டெண்டர்தாரர்களுக்குத் திருப்பித்தரப்படமாட்டாது.

டாக்டர் (திருமதி)
எம். சாரதாமேனன்,
M.D.D.,P.M.,
கண்காணிப்பாளர்,
அரசினர் மனநோய் மருத்துவ மனை,
சென்னை-10.

---

## தமிழ்நாடு அரசு
## வேளாண்மைத் துறை

**தோட்டக்கலை கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு.**

தமிழக விவசாய இலாகா, காய்கறி பயிரிடும் முறைகள் பற்றியும், தோட்டக்கலை பற்றியும் பொதுமக்கள் தெரிந்து கொள்ள ஒரு பயிற்சி வகுப்பு விரைவில் தொடங்க இருக்கிறது. இதில் பயிற்சி பெற விரும்புவோருக்கு தமிழில் பேச எழுத போதிய தகுதியிருந்தால் போதும். பயிற்சி ஒரு மாத காலத்திற்குக் கொடுக்கப்படும். மேற்படி ஒவ்வொரு பயிற்சிக்கும் மொத்தம் 20 பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மேற்படி பயிற்சிக் காலத்திற்கு ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உதவித் தொகையாக அளிக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்க் கண்ட விபரங்கள் அடங்கிய தங்கள் விண்ணப்பத்தைக் கலைநிபுணர், 5/31, எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-18 என்ற முகவரிக்கு 16—8—1971-க்குள் அனுப்பி விடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி முடிந்த பின் வேலை வாய்ப்புக்கு எவ்வித உத்திரவாதமும் அளிக்கப்படமாட்டாது.

1. தோட்டக் கலைஞரின் பெயர்.
2. வயது.
3. அஞ்சல் முகவரி.
4. படிப்பு.
5. தற்சமயம் வேலை பார்க்கும் தோட்டச் சொந்தக்காரரின் பெயரும், முகவரியும்.

விவசாய இயக்குநர்,
சென்னை-5.

## தமிழ் நாடு அரசு

### தொழில், வணிகத் துறை

ரசாயன சோதனை, ஆய்வுக்கூடம், கிண்டி,

கனிப் பொருட்கள், தாதுப் பொருட்கள் மற்றும் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள், ஆகியவற்றை சுரங்கவாயில்கள், துறைமுகங்கள், பிற ஏற்றுமதி இறக்குமதி நிலையங்கள் ஆகியவற்றில் அனைத்துலக நியதி முறைப்படி ரசாயன சோதனை செய்வதற்கும் சான்றிதழ்கள் வழங்குதற்கும் :

இச்சோதனைக் கூடம் உலோகங்களையும், உலோகக் கலவைகளையும் கீழ்க்கண்ட வகையில் சோதனை செய்யும் :

1. டென்சைல், கம்ப்ரஷன் ஹார்ட்னெஸ், அல்ட்ராசானிக் ஃப்ளா டிடெக்ஷன், மாகனட்டிக் க்ராக் டிடெக்ஷன், பெண்ட் டெஸ்ட், இம்பாக்ட் டெஸ்ட், இண்டஸ்டிரியல் ரேடியோக்ராஃபி, இரும்பு, இரும்பு அல்லாத உலோகங்களுக்காக, மைக்ராஸ்கோபிக் சோதனை.

2. ரப்பர், ப்ளாஸ்டிக்ஸ், தாள்கள், துணிகள் போன்றவைகளைச் சோதித்தல் (பிசிகல் டெஸ்ட்டிங்).

3. வார்ப்பிட மணல் ஆய்வு (பவுண்டரி சாண்டு டெஸ்டிங்).

தரம் குறைந்த தாதுப் பொருட்களுக்குத் தர மேம்பாட்டு வேலையும் இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

ரசாயன மற்றும் சார்புத் தொழில்கள் சம்பந்தமாக முன்னோடி ஆய்வு செய்வதற்காக, இச்சோதனைக் கூடத்தில் ரசாயன, பொறியியல் துறைப் பிரிவும் இணைக்கப்பட்டுள்ளது.

ரசாயனத் தொழில் சம்பந்தப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதில் தொழில் அதிபர்களுக்கு ஆய்வு சோதனைக் கூட உதவிகள் அளிக்கப்படும். ரசாயனத் தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்ற தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க :

துணை இயக்குநர் (ரசாயனங்கள்)

ரசாயன சோதனை ஆய்வுக் கூடம்.
(கெமிக்கல் டெஸ்டிங்,
அனலிட்டிகல் லாபாரட்ரி)
சென்னை-32.

தொலை பேசி : 801646.

---

## தமிழ்நாடு அரசு வனத்துறை

### அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக கீழ்க்காணும் வேலைக்கான அரசு முத்திரையிடப்பட ஒப்பந்தப் புள்ளிகள் வனப் பாதுகாவலர், அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2 அவர்களால் 13—8—1971 காலை 11 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வேலையின் விபரம். | வேலையின் உத்தேச மதிப்பு. | உடன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கூடலூர் தாலூகா பந்தலூரில் ஒரு தங்கும் விடுதி கட்டுதல். | 50,000 | 1,500 |

ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களையும் முழு நிபந்தனைகளையும் பிரதி ஒன்றுக்கு ரூ. 4·12 செலுத்திக் கீழ்க்காணும் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

த. அச்சையா, I.F.S.
வனப் பாதுகாவலர்,
அரசினர் தேயிலைத் திட்டம்

குன்னூர்,
23—7—71.

---

## தமிழ்நாடு வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மைலார் ரப்பர் கூப்பு 59 லிருந்து சுமார் 425 கன மீட்டர் தடிகளை ஏற்றி நாகர்கோவிலிலுள்ள வனமண்டிக்கு கொண்டு சேர்ப்பிக்க அரக்கு முத்திரையிட்ட டெண்டர்கள் 30–8–1971ம்நாள் மதியம்12–00 வரை மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன்பேரில் விவரங்களுக்கு குலசேகரத்திலுள்ள (மரங்கள் வெட்டும் பிரிவு) வனத்துறை அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

---

## மீனவர் பயிற்சி நிலையம் தூத்துக்குடி.

திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சிகள் 15–9–1971 முதல் (10 மாத காலம்) அளிக்கப்படும்.

1. நவீன மீன்பிடி முறை.

2. சிறுதரக்கம்மியர் பயிற்சி (ஜூனியர் மெக்கானிக் பயிற்சி)

நவீன மீன்பிடி பயிற்சிக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 35 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் 25–8–1971 மாலை 5 மணி வரை மீன்துறை உதவி இயக்குநர் மீனவர் பயிற்சி நிலையம், தூத்துக்குடி–1 அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விபரங்களை மேற்கூறிய உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சே. ஆரோக்கியசாமி,
மீன்துறை துணை இயக்குநர்,
தூத்துக்குடி.

# தமிழ்நாடு அரசு

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பிரிவு), கிண்டி, சென்னை–25.
## சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :

வேலையின் எண் 1 .. .. மதுரைப் பல்கலைக் கழகத்தில் 30,000 காலன் திறனுள்ள ஆர். சி. சி. மேல்மட்ட தண்ணீர்த் தொட்டி கட்டுதல்.

வேலை எண் 2 .. .. மதுரை, மதுரை-தேனீ சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் கணிதத் துறைக்காக ஃபேகல்டி கட்டிடம் கட்டுதல்.

வேலை எண் 3 .. .. மதுரை, மதுரை-தேனீ சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் அஞ்சல் அலுவலகம் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், மேலே கண்ட வேலைகளைத் தொழில் நுட்பக் கல்விப் பகுதிகளில் மேற்கொள்ளுவதற்காக, உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மேலே கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் 23—8—1971 பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால், அதே நாளில் மாலை 3-30 மணிக்கு, வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. | வேலை எண் 3. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத்தொகை. | மொத்தத்தொகை. | மொத்தத்தொகை. |
| 2 கட்டுத் தொகை ... .. | 1,875 | 4,000 | 1,375 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை பிளானுடன். | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்.) | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்.) | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்.) |
| 4 வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதம். | 8 மாதம். | 6 மாதம். |
| 5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேலே கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக் கூடிய தேதிகள். | 12—8—1971 முதல் 21—8—1971. | | |
| 6 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்க தகுதி வாய்ந்த பதிவாளர் பிரிவு. | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் (எக்காரணம் கொண்டும் இது திருப்பித் தரப் படாது) அரசு கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ '' P. W. Remittances III other Remittances '' என்ற தலைப்பில் மதுரை, பல்கலைக் கழக டிவிஷன் நிர்வாகப் பொறியாளர் கணக்கில் கட்ட வேண்டும். விற்பனை வரியை தனி சலானில், கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்கிலோ '' XII. Sales-tax (b) Receipts under State Sales-tax Act. General Sales-tax '' என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். சலான்கள் வந்த பின்னரே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப் படும். சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் கட்டுமானப் பிரிவில் ஏற்ற பிரிவில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப் படமாட்டா.

கட்டுத் தொகை, சலான் வடிவிலும், ஷெட்டியூல் பாங்குகளின் ' கால் டிபாசிட் ' தொகை வடிவிலும் பெற்றுக் கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள், மாநில மின்சார வாரிய ' பாண்டுகள் ' தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியனவும் கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சத விகிதம் குறைவாக அல்லது நிர்ணய மதிப்பு, இதில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி தர உத்தேசித்திருப்பவர்கள், உரிய வேலைப் பிரிவில் பெரியகட்டுமான வேலைகளை மேற்கொள்வதில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க சென்னை-25, தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
**சென்னை.**

## தமிழ்நாடு நீர் வழங்கல் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் :—

ஆலந்தூர் நீர் வழங்கும் திட்டம் — இரண்டாம் கட்டம்—முதல் கட்டம்—இரண்டாவது பாகம்—2ஏ, 2பி, 3ஏ, 3பி பிராந்தியங்களுக்கு வினியோக முறைகள். சி. ஐ., ஏ. சி. பைப்புகள் ஸ்பெஷல்கள் அமைத்தல், இணைத்தல்.

தமிழ் நாடு நீர் வழங்கல், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் மேலே கண்ட வேலைக்கான துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின், உரிய பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் சர்க்கிள், சென்னை—8 அவர்கள் தமது அலுவலகத்தில் 30—8—1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3—30 மணிக்கு மேல் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதாரத் துறை சர்க்கிள் அவர்களால் எண் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை—8-ல் அவ்வமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2.

கட்டுத்தொகை—ரூ. 4,540

(ரூபாய் நாலாயிரத்து ஐந்நூற்றி நாற்பது மட்டும்).

(அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெற வேண்டும்)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை—ரூ. 10–35

(பத்து ரூபாய் முப்பத்தி ஐந்து காசுகள் மட்டும்).

** ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணங்கள், நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீரிங் டிவிஷன் சென்னை—4—அவர்கள் கணக்கில் பி. டபிள்யூ III ஒ. ஆர். என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை—I—பொது விற்பனை வரி என்ற தலைப்பிலும் தனித்தனி சலான்களில் சேர்க்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம் .— நிர்வாக இஞ்சினீயர் (பொ. சு), பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன், 1/14, எட்வேர்டு எலியட்ஸ் சாலை, சென்னை—4 அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம்.

(ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பண அஞ்சல் மூலமோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலை முடிக்கவேண்டிய காலம்: 8 மாதங்கள்.

**சூப்ரண்டிங் இன்சினீயர்,**
பொது சுகாதார இன்சினீயரிங் சர்க்கிள், சென்னை—8.

---

## தமிழக அரசு நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை, மறு அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்தரவுப்படியும், கோயமுத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அரக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18-ம் நாள் மாலை 3-00 மணி வரையில் கோயமுத்தூர் ரத்தின சபாபதி புரம் வெங்கட்ரமண சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி டெண்டர்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண் | வேலையின் பெயர் | கோட்டம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | கோயமுத்தூர் நகராட்சியின் எல்லைக்குள் சேலம் கொச்சி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை 47) (அவிஞசி சாலை) மைல் 328/7-ல் தற்போதைய ரயில் சந்திக்குப் பதிலாக ஒரு மேம்பாலம் கட்டுதல். | கோயமுத்தூர் | 82,200 |

டெண்டர் நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றைக் கோவை கோட்டப் பொறியாளரிடமிருந்து மேற்கண்ட வேலைக்கு ரூ. 100 உடன் விற்பனை வரியும் செலுத்தி 4—8—1971 முதல் 17—8—1971 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. டெண்டர் நாளன்று டெண்டர் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோவை கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லு சீட்டை டெண்டருடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானல் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக்கான ஒப்புதலையும் சேர்த்து டெண்டருடன் இணைக்க வேண்டும்.

**பா. சேக்உமர்,**
மேற்பார்வை பொறியாளர் (நெ.கி.ப.)
கோவை—2

## தமிழ் நாடு குடிநீர்—வடிகால் வாரியம்

சீட்-டெண்டர் அறிவிப்பு

தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கடித உறையின்மேல் கீழ்க்குறிப்பிடப்பட்ட பணியின் பெயர் எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள், மக்கள் நல்வாழ்வு பொறியியல் துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது அவைபோன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளரால் (மக்கள் நல்வாழ்வு பொறியியல்) எண் 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியிலுள்ள அவரது அலுவலகத்தில் 25—8—1971 அன்று மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3–30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

**வேலையின் பெயர் :**

மக்கள் நல்வாழ்வு பொறியியல் பிரிவு, திருச்சி—நன்கு சோதனை செய்யப்பட்டு ISS /226/1962-லும் அதன் பின்பு திருத்தப்பட்ட விதிகளில் குறிப்பிட்டபடியுள்ள எம். எஸ். ராட்ஸ் சப்ளையும் டெலிவரியும் செய்தல்.

**ஒப்பந்த வகை :**

முழுத் தொகை.

**முன் வைப்புத் தொகை :**

ரூ. 6,000 (ஆறுயிரம் ரூபாய் மட்டும்.)

இந்தத் தொகை, டெண்டருடன் கஜானு செலாணுக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கில் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு பொறியியல் கோட்டம், திருச்சி-3ன் கணக்கில் வழங்கக்கூடிய பாங்க் காரண்டியாக (guarantee) செலுத்தப்படவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் செக் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் :**

2 மாதம்.

**டெண்டர் பத்திரங்களின் விலை :**

ரூ. 15·45 (விற்பனை வரி உட்பட).

டெண்டர் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு-பொறியியல் கோட்டம், B-15, தில்லைநகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் கிடைக்கும். (21—8—1971 மாலை 5 மணி வரை.)

(ஒ—ம்) **கே.கோவிந்த மேனன்,**
மேற்பார்வை பொறியாளர்,
(P.H.E.).

மதுரை-2,
20—7—71.

---

## தமிழ் நாடு அரசு அறிவிப்பு

வேலையில்லாமலிருக்கும் மருத்துவப் பட்டதாரிகள் கவனத்திற்கு!

மருத்துவப் பட்டதாரி உதவியாளர் பணிக்காக (அசிஸ்டெண்ட்சிப்) மருத்துவப் பட்டதாரிகளிடமிருந்து (எம்.பி.பி.எஸ்.) அடியில் குறிப்பிட்ட அலுவலருக்கு 1971 ஆகஸ்டு 12ஆம் நாள் அல்லது அதற்கு முன்னதாக வந்து சேரும்படியாக விண்ணப்ப மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான மனுக்கள் குறிப்பிடப்பட்ட படிவங்களில் தமிழ் நாடு மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தில் கிடைக்கும்.

2. தகுதி:

(அ) தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ கல்லூரியில் படித்து எம்.பி.எஸ். பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) தமிழ் நாடு மருத்துவ மன்றத்தில் (மெடிக்கல் கவுன்சில்) பதிவு செய்திருக்க வேண்டும்.

3. உதவியாளராகப் பணிக் (அசிஸ்டெண்ட்சிப்) காலம் : ஓர் ஆண்டு.

4. படி விகிதம் (Fixed Allowance) : மாதம் ரூ. 250.

5. இந்த உதவியாளர் பணி, வட்ட (தாலுகா) தலைநகரிலுள்ள மருத்துவமனைகள் மற்றும், கிராம மருத்துவ நிலையங்களுடனும் இணைக்கப்படும். எந்த மருத்துவமனையில் இணைக்கப்பட விரும்புகிறார் என்பதை விருப்ப வரிசையில் (ஆர்டர் ஆப் பிரிபரென்ஸ்) மனுதாரர் குறிப்பிடலாம் ; ஆனல், அவரை எங்கு நியமிக்க வேண்டும் என்று நியமன அதிகாரி எடுக்கும் முடிவே இறுதியானது ஆகும்.

6. உதவியாளர் பணியினை, நியமனதாரரோ, நியமன அதிகாரியோ எந்தவித முன் அறிவிப்பு இல்லாமலும் காரணம் காட்டாமலும் நிறுத்திக் கொள்ளலாம். நியமன அதிகாரியின் முடிவே இறுதியானது ஆகும்.

குறிப்பு.—இந்த ஓராண்டுக் காலத்திற்குள், தான் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ நிலையத்தினைச் சுற்றியுள்ள வட்டாரத்தில் தனியாக மருத்துவத் தொழில் புரிய வழிவகை தேடிக்கொள்ள இந்தப் பட்டதாரி முயற்சிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இயக்குநர்,**
மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை
சென்னை-6.

---

## பொறியியற் கல்லூரி, கிண்டி, சென்னை-25 அளிக்கும்

கம்பியூட்டர் மற்றும் மானேஜ்மெண்ட் பயிற்சி. 1971 செப்டம்பர் 2 முதல் அக்டோபர் 22 வரை.

தொழில் புரியும் பொறியாளர்கள், மானேஜர்கள், அரசுத் துறைகள், பொதுத் துறைகள், தனியார் துறைகளிலுள்ள தொழிற் கூடங்களில் பணியாற்றும் நிருவாகிகள் கலந்து கொள்ளலாம்.

**தகுதிகள்:**

பொறியியல் பட்டம் (Degree in Engineering) விஞ்ஞானத்தில் பட்ட மேல் படிப்பு (Post graduate Degree in Science) அல்லது அதற்குச் சமமானது.

**மனுக்கள்** பெறக் கடைசித் தேதி: 23—8—1971.

**சம்பளக்** கட்டணம்:

ரூ. 600.

மேல் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

டீன் (P. G. Studies),
பொறியியற் கல்லூரி,
கிண்டி, சென்னை-25.

**இயக்குநர்,**
தொழிற் கல்வி, சென்னை-25.

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை.

தமிழ் நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் டெண்டர்களை மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்தி லுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—8—1971 (வியாழன்) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ் நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற் பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாஸிட். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| | | ரூ. | |
| 1 | கும்பகோணம் நகரசபை எல்லைக்குள் கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையில் மைல் 0/7-ல் ஒரு மேம் பாலம் கட்டுதல். | 31,000 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), தஞ்சாவூர். |
| 2 | முத்துப்பேட்டை — மீமிசல் சாலையில் கி.மீ. 58/2 (மைல் 36/3-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 7,350 | ஷை |
| 3 | முத்துப்பேட்டை— மீமிசல் சாலையில் கி.மீ. 65/8 (மைல் 41/1-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 5,500 | ஷை |
| 4 | பட்டுக்கோட்டை ஒன்றியம் பலத்தலை கிராமசாலையில் நரையாற்றின் குறுக்கே மைல் 0/8-ல் ஒரு தரைப் பாலம் கட்டுதல். | 3,000 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள் வதன்மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ் சாலை—கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலா சத்திலிருந்து 11—8—1971 முதல் 25—8—1971 வரை யிலான வேலைநாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

ஏலம் பற்றிய நிபந்தனைகள் மற்றும் விதிகளை ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப்பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒ-ம்) எஸ். கே. காளிமுத்து,

கண்காணிப்பாளர்,

மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு.

---

## தமிழ் நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை
### சென்னை வட்டம், சென்னை—25.

### குறுகிய கால ஒப்பந்த விளம்பரம்.

தமிழ் நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 18—8—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண். (1) | வேலை விபரம். (2) | முன்வைப்புத் தொகை. (3) |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | தேசீய நெடுஞ்சாலை எண் 46—கிருட்டிண கிரி —இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 52·6 முதல் 65·6 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 32,510 |
| 2 | தேசீய நெடுஞ்சாலை எண் 46, கிருட்டிண கிரி —இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 75·0 முதல் 85·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 26,100 |
| 3 | தேசீய நெடுஞ்சாலை எண் 46 கிருட்டிண கிரி—இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 85·0 முதல் 95·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத் | 21,00 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை—கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும், ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் டேவணித் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதலைப் பெற்று டெண்டருடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வை பொறியாளர்
(நெ.கி.ப).

---

## ஏல விளம்பரம்

ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்த கிழக்கு மற்றும் மேற்குப் பகுதித் தோட்டங்களில் உள்ள கீழ்க் கண்ட மரங்களிலிருந்து பலன்களைச் சேகரித்துக் கொள்ளும் உரிமையை ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலகத்தில் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26—8—1971 காலை 11-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | மா மரங்கள் | 847 |
| 2 | புளிய மரங்கள் | 233 |
| 3 | இலுப்பை மரங்கள் | 479 |
| 4 | விளா மரங்கள் | 22 |
| 5 | முந்திரி மரங்கள் | 43 |
| 6 | நெல்லி மரங்கள் | 32 |
| 7 | கொய்யா மரங்கள் | 17 |
| 8 | தென்னை மரங்கள் | 377 |
| 9 | பலா மரங்கள் | 41 |
| 10 | பனை மரங்கள் | 1,549 |
| 11 | இலவம் பஞ்சு | 29 |

4 தேசிய நெடுஞ்சாலை எண் 46—கிருட்டிணகிரி—இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 96·0 முதல் 103·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். 24,320

5 தேசிய நெடுஞ்சாலை எண் 46—கிருட்டிணகிரி—இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 103·0 முதல் 110·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். 23,385

6 தேசிய நெடுஞ்சாலைஎண் 46—கிருட்டிணகிரி——இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 110·0 முதல் 115·135 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். 16,430

ஒப்பந்தங்கள் 18—8—1971 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரை படங்கள் முதலியனவற்றை கோட்டப் பொறியாளர், வேலூர் அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 51·50 கட்டி 6—8—1971 முதல் 17—8—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப்பணித் துறை), வேலூர், அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) வேலூர் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை.)

சென்னை 25
நாள் : 15—7—1971.

## தமிழ் நாடு அரசு

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

### ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4, அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 30—9—1971-அன்று மாலை 3—00 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4—00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். | உள் வேலை. | கட்டுத் தொகை ரூபாய். | ஒப்பந்தப் பத்திரங் களின் விலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பெர்கூசன் ரிக்குகளுக்கு (Rigs) சிறப்புக் கருவிகள் வழங்கல். | 9,000 | ரூபாய் 10 விற்பனை வரி 40 காசு. |
| 2 | (1) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் [துண்டுகள் மற்றும் துளை திறப்பான்கள்] வழங்கல். | 12,000 | ஷை |
| | (2) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (மட் பம்பு மற்றும் குழாய் வெட்டும் கருவி) வழங்கல். | 3,000 | ஷை |
| | (3) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (டவுன் தி ஹோல் ஹேமர்ஸ், பிட்டுகள்) வழங்கல். | 15,000 | ஷை |
| 3 | கேசிங் பைப்புகள், துணைப் பொருள்கள் வழங்கல். | 10,000 | ஷை |
| 4 | ஹைடிராலிக் ஜாக் பம்பு, ஜாக் வழங்கல். | 6,000 | ஷை |
| 5 | ஜியோபிசிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 21,400 | ஷை |
| 6 | ஜியோ கெமிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 3,200 | ஷை |
| 7 | போட்டோ ஜியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 | ஷை |
| 8 | ஹைடிராலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 6,000 | ஷை |
| 9 | ஹைடிரோ மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 | ஷை |
| 10 | ஹைடிரோ ஜியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 15,200 | ஷை |
| 11 | வரை தளவாடங்களும் புகைப் படக்கருவியும் வழங்கல். | 400 | ஷை |

ஒப்பந்த வடிவம் : மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம் 9.

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 3 மாதங்கள்.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தேதி. } 1—8—1971 முதல் 25—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி யளிக்க இயலாது) அரசாங்க கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public works Remittance III other Remittance" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரவினம், பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டு செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.

## தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வுக் கழகம்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மனுக்கள் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாள் மாலை 5 மணி வரை தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் ஏற்றுக்கொள்ளப் படும் :—

1. போர்மென் இன்ஸ்ட்ரக்டர் (செராமிக்ஸ்)—ஒன்று. செராமிக் ட்ரெயினிங் ஸ்கூல்

2. செராமிக் அசிஸ்டண்ட் (கில்ன்)

சர்வீஸ் சென்டர் ஃபார் செராமிக் விருத்தாசலம்—ஒன்று

சம்பளம் : ரூ. 400—15—475—20—575—25—650 மாதம் ஒன்றுக்கு

வயது : (1) போர்மன் இன்ஸ்ட்ரக்டர் (செராமிக்ஸ்)

1—7—1971-ம் நாளில் 40 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(2) செராமிக் அசிஸ்டெண்ட் (கில்ன்).

1—7—1971 நாளில் 45 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

தகுதிகள் (1) போர்மென் இன்ஸ்ட்ரக்டர் (செராமிக்ஸ்) வேலைக்கு.

(அ) (1) செராமிக்ஸ் பாடத்தில் பல்கலைக் கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம், கல்வி நிலையம், அல்லது மத்திய மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் மூலம் பெற்ற பட்டம் அல்லது டிப்ளோமா, அல்லது விருத்தாசலத்தில் உள்ள செராமிக்ஸ் ட்ரெயினிங் ஸ்கூல் அளிக்கும் தகுதிச் சான்றிதழ் ஏதாவது ஒன்று பெற்றிருக்க வேண்டும்.

2. பட்டம் பெற்றவர்களாக இருந்தால் ஒரு ஆண்டுக்குக் குறையாமலும் டிப்ளோமா, அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றவர்களாக இருந்தால் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும் செராமிக் பாக்டரி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) (1) ஒரு செராமிக் பாக்டரியில் ப்ரொடக்ஷன் அசிஸ்டெண்டாக ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2 செராமிக் அஸிஸ்டெண்ட் (கில்ன்) பணிக்கு.

செராமிக்ஸ் பாடத்தில் பட்டம், அல்லது டிப்ளோமா அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

செராமிக் பாக்டரியில் கில்ன் பிரிவில் ஒய்ட் வேர்ஸ் மானுபாக்சரிங் பணியில் பட்டம் பெற்றவர்களானால் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும் டிப்ளோமா, சான்றிதழ் பெற்றோர் ஐந்து ஆண்டுகளுக்குக்குறையாமலும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

செராமிக் பாக்டரியில் ஒய்ட் வேர்ஸ் உற்பத்தி செய்வதில் கில்ன் சூப்பர்வைசராகவோ அல்லது, போர்மேனாகவோ ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாடு நெடுஞ்சாலை எஞ்சினீயரிங் சபார்டினேட் சர்வீசின் கீழ், ஹைவேஸ் ரூரல் ஒர்க்ஸ் துறையில் சூப்பர்வைசர் ரூரல் வாட்டர் சப்ளை போர் வெல்ஸ்—ஒன்று.

சம்பளம்: ரூ. 325—15—475—20—575— 25 — 650 மாதம் ஒன்றுக்கு

வயது : 1—7—1971-ம் நாளில் 25 வயதுக்குக் கீழ் இருக்க வேண்டும்

தகுதிகள் : (1) மெக்கானிக்கல் எஞ்சினீயரிங் படித்து பட்டம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது எல்.எம்.இ. அல்லது எல்.ஏ.இ. டிப்ளோமா வேண்டும்.

(2) தொழிற்சாலையில் 6 மாதங்களுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3 தமிழ்நாடு எலக்டிரிகல் இன்ஸ்பெக்டரேட் சப் ஆர்டினேட் சர்வீஸில் ஜூனியர் எலக்ட்ரிக்கல் இன்ஸ்பெக்டர்—எட்டு இடங்கள்.

சம்பளம் : ரூ. 400—15—475—20—575 — 25 — 650 மாதந்தோறும்.

வயது : 1—7—1971-ம் நாளில் 28 வயதுக்குக் கீழே இருக்க வேண்டும்.

தகுதி : பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தின் மூலம் எலக்ட்ரிகல் இஞ்சினீயரிங் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சம் கேட்கப் பட்டுள்ள கல்வித் தகுதியைவிட அதிகமான தகுதி பெற்றுள்ள தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர், பிற்பட்டோர் ஆகியவர்களுக்கு வயது வரம்பு கிடையாது. மற்ற தாழ்த்தப்பட்டோர் மலைஜாதியினர் விஷயத்தில் வயது மேல் வரம்பு ஐந்து ஆண்டுகள் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்திரவால் பாதிக்கப்பட்டவர்கள், பொற்கொல்லர்கள், அவர்களுடைய மகன், திருமணமாகாத மகள் ஆகியோருக்கும் 1—1—1963-ம் நாளிலோ அதற்குப் பின்னரோ தேசிய மாணவர் படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டர் பதவியில் முழு நேரப் பொறுப்பேற்றிருந்த முன்னாள் என். சி. சி. கேடட்கள் ஆகியோருக்கும் வயதைப் பொறுத்தவரை சலுகைகள் அளிக்கப்படும். 1—7—1971-ல் நாற்பது வயதுக்குக் குறைவாக இருக்கும் முன்னாள் ராணுவ வீரர்கள், 1—1—1964-க்குப் பிறகு கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி இந்தியாவுக்கு வந்தோர், இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டோர் ஆகியோருக்கு தகுதி, வயது இரண்டிலும் சலுகைகள் உண்டு.

மனுப்படிவங்களும் விளக்கத் தாள்களும் பெறுவதற்கு செயலாளர், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வுக்கழகம், சென்னை2 என்ற முகவரிக்கு, 20 காசு அஞ்சல் தலை ஒட்டி சுய முகவரி எழுதி 23 சென்டிமீட்டர் 'நூல் அஞ்சல்' என்றும் குறிப்பிடப்பட்ட நீளமுள்ள உறை ஒன்றினை உள் வைத்துக் கடிதம் அனுப்ப வேண்டும்.

# தமிழ்நாடு அரசு

## (வேளாண்மைத் துறை)

### ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், திருச்சி வட்டார வேளாண்மைப் பொறியாளரால், நிறுவனங்களிலிருந்து கீழ்க்கண்ட பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16–8–1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

அந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஒத்தி வைப்பதாக விளம்பரப் படுத்தப்பட்டாலொழிய அதே நாள் 4 மணிக்கு, அப்போது வந்திருக்கும் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் திருச்சி, கோட்ட வேளாண்மைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

| எண். (1) | தேவை. (2) | விளக்கம். (3) | விலை மதிப்பீடு. (4) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 5 | 20 'எச்பி.' மின்சார பம்புசெட் ஸ்டார்ட்டர், சுவிச் உள்ளதும், 40 அடிக்கு மேல் 6"×5" அளவில் நீர் உறிஞ்சி எடுக்க வல்லதும்—ஒவ்வொன்றும் 625 ஜி. பி. எம். நீர் இறைக்கக் கூடியதும் (விற்பனைவரி முதலியன அனைத்தும் சேர்த்து) | 48,000 |
| 2 | 2 | 15''×3'' அளவுள்ள ஜி. ஐ. டி. சப்ளை செய்வது முதலியன உட்பட. | |
| 3 | 11 | 12''×3'' அளவுள்ள ஜி.ஐ. டி. சப்ளை செய்வது முதலியன உட்பட. | |
| 4 | 3 | 9''×3'' அளவுள்ள ஜி.ஐ. டி. சப்ளை செய்வது முதலியன உட்பட. | |
| 5 | 20 | 3'' அளவுள்ள ஓர்ரிசெஸ் வால்வுகள் சப்ளை செய்வது, விற்பனை வரி முதலியன உட்பட. | |
| 6 | 16 | 3'' அளவுள்ள சுலுயிஸ் வால்வுகள் சப்ளை செய்தல். (விற்பனை வரி முதலியன உட்பட.) | |
| 7 | 4 | 9'' அளவுள்ள ஜி. ஐ. கேட் வால்வுகள் சப்ளை செய்தல் (விற்பனை வரி முதலியன உட்பட) | |
| 8 | 40 மீட்டர்கள் | 6'' விட்டமுள்ள ஜி.ஐ. குழாய்கள் சப்ளை செய்தல், விற்பனை வரி முதலியன உட்பட. | |
| 9 | 20 (மீட்டர்கள்). | 5'' விட்டமுள்ள ஜி. ஐ. குழாய்கள் சப்ளை செய்தல், விற்பனை வரி முதலியன உட்பட. | |
| 10 | 4 | 6'' விட்டமுள்ள கப்ளிங் சப்ளை செய்தல், விற்பனைவரிமுதலியன உட்பட. | |
| 11 | 20 | 6'' விட்டமுள்ள ப்ளாங்ஸ் சப்ளை செய்தல் (விற்பனைவரிமுதலியன உட்பட). | |
| 12 | 4 | 6'' விட்டமுள்ள ஜி. ஐ. பெண்ட் சப்ளை செய்தல், (விற்பனை வரி முதலியன உட்பட). | |
| 13 | 4 | 5'' விட்டமுள்ள ப்ளாங்ஸ் சப்ளை செய்தல் (விற்பனை வரி முதலியன உட்பட). | |

**டெண்டர் படிவம் விலை :—ரூ. 3 (3 சதவிகிதம் விற்பனை வரி)**

(1) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், உதவி வேளாண்மைப் பொறியாளர், மண்வள பாதுகாப்புத் திட்டம், 75-ஏ, சாலை ரோடு, திருச்சி–3 என்ற அலுவலகத்திலிருந்து பெறலாம்.

(2) ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வேலை நாட்களில் காலை 10–30 மணி முதல் மாலை 4 மணி வரை கிடைக்கும். பத்திரங்களுக்கான விலையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ பத்திரம் தேவை என்று கோரிக்கை விடுத்துப் பெறலாம்.

(3) ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலைத் தொகை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது.

(4) ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் தள்ளி விடவோ ரத்து செய்துவிடவோ திருச்சி தோட்ட வேளாண்மைப் பொறியாளருக்கு முழு உரிமையும் உண்டு.

**கோட்ட வேளாண்மைப் பொறியாளர்,**
**திருச்சி.**

## தமிழ்நாடு நீர் வழங்கல் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

தமிழ்நாடு நீர் வழங்கல், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், துறையின் முறைப்படி உள்ள வடிவத்தில், மேலுறைக்கு மேலே வேலையின் பெயர் குறிக்கப்பட்ட, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை பொது சுகாதார இஞ்சினீயரிங் துறையில் (த. நீ. வ. வா.), பொதுப் பணித் துறை, நெடுஞ் சாலை, கிராமப் பணித் துறை அல்லது அதுபோன்ற வேறு அரசுத் துறைகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இன்சினீயர் (பொ. சு. இ.) எண் 17, சர் பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் தமது அலுவலகத்தில் 25–8–1971 புதன் கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு அவை திறக்கப்படும்.

**வேலையின் பெயர்:—**

லப்பைக்குடிக்காடு நீ.வ.தி—இரண்டாம் கட்டம்—ஹெட் வொர்க்ஸ்—சப்மர்சிபிள் பம்பு செட்டுகள், துணைக் கருவிகள் சப்ளை, டெலிவரி, நிர்மாணம்.

**ஒப்பந்த முறை.—**

மொத்தத் தொகை.

**கட்டுத் தொகை:—**

ரூ. 1,400 (ரூபாய் ஒரு ஆயிரத்து நாநூறு மட்டும்)

ஒப்பந்தப் புள்ளியுடன், அரசு கருவூல சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ அல்லது தேச உடமையாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கின் பாங்க் கார்ண்டி வகையிலோ நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீரிங் டிவிஷன்—பி. 15. தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சிராப்பள்ளி—3, அவர்கள் கணக்கில் இத்தொகை கட்டப்பட வேண்டும்.

வேலையை முடிக்கவேண்டிய காலம் 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10–30 (பத்து ரூபாய்- முப்பது காசுகள் மட்டும்—விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தை நிர்வாக இஞ்சினீயர், பொதுசுகாதார இஞ்சினீரிங் டிவிஷன், பி. 15. தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சிராப்பள்ளி—3 அவர்களிடமிருந்து 6–8–1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கே. கோவிந்தமேனன்,
சூப்ரண்டிங் இஞ்சினீயர்,
(பொ.சு.இ)

மதுரை—2,
நாள்; 15—7—1971.

---

## தமிழ்நாடு வனத்துறை

## மதுரை வடக்குக் கோட்டம்

### ஸ்டேஷன் வேகன் ஏல விற்பனை

1955 மாடல் MSY 2667 பதிவு எண் கொண்ட பழுதடைந்த ஸ்டாண்டர்டு வேன் கார்டு ஸ்டேஷன் வேகன் ஒன்று அது எங்கு எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் தமிழ் நாடு கவர்னர் சார்பில் மதுரை வடக்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் (திண்டுக்கல்) அவர்களால் மதுரை காந்தி நகரிலுள்ள மதுரை மண்டல வனப் பாது காவலர் அலுவலகத்தில் 17—8—1971 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் அந்த வேனை, மதுரை மேலூர் சாலையிலுள்ள மதுரை தெற்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் பங்களா காம்பவுண்டில் பார்த்துக் கொள்ளலாம். விற்பனை நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(ஒ-ம்) கி. திருமலைராஜ்,
மாவட்ட வன அலுவலர்,
மதுரை வடக்குக் கோட்டம்
திண்டுக்கல்

திண்டுக்கல்,
21—7—1971


---

## தமிழ்நாடு அரசு போக்கு வரத்துத் துறை, சென்னை-2.

### ஒப்பந்த விளம்பரம்.

தமிழ்நாடு அரசாங்க ஆளுநரின் சார்பில், தமிழ்நாடு அரசுபோக்குவரத்து இலாகாவின் கட்டிடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்கு தமிழ்நாடு அரசுபோக்குவரத்துத் துறையிலுள்ள, விரைவு வண்டி பேருந்து நிலையத்தில் (எஸ்பிளனேடு) ஒரு சிறிய கடை குத்தகைக்கு விடப்படும். கடையில் உபயோகத்திற்கு தயார் செய்யப்பட்ட பங்க் ஒன்று (A pre-fabricated Bunk 10" × 9",) இந்த இலாகாவினால் கொடுக்கப்படும் முத்திரையிடப்பட்ட கவர்களில் டெண்டர்கள் 25–8–1971 மாலை 3 மணி முடிய கட்டிடப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை—2, அவர்களால் வரவேற்கப்படுகின்றன. டெண்டர்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும், டெண்டர் விதிமுறைகள் கட்டிட பொறியாளர் அலுவலகத்தில், எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

இயக்குநர்,
(த. அ. போ. து.)


நாம் போக நினைத்த இடத்திற்குத் தமிழ்நாடு இதோ, பாதை போட்டுள்ளதே!
மாநில உரிமைகள்
கோபன்...


ஊராட்சி ஒன்றியம் பட்டதாரிகளே வருக!
கிராமப்புறங்களில் சமூகப் பணியாற்று வதற்காக 2000 பட்டதாரிகளுக்கு (இளைஞர் அணி) வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.
கோபன்...

# அரசு அலுவலகங்களுக்கு அள்ளித்தரும் அருவி

அது ஓர் அரசு அலுவலகம், டக டக. . டக டக . . என ஓசை ஒலிக்க ஒரு பெண்மணி தட்டச்சினை இயக்குகிறார். அவர் பயன்படுத்தும் தட்டச்சு, தாள், பென்சில், ரப்பர் இத்தியாதி பொருள்கள் எங்கிருந்து அரசு அலுவலகங்களுக்குக் கிடைக்கின்றன ?

தமிழக அரசு எழுதுபொருள் கிடங்கு ஒன்று சென்னை துறைமுகப் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக எல்லையில் இயங்கி வருகின்றது.

**1953**-ஆம் ஆண்டு வரை இக்கிடங்கு சென்னை மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பில் இருந்து வந்தது. 15—7—1953-லிருந்து 'எழுதுபொருள் அச்சுத்துறை' என்னும் பெயரில் தனித்துறையாக இயங்கி வருகிறது. எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநரின் நேர்முகப் பார்வையிலும் உதவி இயக்குநரின் பொறுப்பிலும் இந்தக் கிடங்கு செயல்பட்டு வருகின்றது.

இந்த அலுவலகத்தின் தலையாய பணி, தமிழக அரசின் தலைமைச் செயலகம் முதல், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் எல்லா எழுதுபொருள்களும், தட்டச்சுகளும், கடைநிலை ஊழியர்களுக்கு உடைகளும் வழங்குதலாகும். மருத்துவ மனைகளில் பணியாற்றும் எல்லாக் கடைநிலை ஊழியர்களுக்கும் உடைகள் வழங்குவதும் இவ்வலுவலகம் தான்.

எழுதிடவும் அச்சடிக்கவும் பயன்படும் தாள்கள்—அட்டைகள், தட்டச்சுகள், படிவம் எழுதும் படிப்பெருக்கிகள், கதர்த்துணி, மற்றும் அரசு அச்சகம்—சிறைச்சாலை ஆகியவற்றில் தயாரிக்கப்படும் எழுது பொருட்கள் நீங்கலாக அலுவலகங்களுக்குத் தேவையான இதர எழுது பொருள்களையும் ஆண்டு தோறும் டெண்டர் முறையைக் கடைப்பிடித்து ஆறு உயர் அதிகாரிகள் அடங்கிய சரக்குக்கொள் முதல்குழுவினரால்—தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து வாங்கிச் சேகரித்துப் பின் பல்வேறு அலுவலகங்களுக்கும் அந்தந்த அலுவலகத் தேவைப் பட்டியலுக்கிணங்கவும், எழுது பொருள் நடைமுறை நூல் விதிகளுக்கிணங்கவும் விநியோகிக்கப்படுகின்றன. தாள்களும், அட்டைகளும் டெல்லியிலுள்ள மைய அரசின் பொதுப்பங்கீட்டு இயக்குநரின் ஒதுக்கீட்டின்படி அவரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பேப்பர் ஆலைகளிலிருந்து கிடைக்கப் பெற்று, இருப்பில் வைத்து, மாநிலம் முழுவதும் உள்ள அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அதே போன்று தட்டச்சுகளும், படிபெருக்கி இயந்திரங்களும் அவரால் நிர்ணயிக்கப்பட்ட விலையின்படி அந்தந்தத்தயாரிப்பாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்று விநியோகம் செய்யப்படுகின்றன. தமிழக அரசு தலைமை அச்சகத்திற்கும், கிளை மற்றும் வட்டார அச்சகங்கள் அனைத்துக்கும் வேண்டிய அச்சடிப்பதற்கான தாள்கள் முழுதும் இந்த எழுதுபொருள் அலுவலகக் கிடங்கிலிருந்துதான் வழங்கப்படுகின்றன. மேலும்

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக 1083 ரூபாயை தொழிலாளர் நல அமைச்சரிடம் சேர்ப்பிக்கிறார் அச்சக எழுதுபொருள் துறை இயக்குநர் திரு ஜி. ரங்காராவ் ஐ.எ.எஸ். அவர்கள்.



தலைமைச் செயலகம், அமைச்சர்கள் அலுவலகம், மற்றும் சென்னையிலுள்ள இலாகா தலைவர்கள் அலுவலகங்களில் உள்ள அனைத்துத் தட்டச்சுகளையும் பழுது பார்த்திடும் பொறுப்பினையும் இவ்வலுவலகமே கவனிக்கிறது. மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் தட்டச்சு விநியோகிக்க நிலையான உத்தரவு பெறாத நிலையிலும், புதிய தட்டச்சுகள் கையிருப்பில்லாத நேரத்திலும் கடனுகப் பழைய தட்டச்சுகள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இவை தவிர அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் காலத்தில்—தேர்தலுக்கு வேண்டிய அனைத்து எழுதுபொருள்கள்—தட்டச்சுகள் வழங்கும் பணியையும், வாக்குச் சீட்டுகள் அச்சடித்து வழங்கும் பணியையும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு முன்னதாகவே இத்துறை செவ்வனே முடித்துக் கொடுத்து அரசின் சான்றையும் பெற்றிருக்கின்றது என்பதனை இங்குக் குறிப்பிடலாம்.

ஆண்டுக்குச் சுமார் 3,000 டன் தாள்கள், அட்டைகள் இதன் மூலம் பயன்படுத்தப்படுகின்றன.

1968–69-ல் 3,507 டன்கள் பேப்பர் ஆலைகளிலிருந்து வாங்கப்பட்டுள்ளது. 1969–70-ல் 2,669 டன்களும், 1970–71-ல் 3,864 டன்களும் வரப்பெற்றுள்ளன. 1971-72 ஆண்டிற்கான நமது 'பேப்பர்' தேவை 7,710 டன்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு அலுவலகங்களுக்குவழங்கப்பட்ட தட்டச்சுகளின் விவரங்கள் பின்வருமாறு:—

1968-69-ல் 429 ஆங்கிலத் தட்டச்சுகளும், 88 தமிழ் தட்டச்சுகளும் 1969–70-ல் 392 ஆங்கிலத் தட்டச்சுகளும், 152 தமிழ்த் தட்டச்சுகளும், 1970–71–ல் 585 ஆங்கிலத் தட்டச்சுகளும், 397 தமிழ் தட்டச்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.



தொழிலாளர் நலஅமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள் மருந்தகத்தைத் திறந்து வைக்கிறார்கள்.

இந்த எழுது பொருள்களுக்கான ஆண்டுச் செலவு எவ்வளவு தெரியுமா?

1967-68-ஆம்ஆண்டு பேப்பர், தட்டச்சு முதலியவை அடங்கிய எழுதுபொருள்கள் ஏறத்தாழ 86

அச்சக எழுதுபொருள்துறை துணை இயக்குநர் திரு நாகராசன் எம்.ஏ. வரவேற்றுப் பேசுகிறார்.



இலட்ச ரூபாய்க்குக் கொள் முதல் செய்யப்பட்டன. மூன்று ஆண்டுகளில் இது அதிகரித்து 1969-70 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடியைத் தாண்டி விட்டது.

இந்த அலுவலகத்தில் 252 நிரந்தர அலுவலர்களும், 38 தற்காலிக அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

அயராது உழைக்கும் இவ்வலுவலக ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் அரசின் எல்லாச் சலுகைகளையும் பெறுகின்றனர். அத்துடன் புதிய சலுகையாகச் சமீபத்தில் இங்கு மருந்தகம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. எழுது பொருள் அச்சக இயக்குநர் திரு ரங்கராவ் ஐ. ஏ. எஸ் தலைமையில் தொழிலாளர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்களால் இந்த மருந்தகம் திறந்து வைக்கப்பட்டது. எழுதுபொருள்—அச்சுத் துறைத் துணை இயக்குநர் திரு நாகராஜன் எம்.ஏ. அனைவரையும் வரவேற்றுப் பேசினார். எழுதுபொருள் உதவி இயக்குநர் திரு கோவிந்தராஜன் துறையின் செயல்முறை பற்றி எடுத்துக்கூறினர்.

தமிழக அரசு தனது ஊழியர்களுக்குப் பெருத்த அளவில் சம்பள உயர்வைக் கொடுத்திருப்பதால் அனைத்து ஊழியர்களும் ஓய்வு பெறும் சமயத்தில் மிகவும் கணிசமான தொகையை ஊழியக் கொடையாகவும் பெறுவதோடல்லாமல், தொடர்ந்து ஓய்வு ஊதியத்தையும் மற்றும் பல சலுகைகளையும் ஓய்வு பெறுகின்ற காலத்தில் பெற்று, வளமான வாழ்வை நடத்த வழிவகை செய்துள்ளது. ஒவ்வொரு அரசு ஊழியரும் அவரது குடும்பமும் வாழ்நாள் முழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதை உள்ளபடி உணர்ந்து இவ்வலுவலகத்தைச் சார்ந்த அனைத்து ஊழியர்களும் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும், தங்களது பணிகளைப் புதிய உற்சாகத்துடனும், எழுச்சியுடனும் செயலாற்றி வருகின்றனர்.



# தாய்மை வெல்லும்


இல. பழனியப்பன்

தாய்மை தெய்வீகமானது. மிக மிகப் புனிதமானது. தாய்மைக்குத் தலை வணங்காதவர்களை அகில உலகத்திலும்காண்பது அரிது. கண் கண்ட தெய்வம் அன்னைதான். தாய்மையின் போதுதான் பெண்மை பெருமையடைகிறது. ஒரு தாயின் அன்பைத் தவிர, உலகத்தில் எதை வேண்டுமானுலும் விலைக்கு வாங்கிவிடலாம். ஒரு தாய் எந்த விதமான தியாகத்தையும்ஏற்றுத் தன் செல்வங்களைக் காப்பாற்றும் தன்மை படைத்தவள். மற்றவர்களால் ஒரு தாயின் உன்னத இடத்தைப் பெற முடியாது. நாம் வாழும் நாடு தாய் நாடு. நாம் பேசும் மொழி தாய் மொழி. அன்னைக்குப் பின் தந்தை. தாய்க்குப் பின் தான் தாரம். உலக சமயங்கள், உலக இலக்கியங்கள் அனைத்தும் தாய்மையின் புகழ் பாடுகின்றன. அத்தகைய தாய்மைக்கு உலகெங்கணும் கொஞ்ச காலமாகச் சோதனை ஏற்படத் தொடங்கியிருக்கிறது. அத்தகைய நிலை நீடித்தால் தாய்மையின் நிலை என்னவாகும் என்பதை நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பழங்காலத்திலே நம் தாய்மார்கள் கர்ப்பிணியாக இருக்கும் பொழுது கடின வேலைகளைக் கூட மிக எளிதாகப் பார்க்க முடிந்ததே அந்நிலை இன்றுள்ளதா? தானுகப் பிறந்த குழந்தைகளை ஆயுதங்களின் உதவியுடன் வெளி உலகுக்குக் கொண்டுவரவேண்டிய நிலை இன்று சாதாரணமாக நிலவுகிறதே காரணமென்ன? தலைமுறை தலைமுறையாக வலிவோடும், பொலிவோடும் திகழ்ந்த நம் பெண்கள் இன்று உடல் மெலிந்து, உள்ளம் சோர்ந்து, வாழ்க்கையிலே விரக்தியோடும், வேதனையோடும் காணப்படுகிருர்களே? இந்நிலை நாட்டுக்கு நல்லதுதானு? வருங்காலச் சந்ததியினரை உருவாக்கும் தாய்க்குலம் தளர்ச்சியடையலாமா? இருபது வயதுப் பெண்மணிகூட முப்பது முப்பந்தைந்து வயது மதிக்கத் தக்க நிலையிலே களை இழந்து காணப்படுவதன் காரணமென்ன?

உடலிலே ரத்தமின்றி எலும்புக் குச்சிகளாக நம் கண்முன் நடமாடும் தாய்மார்களின் எண்ணிக்கைதான் எத்தனை? எத்தனை? இப்படி அடுக்கடுக்காய் வரும் கேள்விக் கணைக்கு அடிப்படைக் காரணம் இடைவெளியற்ற மகப் பேறுதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நம் இந்தியத் தாய்மார்கள் நாள் ஒன்றுக்கு 57,000 குழந்தைகளைப் பெற்றெடுக்கின்ருர்கள். ஒன்றரை விநாடிக்கு ஒரு குழந்தை வீதம் பிறந்து கொண்டே இருக்கிறது. எத்தனை மகப் பேறு நிலையங்களையும், மருத்துவ மனைகளையும், தாய்-சேய்நல விடுதிகளையும் ஏற்படுத்தினுலும், பிரச்சினையைச் சமாளிக்க முடியவில்லை. மகப் பேற்றுக்கு மருத்துவ மனைக்குச் செல்லும் தாய்மார்களைக் குழந்தை பிறந்த சில நாட்களிலேயே வீட்டிற்கு அனுப்ப வேண்டிய நிலைதான் இன்றளவும் நிலவுகின்றது. இப்படி மக்கள் தொகையின்அபரிமிதமான வளர்ச்சிக்கு நம் தாய்மார்கள் அடிப்படைக் கருவியாகவும், காரணமாகவும் இருக்கின்ற நிலை நமக்கும் நல்லதல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல.




மகப் பேற்றுக் காலத்திலே மருத்துவ விடுதியில் தாய்மார்கள் பிரசவ வேதனையில் விடும் கூக்குரலைச்செவிமடுப்போர் எல்லாரும் வாயடைத்துப் போய்விடுவார்கள். குழந்தைகளை வெளிக் கொணர டாக்டர்கள் ஒரு பேராட்டமே நடத்த வேண்டியநிலைஏற்பட்டுவிடுகிறது. அப்படிப் போராட்டம் நடத்தி வெளி உலகுக்குக் கொண்டுவரப் பட்ட குழந்தைகளில் எத்தனை உயிருடன் இருக்கின்றன என்பது இன்றளவும் கேள்விக் குறியாக இருந்து வருகிறது. அப்படியே காப்பாற்றப்பட்டாலும் எத்தனை குழந்தைகள் நல்ல முறையில் வளர்ச்சி யடைகின்றன என்பதும் மிகவும் சிந்திக்க வேண்டியதொன்று.


பல தாய்மார்கள் மூன்ருவது குழந்தையோ, நான்காவது குழந்தையோ பெறுகின்றபோது, அவர்கள் உயிர் பிழைப்பதே அரிதாக உள்ளது. வெளிப்படையாகச் சொல்லப்போனுல் இடைவெளியில்லாமல் மகப்பேற்றுக்கு இலக்காகும் தாய்மார்களில் பெரும்பான்மையோர் பிரசவ காலத்தில் இறந்து விடுகிருர்கள். அந்தத் தாய்மார்களின் கணவர்களுக்கு, வேறு மனைவிமார்கள்—மறு மணம் செய்து கொள்வதின் வாயிலாக எளிதில் கிடைத்துவிடலாம். ஆனுல், தாயை இழந்த சேய்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது என்பதை நாம் மறக்கக் கூடாது. தாயன்பு இன்றி ஏங்கும் அக்குழந்தைகளின் முறையான வளர்ச்சி பெரிதும் தடைப்படுகின்றது. அவர்களின் எதிர்காலம் இருள்மயமாகிவிடுகிறது. ஆயிரக் கணக்கான குழந்தைகள் நாள்தோறும் தாயன்பிற்கு ஏங்கித் தவிப்பதை நாம் காண்கிருேம். பிரசவ காலத்தில்தான் பெரும்பான்மையான தாய்மார்கள் இறக்கின்ருர்கள். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் நாம் தீர்வு காணுவிடில் அனுதைக் குழந்தைகளின் பிரச்சினை புதிய உருப்

பெற்று நம் வருங்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வைப் பாதித்து விடும்.

ஒரு குழந்தைக்கும், மற்றொரு குழந்தைக்கும் குறைந்த அளவு மூன்றாண்டு இடைவெளி இருக்க வேண்டும் என்பதை மனத்தில் கொண்டுதான் நம் பெரியவர்கள், பிரசவத்திற்குத் தாய் வீடு வரும் பெண்களை, பிறந்த குழந்தைக்கு இரண்டு வயது தொடங்கிய பின்னர் கணவன் வீட்டிற்கு அனுப்புவார்கள். குழந்தைப் பேற்றுக்குப் பின், பிரசவ காலத்தில் இழந்த சக்தியை ஈடுகட்டப் பச்சிலை மருந்துகளைத் தாய்மார்களுக்கும், மற்ற மருந்துகளைக் குழந்தைகளுக்கும் கொடுத்து வந்தார்கள். உணவுப் பழக்க வழக்கங்களை முறைப்படுத்துதல், புதிதாகக் குழந்தை பெற்ற தாய்மார்களுக்குக் குழந்தை வளர்ப்பு பற்றிக் கற்றுக் கொடுத்தல் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளத் தாய் வீட்டிலுள்ள பெரியவர்கள் காரணமாயிருந்தார்கள். எதிர்காலத் தாய்மார்கள் அதாவது திருமண வயதில் தாய் வீட்டில் இருக்கும் பெண்களும் இதனால் பயனடைந்து வந்தார்கள். ஆனால், தற்காலப் பொருளாதாரச் சூழ்நிலையில் கணவனும், மனைவியும் எப்பொழுதும் சேர்ந்தே வாழ வேண்டிய நிலையுள்ளது. மனைவியைத் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டுக் கணவன் உணவு விடுதிகளை நம்பி வாழ முடியாத நிலை ஒரு பக்கம், மகப் பேற்றுக்கு வரும் பெண்ணை அதிக நாள் வைத்துப் பராமரிக்க முடியாத பெற்றோர்களின் நிலை ஒரு பக்கம் காணப்படுகின்றது. அதனால் கணவன், மனைவி இல்லற வாழ்க்கையில் வாழும் காலம் அதிகமாகிவிட்டதால், சிறு குடும்ப நெறியைப் பின்பற்றுவதே தலைசிறந்த வழி. அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம். திட்டமிட்டு வாழ்வோர் தெவிட்டாத இன்பத்



தைப் பருகி வருவதை நாம் நேரடியாகக் காண்கிறோம். பணக்காரர்களும், வாழ்க்கையில் எல்லா வசதி பெற்றவர்களும், சிறு குடும்ப நெறியைப் பின்பற்றி வாழத் தலைப்பட்டுவிட்டார்கள். ஆனால், வாழ்க்கையின் அடித்தளத்திலே உழன்றுகொண்டிருக்கும் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும் இன்னும் சிறு குடும்ப நெறியைப் பின்பற்றாதிருப்பது மிகவும் வருத்தப்பட வேண்டியதொன்று. ஏழை, எளியவர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும்தான் சோதனையாக அதிகக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆகவேதான், ஏழை, எளிய மக்களும், நடுத்தர மக்களும் அதிகமாகவுள்ள நம் நாட்டில் நம் அரசாங்கமே குடும்ப நலத் திட்டத்தைத் தேசியத்




திட்டமாக உருவாக்கி அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்றி வருகிறார்கள். 1,000-க்கு 41 ஆக உள்ள பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு இருபத்தைந்தாக மிக விரைவிலே குறைக்க வேண்டும் என்பதே தேசிய குடும்ப நலத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள். தாய்மார்களின் நலம் நாடி, வருங்காலச் சந்ததியினரை வலிவுள்ளவர்களாக ஆக்குவதே இதன் அடிப்படை நோக்கம்.

உலக நிலப் பரப்பில் 2·4 சத வீதத்தைப் பெற்றுள்ள நம் நாட்டில், உலக மக்கள் தொகையில் 14 சத வீதம் பேர் வாழ்கின்றனர். உலக மக்களில் எழுவரில் ஒருவர் இந்தியர் என்றால் நம் நிலை என்ன என்பதை



நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. நம் இயற்கை வளங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. நிலத்தின் அளவும் குறைந்து வருகின்றது. இருக்கின்ற நிலப் பரப்பில் விவசாயம் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிலம் போக, மீதி நிலங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வருகின்றோம். அதைத் தொடர்ந்து தொழிலாளர் குடியிருப்பு முதலானவற்றை உருவாக்கி வருகிறோம். பருவ மழை அடிக்கடி தவறி விடுகின்றது. காட்டைத் திருத்தி நாடாக்குவதால் பல இயற்கை வளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் மக்கள் தொகை மட்டும் கணக்கிலடங்காமல் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலியா நாட்டையே நாம் உருவாக்குவது நல்லதுதானா என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொண்டு வாழ வேண்டிய நிலை வந்து விட்டது.

உலக நாடுகள் அனைத்தின் வளர்ச்சிக்கும் ஓர் கேள்விக் குறியாக, ஓர் தடையாக இருக்கும் அதிகமான மக்கள் தொகை வளர்ச்சி முறைப்படுத்தப்படுவதில் தான் தாய்மையின் வெற்றி அடங்கியிருக்கிறது. குழந்தைகள் பேசும் தெய்வங்கள் என்றால், தாய்மார்கள் நடமாடும் தெய்வங்கள். இவர்களின் தெய்வீக உணர்வு நிலைத்து நிற்கச் சிறு குடும்ப நெறியே தலை சிறந்த வழி. அவ் வழி நின்று நாடும் வீடும் நலம் பெற நம் நாட்டிலுள்ள பத்துக் கோடித் தம்பதிகளும் குடும்ப நலத் திட்டத்தைச் சமய, சாதிச் சார்பற்ற முறையில் ஏற்றுக் கொள்ளச் சூளுரை ஏற்க வேண்டும். தாய்மார்கள் வெறும் பிள்ளை பெறும் இயந்திரமாக இருக்கும் நிலை மாறினால்தான் தாய்மை பெருமை பெறும். அந் நாளே நம் நாட்டின் வரலாற்றிலே பொன்னாள்!




# 13. கொண்டாடச் சொன்னூர் குறித்து

ஆக்கிப் படைக்கும் அருமைத் தொழிலாளர்
பூக்கள் கருகுதல்போல் போகாமல்—சீக்கிரத்தில்
அண்டந் தனிற்சிறக்க ஆணையிட்டு 'மே'தினத்தைக்
கொண்டாடச் சொன்னூர் குறித்து

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

தெய்வத்திற் கேன்படையல் ? தேம்பி யழுமேழை
உய்யவழி செய்தல் உயர்பூசை !—மெய்க்கலைஞர்
கண்டிடலாம் ஏழைக் களிப்பில் இறையென்று
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—அரிமதி-தென்னகன், புதுச்சேரி-1.

எண்ணிலாப் பண்டிகைகள் எந்தமிழர் கொண்டாட
மண்ணிலுண் டென்றறிந்த மாமேதை—அண்ணு தான்
தண்டமிழர் பொன்னுளாம் தைப்பொங்கல் நன்னுளைக்
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—லலிதா அண்ணுமலை, கோயம்புத்தூர்.

இந்நாட்டி லில்லை யிரப்போரென் றேற்றமுடன்
எந்நாடும் போற்றும் எழில்திட்டம்—இந்நாளில்
கொண்ட தமிழ்முதல்வர் கோலா கலவிழவாய்க்
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—புலவர் வே. அரசு, அதிகாரப்பட்டி.

கட்டுக் கலங்காணக் கற்றைப் படிகாணத்
திட்டத் துட'னையா ரெட்டு'நெல்—இட்டமுடன்
கண்டுமுதல் செய்யக் கருதிப் பசும்புரட்சி
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—சு. பிச்சை, வடலூர்.

கொண்டவனுக் கேற்ற குணவதியாய் என்றென்றும்
மண்டலம் போற்றும் மதியுடையான்—கண்டுவக்கும்
வண்டார் குழலி வடிவழகுப் பெண்ணரசைக்
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—மா. பரமசிவம், வடுகப்பட்டி

உலகத்துச் சான்ருேர்கள் ஒன்ருகக் கூடிப்
பலவழியில் சிந்தித்துப் போற்றி—நிலவுலகில்
பண்பாட்டைக் கூறும் பயன்மிக்க வள்ளுவத்தைக்
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்

இல்லங்கள் தோறும் இரந்துண்டு வாழ்ந்திடுவோர்
அல்லல் அறுக்கும் அறநாளாய்—நல்லமைச்சுத்
தொண்டாற்றும் நம்கலைஞர் தோன்றிப்பொன் னுளினையே
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—துரை. முருகு, திண்டுக்கல்-1.

அழகுச் சிலையெனிலும் ஆறேழு பெற்று
நிழலின்றி வாடாமல் நெஞ்சே '—மழலைமலர்ச்
செண்டிரண்டே வீட்டில் சிரித்தாடக் கண்டதனைக்
கொண்டாடச் சொன்னூர் குறித்து.

—சி. செள. கருப்பன் செட்டி, திருச்சி-15.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு சுப்பராயலு பி.ஏ.,
பெரியகுளம்,
மதுரை மாவட்டம்.

குருதியுடன் சீழ்வடியுங் கூன்குருடு, குட்டர்,
மறுவாழ்வு பெற்றிடவே வைப்பேன்—உறுதியென்று
துண்டேந்தித் தந்நாளில் சூளுரைத்தே எம்முதல்வர்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—சு. நாகநாததுரை, சென்னை-12.

மேலாடை மேலில்லை ! உள்ளாடை ஒப்புக்கே !
நூலாய் இளைத்த(து) இளமேனி !—தோலெலும்பைக்
கண்டாடும் காளையர்காள் ! ஏற்றுக்கோ பெண்ணுரிமை
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன் கோட்டை.

ஆதியிலே சாதியில்லை ; அன்பினிலே பேதமில்லை
போதிமரப் புத்தனுமே போதித்தான்—வாதிட்டோர்
வண்டமிழர் ஓர்சாதி வள்ளுவத்தால் ஏற்றுலகைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—அ. மலர்வேந்தன், அனுமந்தன் பட்டி.

தன்னுயிர்க்கு வாழாத் தகைகொண்ட தாயைப்போல்
மன்னுயிரைக் காக்க மனமிரங்கி—இன்னருளால்
தொண்டாற்றி வாழ்கின்ற தூய மனத்தோரைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—அ. ஆறுமுகம், திருச்சி-15.

சாதிக்கொரு நீதி சாற்று மனுநீதி
நாதி இலாதொழிய நம்மரசார்—ஆதிகுறள்
உண்டாக்கித் தந்த ஒருபுலவன் வள்ளுவர்நாள்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் நா. கோபால கிருட்டிணன், திருச்சி-4.

இல்லார் பிணியுற்றோர் ஏற்கும் இழிநிலையை
இல்லா தொழிக்கவே எம்முதல்வர்—நல்வழியில்
கண்டோர் வியக்கவே காசளித்துத் தம்நாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—வித்துவான் பெ. அண்ணாமலை, சென்னை-1.

இம்மா நிலத்தில் இரப்பொழிக்க மக்களெல்லாம்
தம்மா வியன்றதொகை தானளித்து—நம்முதல்வர்
தண்டமிழ் ஆய்கலைஞர் தாம்பிறந்த நாளதனைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—முத்துச்சோழன், கோவை-1.

தோழி :
வண்டாய் விழியிரண்டும் வட்டமிட்டுச் சுற்றுவதேன்?
கண்டாயோ காதலனைக் கானகத்து?—ஒண்டொடியே
தலைவி :
உண்டார் ; சுவைத்தார் ; உயிர்த்தார்பின் தோழிளனைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—மு. பூங்கோவன், சென்னை-1.

கண்ணியமே இல்லாதார் காசிநகர் சென்றாலும்
புண்ணியமே இல்லையன்றோ? பொல்லாங்கே எண்ணியெண்ணித்
திண்டாட வேண்டாங்காண்! சித்தரெல்லாம், செந்நெறியைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் அ. வெ. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை,

இரப்போர்தம் தேவைகளை எம்மரசே ஏற்றுப்
புரப்பிற்குத் திட்டமிட்ட பொன்னாள்—உரன்கொண்ட
தண்டமிழ்ப்பொன் னாட்டுத் தலைசிறந்த பொங்கல்போற்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—இ. மஹபூப்ஜான், எருமப்பட்டி.

கொள்ளை அணியணிந்தே கொஞ்சும் எழிற்குமரி
நள்ளிரா நேரம் நடுக்கின்றி—மெள்ளநடை
உண்டாகி வீதிசெலும் ஓர்நாளைக் காந்திமகான்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் சி. வெ. இராமசாமி, பி.ஏ., பொள்ளாச்சி.

ஊரார்க்குப் பள்ளி ; உழைப்பார்க்கு நற்கூலி
காராளர் பெற்றார் கடன்திட்டம்—சீராள
திண்டாடு வார்க்குச் சிறியமனை தந்தவரைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் அருணா-பொன்னுசாமி, திருச்சி.

ஓராண்டு சேவைதனில் ஓங்கு புகழ்படைத் (து)
ஈராண்டில் கால்வைத்து ஏற்றமாம்—பேராழித்
தொண்டு மிகவாற்றும் தூய 'தமிழரசை'க்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—அ. பெ.அரங்கநாதன், நாமகிரிப்பேட்டை.

முப்பாலில் முன்னாளில் மூதறிஞன் சொன்னநெறி
தப்பாமல் வாழும் தமிழ்மகளை—எப்போதும்
பெண்டிருள் தெய்வமெனப் பேசியே பூந்தமிழர்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—இரா. வைரமுத்து, சென்னை-30.

தான்பிறந்த நாட்டில் தடுமாறும் ஏழையரின்
கூன்நிமிர்த்த எண்ணிக் குலமுதல்வர்—சூன்மூன்றைத்
திண்டாடும் மக்கள் திசைதிரும்பும் பொன்னாளாய்க்
கொண்டாடச் சொன்னார் குறித்து .

—சு. நாராயணசுவாமி, திருச்சி-3.

உடுத்திட நல்லுடையும் உண்ண உணவும்
படுத்திடப் பாயுமின்றிக் கண்ணீர்—விடுத்தேழை
கண்கலங்கா நாளைக் கலைஞரவர் இன்பமுடன்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—கி. சுப்புராம், தேனி.

ஏற்றுப் பிழைப்பவராய் என்றைக்கும் இன்னலுடன்
தேற்றல் இலராய் தெருவோரம்—சோற்றுக்குத்
திண்டாடும் மக்களுக்குத் தான்பிறந்த பொன்னாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் சி. சுவாமிநாதன், பந்தநல்லூர்.

கண்ணினிலே காணுகின்ற கண்மணி போன்றநம்
அண்ணாவை எண்ணி அயர்ந்தேன்நான்—அண்ணாவோ
தண்மைசூழ் நன்மைபல சாரும் முதல்வரைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—வேல். இளங்கோவன், ஆலம்பாடி.

தென்புலத் தெங்கும் திரிந்திரந்து துன்புறுவோர்
இன்புற்று வாழும் எழில்மிகுநாள்—இன்னேநாம்
கண்ணாரக் கண்டு களிக்கக் கலைஞர்தாம்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் பூமாலை நடராசன், சேத்துப்பட்டு.

மானே ! மணக்கவரும் மல்லிகையின் பூங்காற்றே!
தேனே! உனக்கொன்று தித்திக்க—நானுரைப்பேன்
மண்டும் இரப்பாளர் மறுவாழ்வு பெற்றிடுநாள்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—கா. ஜெகதீசன், உமர்ஆபாத்.

ஞாலம் புகழ்ந்திடுதே! நாட்டில் இரந்திங்கே
ஓலமிட்டோர் வாழ்விங்(கு) ஒளிபெறவே—சாலவுமே
தொண்டாற்றச் சூளுரைத்துத் தான்பிறந்த நன்னாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—க. தியாகராசன், நெய்வேலி-2.

அல்லும் பகலும் அயராமல் தானுழைத்தும்
சொல்லவொண்ணா வெம்பசியால் துன்புற்றுத்—தொல்லுலகில்
திண்டாடும் தீனர்க்குச் சேவைசெயும் சீரியரைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து!

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

மங்காத பேரறிஞர் மாண்புமிகு சீரண்ணா
பொங்கல் திருநாளைப் போற்றுமா(று)—இங்குள்ள
தண்டமிழ் மக்களைத் தட்டி யெழுப்பியே
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் இலமா. பூங்குன்றன், சென்னை-28.

‘கொண்டுவா அம்மையே கூழொருவாய்’ என்றுகெஞ்சித்
திண்டாடும் மக்கள் திருப்தியுற்று—வேண்டுவன
உண்டிருக்கும் நாளை ஒளிநாளாய் நம்கலைஞர்
கொண்டாடச் சொன்னார் குறித்து

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

வண்ணத் தமிழில் வனப்பூட்டி வாழ்வூட்டும்
எண்ணக் களஞ்சியமாய் ஈடின்றித்—தண்ணளிசேர்
தொண்டாற்றிக் கொண்டுவரும் தூய ‘‘ தமிழரசைக் ’’
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ஆர். இராசு, வல்லக்குண்டாபுரம்.

வண்டாருஞ் சோலை வளவயல்கள் எங்கெங்கும்
பண்பாடி யாடிப் பணியாற்றித்—தொண்டரென
எண்டிசையோ ரேத்த எழிலோங்கு வாழ்வமைத்துக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—வே. அரங்கராசன், சோழபுரம்.

ஊமைக் கனவாக உள்ளத்தி லுன்நினைவைச்
சேமித்து நான்வாழ்ந்த சேதியினைப்—பூமகளே
கண்டார்போ லென்பெற்றோர் கைப்பிடிக்கும் நன்னாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—இரா. இராகவன், வாணியம்பாடி-2.

ஏழைச் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற
தோழன் செயற்கரிய தொண்டனடா—தோழா, கேள் !
திண்டாடும் ஏழைகளை வாழவைத்த தெய்வமெனக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் சே. பெ. கோவிந்தசாமி, குன்றைவலம்.

வள்ளுவரீ ராயிரத்தை, மாண்பார் முதலமைச்சர்
உள்ளம் மகிழ்ந்திடவே ஊர்தோறும்—தெள்ளுதமிழ்
வண்பார்க்கும் சோலை வளமார் தமிழகத்தில்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—எஸ். எஸ். லயன், தேனி.

வங்கத்திற் போராடி வாடும் அகதிகளாய்
இங்குவந்த மக்களை ஏன்பாரீர்—பங்கமுறத்
திண்டாடும் பாகிஸ்தான் தேய விடுதலைநாள்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—கொ. மா. கோதண்டம், இராஜபாளையம்.

சாதனைக்குச் சாட்சியாய்த் தாய்மொழிக்கு மாட்சியாய்
நீதிகாக்கும் ஆட்சியாய் நித்தநித்தம்—தீதொழியத்
தொண்டாற்றும் இவ்வரசைத் தூயமனங் கொண்டோர்தாம்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ப. தேவகுரு , தேவதானப்பட்டி.

புன்னை மரத்தடியில் புல்லி இருந்தக்கால்,
அன்னை அழைத்தாள்; அதிர்ந்தோடி—அன்னைமுன்
திண்டாடி நின்றேன், திருமகளே! வாழ்கவெனக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ஆ. கோவிந்தராசன், குடவாசல்.

வறுமை ஒழித்து வளத்தைப் பெருக்கிச்
சிறுமை தரும்பஞ்சம் தீர்க்கப்—பெருவிளைவு
உண்டாக்கித் தந்தே உதவும்ஐ. ஆர்.எட்டைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

ஏர்கொண் டுழநாளும் எல்லாரும் வாழ்வதற்குக்
கார்கொண்டு நெல்விளைக்கும் காருழவர்—சீர்பெறவே
பெண்டாட்டி பிள்ளையுடன் பொங்கல் திருநாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—மு. கண்ணப்பன், சென்னை-24.

அங்கங் குறைந்தவரின் அல்லலைப் போக்கிடப்
பொங்கி யெழுந்து பொருளீந்தே—எங்கெங்கும்
புண்பட்டோர் வாழ்வைப் புனிதஞ்செய் நன்னாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—வே. கருப்பையா, சேலம்-6.

வண்டாடிப் பூவுறங்கும் வார்கூந்தல் பூம்பாவாய் !
தண்டமிழே வாழ்வின் தனிச்செல்வம்!—மண்டுபுகழ்
கொண்ட தமிழ்க்கொள்கை கூறும் உயர்பண்பைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர். முத்து வேங்கடேசன், திருமயம்.

நல்ல தமிழ்ப்புகழை, நாடும் அரசினர்தாம்
எல்லவரும் போற்ற இறைமாண்பைச்—சொல்வளஞ்சேர்
தண்டமிழால் சாற்றித் தமிழர் வழிபாட்டைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

இல்லாதோர் புன்சிரிப்பில் ஏற்றமிகக் காண்பதனால்
இல்லாதோர் இல்லை யெனும்நாளை,—நல்லதோர்
பண்பாடி எம்முதல்வர் பாரிலுளோர் போற்றிடவே
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் அ. தங்கவேலு, வாணபுரம்.

ஓராண்டுத் தொண்டில் உயர்ந்த 'தமிழரசு'
ஈராண்டு தன்னில் இலங்குவதை—நேராண்டு
கண்டாரின் உள்ளம் களித்திடும் வண்ணத்தில்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்

செந்தமிழைக் காக்கத் திருநாட்டை மேம்படுத்தத்
தந்தாரை முந்தித் தருநாளை—என்றலைவர்
எண்டிசையும் ஏத்தும் எழிலார் திருநாளாய்க்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ச. தமிழ்வேலன், கோட்டூர்.

நாட்டைப் புதுப்பிக்கும் நற்பணியில் தங்களது
வீட்டுப் பிரச்சினையை விட்டவர்கள்—காட்டுகின்ற
தொண்டதனைப் போற்றத் தொழிலாளர் நாளென்று
கொண்டாடச் சொன்னார் குறித்து.


—அ. காந்தி, பி.எஸ்.சி.பிடி, தேவத்தூர்.

தான்பிறந்த நாளைத் தமிழ்க்கலைஞர் நம்முதல்வர்
' ஏன்பிறந்தோம் ' என்றுதொழு நோயாலே—ஊன்சிதைந்து
திண்டாடு கின்றவர்தம் தீதகற்றும் நன்னாளாய்க்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் புதுமதியன், சின்னதாராபுரம்.

# 251-வது லட்சாதிபதியாக நீங்களே இருக்கலாமே!

## இன்றே வாங்குவோம் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு




தமிழ்நாட்டின் பரிசுத் திட்டத்தால் இதுவரை 250 லட்சாதிபதிகள் தோன்றி யுள்ளனர். பரிசுத் திட்டத்தின் பெருமைதான் என்னே! 251-வது லட்சாதிபதியாக நீங்களே ஆகிவிடலாமே! ஒரு ரூபாய்தான். அது உங்களுக்கு உயர் வாழ்வு தருகிறது. நாட்டுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. வளம் சேர்த்து உங்கள் வீட்டையும், கலவி, மருத்துவ, வீட்டு வசதிகள் மூலம் நாட்டையும் காக்கிறது.

# ரூ. 3,00,000 உங்களுக்கே கிடைக்கலாம்!

மொத்தப் பரிசுத் தொகை: **ரூ. 17,50,000**

மொத்தப் பரிசுகள் : **5328**

தமிழ்நாடு தான் இவ்வளவு பெரிய பரிசுகளைத் தருகிறது.

**கவனிக்கவும்**

செலவு ஒரு ரூபாய்




வரவோ பல லட்ச ரூபாய

### திருத்தியமைக்கப்பட்ட புதிய பரிசுத் திட்டங்கள்

**சிறப்புப் பரிசுகள்**

| | |
|---|---|
| முதல் சிறபபுப பரிசு ஒன்று | ரூ. **3,00,000** |
| இரண்டாவது சிறபபுப பரிசுகள இரண்டு: (ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,00,000) | ரூ. **2,00,000** |
| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) | ரூ. **5,00,000** |

**சாதாரணப் பரிசுகள்**

| | | |
|---|---|---|
| மூன்ருவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றுக்கும் | ரூ. 10, 000 : | ரூ. 50,000 |
| நான்காவது பரிசுகள் பத்து ஒவ்வொன்றுக்கும் | ரூ. 5,000 : | ரூ. 50,000 |
| ஐந்தாவது பரிசுகள் ஐம்பது ஒவ்வொன்றுக்கும் | ரூ, 1,000 : | ரூ. 50,000 |
| ஆருவது பரிசு ஆயிரம் ஒவ்வொன்றுக்கும் | ரூ. 100 | ரூ, 1,00,000 |
| (இது ஒவ்வொரு வரிசைக்கும்) | | ரூ. 2,50,000 |

## குலுக்கல் நாள்: 30-8-1971

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

உடனே வாங்குங்கள். இல்லையேல் கிடைக்காது.

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

+ 5 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது

# கேள்விகள் கேளுங்கள் பதில் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

வினா : சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடைப்பாடிப் பகுதியில் (1) உருளைக்கிழங்கு, (2) கோதுமை, (3) மிளகு, (4) ஜாதிக்காய், (5) ஏலக்காய், (6) இலவங்கம், (7) கிராம்பு, ஆகியவைகளைப் பயிரிட முடியுமா? எந்தப் பருவங்களில் பயிரிட முடியும்? விதைகள் எங்கே கிடைக்கும்? விவரம் கூறவும்.

—மெய்வேலு, க.புதூர், இடைப்பாடி

விடை: இடைப்பாடிப்பகுதியில் உருளைக்கிழங்கு, கோதுமை, ஆகியவைகளைப் பயிரிடலாம். மிளகு, ஜாதிக்காய், ஏலக்காய், இலவங்கம், கிராம்பு ஆகியவைகளைப் பயிரிடக் குளிர்ச்சியான மலைச்சரிவுப் பகுதியே ஏற்றதாக உள்ளதால், அவைகள் இடைப்பாடிப் பகுதிக்கு ஏற்றதல்ல.

'கோ—சிம்லா' என்ற உருளைக்கிழங்கு ரகத்தைச் செப்டம்பர் மாதத்தில் சாகுபடி செய்யலாம். இதன் வயது 110 நாட்கள்.

சர்பதி சோனரா (85 நாட்கள்), கல்யாண்சோனா (95 நாட்கள்), சேப்டுலெர்மா (100 நாட்கள்) என்ற கோதுமை ரகங்களை நவம்பர் மாதத்தில் விதைக்கலாம்.

விதைகள் கிடைக்க உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களை அணுகுங்கள். மேற்கூறிய ரகங்களின் சாகுபடிக் குறிப்புகளை விளக்கமாக அறிய 'தமிழரசு' 1970 ஜூலை 16, செப்டம்பர் 16 இதழ்களைப் படியுங்கள்.

* * *

வினா : வார இதழ் ஒன்றின் ஆசிரியர், ஒரு துணுக்கில் 'பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொல்ல விமானங்களில் இருந்து மருந்து தெளிக்கிறார்கள். இதனால் பூச்சி இறக்கும்; உணவு உற்பத்தி அதிகமாகும். ஆனால் இந்த மருந்து உணவுப் பொருள்களில் கலந்து இதனால் புற்று நோய் வரலாம். புற்றுநோய் வந்து கொண்டிருக்கின்றது!' என்று எழுதியுள்ளார். அந்த ஆசிரியரின் கூற்று சரியா? தவறா? தயவுசெய்து தெரியப்படுத்தவும்.

—மு. ஜெயராமன், மேல் முட்டுக்கூர்.

விடை : பூச்சி மருந்துகளைப் பயிர்களுக்கு விமானம் மூலம் தெளிக்கும்போது, மருந்து, உணவுப் பொருள்களில் கலந்து புற்றுநோய் வரலாம் என்ற கூற்றுக்கு அறிவியல் அடிப்படையான சான்று இல்லை. அவ்வாறு புற்றுநோய் வருகிறது என்பது உண்மையாக இருக்குமானால், விஞ்ஞானிகள் விமானம் மூலம் மருந்து தெளிப்பதை வரவேற்றிருக்க மாட்டார்கள். பொதுவாக, நெல், கோதுமை, கம்பு, சோளம் ஆகிய பயிர்களில் பூ பூப்பதற்கு முன்புவரைதான் மருந்து தெளிக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது; பூ பூத்த பின் மருந்து தெளிக்குமாறு பரிந்துரைப்பதில்லை; ஆனால் ஒருசில குறிப்பிட்ட தூள் மருந்துகளைத் தூவும்படியே பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு தூவப்படும் மருந்தின் சக்தி 15 நாட்கள் வரைதான் இருக்கும். எனவேதான் மருந்து தெளித்த அல்லது தூவிய 15 நாட்களுக்குப் பின்பு அறுவடை செய்யுமாறு கூறப்படுகிறது. மேற்கூறிய பயிர்கள் எதுவும் தெளித்த அல்லது தூவிய 15 நாட்களுக்குள் அறுவடைக்கு வராது. காய்கறிப் பயிர்களில் மருந்து தெளிக்கும்போது கூட, காய்களை அறுவடை செய்த பின்புதான் மருந்து தெளிக்கும்படி சொல்லப்படுகிறது.

மருந்து தெளித்த அல்லது தூவிய 15 நாட்களுக்குப் பிறகு தான் காய்கறி அறுவடை செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு அறுவடை செய்த காய்களையும் தண்ணீரில் நன்கு கழுவிய பின்பே பயன்படுத்துமாறும் உலகெங்கிலும் உள்ள பயிர்ப்பாதுகாப்பு நிபுணர்கள் பரிந்துரைத்து வருகிறார்கள். எனவே விமானம் மூலம் மருந்து தெளிப்பதனால் புற்றுநோய் வருகிறது என்பது அறிவியல் அடிப்படையில் ஒப்புக் கொள்ள முடியாத கூற்று என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

வினா : டிராக்டருக்கும், டில்லருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

—நே. து. இராசேந்திரன், கொழப்பலூர்.

விடை : டிராக்டரை பொதுவாக, விதைத்தல், உழுதல், அறுவடை செய்தல், போரடித்தல் ஆகிய எல்லா வகையான வேளாண்மை வேலைகளுக்கும் பயன்படுத்தலாம். டிராக்டர்கள் சாதாரணமாக, அதிக கனபரிமாணம் உள்ளதாகவும், நான்கு சக்கரங்கள் கொண்டதாகவும், அதிக அளவு வேலைத் திறன் கொண்டதாகவும் இருக்கும்.

'டில்லர்கள்' எனப்படும் விசை உழவுக்கருவிகள் சிறியதாக

இருக்கும். விசை உழவுக் கருவிகள் சிறப்பாக உழுவதற்கும் பொதுவாக, தண்ணீர் இறைப்பது, மருந்து தெளிப்பது போன்ற வேலைகளுக்கும் பயன்படும். குறிப்பாக, குறைந்த அளவு நிலம் உள்ள உழவர்களுக்கு 'டில்லர்கள்' மிகவும் ஏற்றது.

டிராக்டரைவிட, விசை உழவுக்கருவியில் இழுக்கும் விசைக்குக் கிடைக்கும் பலனும், செயல்திறனும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே குறைந்த அளவு நிலமுள்ள உழவர்கள் நிறைந்த பலன்பெற 'டில்லர்' மிகவும் ஏற்றது. டில்லர் டிராக்டரைவிட விலை குறைவானது. டிராக்டரைவிட 'டில்லர்' உபயோகிப்பது சிக்கனமானதாகவும் உள்ளது. அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் பெரும்பரப்பில் சாகுபடி செய்ய டிராக்டர்களையே பயன்படுத்துகிருர்கள். ஜப்பான் போன்ற நாடுகளில் சிறு பரப்பில் சாகுபடி செய்ய விசை உழவுக் கருவிகளே மிகவும் பயனுடையதாகவும், சிக்கனமானதாகவும் உள்ளன.

* * *

வினு: கே. 1 மிளகாய் பற்றி கீழ்க்கண்ட விவரங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கவும்:—

(1) நாற்று தயார் செய்தல்; (2) நடவுவயல் தயார் செய்தல்; (3) அடியுரம், மேல் உரம்; (4) பயிர்ப்பாதுகாப்பு (5) வயது; (6) மகசூல்.

—ஆர். சங்கர மூர்த்தி, நெல்லை.

விடை: தங்கள் கேள்விக்குத் தெளிவாய் விளக்கமளிக்க வேண்டுமானுல் 2 பக்கம் தேவைப்படும். இடநெருக்கடி கருதி மிகவும் சுருக்கமாகவே கீழே விளக்கியுள்ளோம்:

நாற்று தயார் செய்தல்: ஒரு ஏக்கர் மிளகாய் சாகுபடி செய்ய ஒரு சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். 6 அடி×4 அடி அளவுள்ள மேட்டுப் பாங்கான பாத்திகளை அமைத்துக் கொள்வதே சிறந்தது. 500 கிராம் கே.1. மிளகாய் விதையை 1 கிராம் 'அக்ரசான்' மருந்துடன் கலந்து ஒரு சென்ட் நாற்றங்காலில் விதைக்கவும். விதைத்த பின்பு சலித்த தொழு எருவை மென்மையாகப் பரப்பி விதையை மூடி, பூவாளியால் தண்ணீர் தெளிக்கவும்.

நடவு வயல் தயார் செய்தல்: இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக ஆக்கவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவையும், கீழே குறிப்பிட்டுள்ள அடி உரத்தையும் இட வேண்டும். அதன்பின் பாத்திகளோ அல்லது பார்களோ அமைக்கவேண்டும்.

அடி உரம்: ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசு இட வேண்டும்.

மேல் உரம்: நாற்று நட்ட 50-வது நாள் 70 கிலோ அமோனியம் சல்பேட்டும், 75-வது நாள் 70 கிலோ அமோனியம் சல்பேட்டும் இடவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: 'சுருள்' விழுந்து காணப்பட்டால், ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி 10 சதத் தூளைத் தூவ வேண்டும். அல்லது 'என்டரின்' அல்லது 'ரோகார்' மருந்து தெளிக்கலாம். வாடல்நோய், பழ அழுகல் நோய் தாக்குதல்களைத் தடுக்க 'பைட்டலான்' மருந்து தெளிக்கவும்.

வயது: 180 நாட்கள்.

மகசூல்: கே-1 மிளகாய், நாட்டு மிளகாய் வகைகளைக் காட்டிலும் 20 சதம்வரை அதிக மிளகாய் வற்றல் தரக் கூடியது. ஏக்கருக்கு 771 கிலோ உலர்ந்த மிளகாய் (சுமார் 52 மூட்டைகள் வற்றல்) கொடுக்கும். இந்த ரகம் சாத்தூர் சம்பா மிளகாயைக் காட்டிலும் 116 கிலோ வற்றல் (சுமார் 8 மூட்டை) அதிகமாகக் கொடுக்க வல்லது.

கே-1 மிளகாய் ஆடி, ஐப்பசி, பங்குனிப் பட்டங்களில் விதைப்பதற்கு மிகவும் ஏற்றது. முழு விளக்கமும் பெற 'தமிழரசு' 1970 டிசம்பர் 1, இதழைப் படியுங்கள்.

கே-1 மிளகாயை முதல்வரும் வேளாண்மை அமைச்சரும் பார்வையிடுகிருர்கள்



# அரசு ஸ்டுடியோ

ஆசியாவிலேயே மிகப்பெரிய ஸ்டுடியோவைப் பார்க்க விரும்புகிறீர்களா ?

வாருங்கள் ! சென்னை அடையாறுப் பகுதிக்குப் போவோம்.


என்ன திகைக்கிறீர்கள் ? அடையாறுப் பகுதியிலா ஆசியாவின் பெரிய படப்பிடிப்பு நிலையம் இருக்கிறது என்ற உங்கள் ஐயப்பாட்டிலும் நியாயம் உண்டு.

உங்கள் ஐயத்தை அகற்றுவதற்கு முன்பு அந்த ஸ்டுடியோவுக்கு நேரிலே செல்லலாம், வாருங்கள்!

* * *

கடற்கரை நெடுஞ்சாலை வழியாக அடையாறுப் பகுதிக்கு அடையாற்றுப் பாலத்தைக்கடந்து, பேருந்து நிலையத்தைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறோம். இன்னும் சில நூறு அடிகளுக்குள் அடையாறுப் பகுதியும் கிண்டிப் பகுதியும் இணைந்துவிடும். அதற்கு முன்னால், சாலையின் கீழ்ப் பகுதியில் கண்ணுக்கு எட்டிய வரையில் கட்டடங்களாகக் காட்சியளிக்கும் பல்வேறு தொழில்நுட்பக் கல்லூரிகளைக் காண்கிறோம். அந்த அறிவாலயங்களுக்குச் செல்லும் சாலையில் நாமும் திரும்புகிறோம்.

படகுப் போக்குவரத்திற்கு உரிய கால்வாய், அதை ஒட்டி மாமல்லபுரத்திற்குப் போகும் புதியசாலை; அதை அடுத்துச் செல்வது நாம் போகும் சாலை. சாலைகளின் அமைப்பே கண்ணுக்கு விருந்தாக அமைந்துள்ளது.




ஏறத்தாழ மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்றபிறகு தென்திசையில் திரும்புகிறோம். இரண்டு மூன்று கட்டடங்களைத் தாண்டிய பிறகு வருகிறது திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி. இங்குதான் அமைந்து வருகிறது, ஆசியாவில் மிகப்பெரிய ஸ்டுடியோவான அரசு ஸ்டுடியோ.

முன்னர் 'இன்ஸ்டியூட் ஆப் பிலிம் டெக்னலஜி' ஸ்டுடியோ என்று வழங்கப்பட்ட ஸ்டுடியோதான் அண்மையில் 'அரசு ஸ்டுடியோ' என்ற புதிய பெயரைப் பெற்றுள்ளது.

மத்திய அரசுக்குச் சொந்தமான பூனாவில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியை விட அடையாறிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி பெரிது என்று சொல்லப்படுகிறது. ஆனால் பூனாவில்உள்ள திரைப் படத் தொழில்நுட்பக் கல்லூரி, மத்திய அரசின் தகவல் ஒலி பரப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. ஆனால் சென்னைத் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி, தொழில் நுட்பக்

கல்லூரிகள் அமைப்பில் ஓர் அங்கமாக இயங்கி வருகிறது. எனினும், தமிழ் நாடு அரசின் செய்திப் படங்கள் தயாரிக்கும் 'தமிழ் நாடு அரசு திரைப்படப் பிரிவு (Tamil Nadu Film Division)' வணிக முறையில் இயங்கும் அரசு ஸ்டுடியோவும் தமிழ் நாடு அரசு செய்தி விளம்பரத் துறையின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றன.

செய்தி விளம்பரத் துறையின் பொறுப்பில் உள்ள அரசு ஸ்டுடியோவைப் பார்க்கத்தான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். வணிக முறையில் இயங்கும் இந்தப் படப்பிடிப்பு நிலையத்தின் கட்டணங்கள் எல்லாம் சென்னையில் உள்ள ஏனைய ஸ்டுடியோக்களின் கட்டணங்களை விடக் குறைவானது. அத்தனைக்கும் நவீன வசதிகளைக் கொண்டது இந்த ஸ்டுடியோ.

முதலில் படப்பிடிப்புத் தளத்திற்குச் செல்லுகிறோம். பிரம்மாண்டமான அந்த 'ப்ளோரில்' மேலே லைட்பாய்களுக்காகச் செய்யப்பட்டிருக்கும் வசதிகள் சென்னையில் வேறெந்த ஸ்டுடியோவிலும் கிடையாது. இது மட்டுமல்ல 'Cat-a-walk' என்று அழைக்கப்படும் மாடிப் பகுதியும் வேறு எந்த ஸ்டுடியோவிலும் கிடையாது. உச்சக் கட்டக் காட்சிகளுக்கும், வேறு சில காட்சிகளுக்கும், விளக்கு அமைப்புக்கும் அப்பகுதி மகவும் பயனுள்ளதாகும்.



அரசு ஸ்டுடியோவில் படப் பிடிப்புக்காக உள்ள விளக்குகள் போல் நவீன வசதிகளை, விளக்குகளை வேறு எங்கும் காணமுடியாது. வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்த விளக்குகளைக் காணும்போதே ஓர் பிரமிப்பு ஏற்படுகிறது.

படப்பிடிப்புத் தளத்தை ஒட்டியே கலைஞர்களுக்கான ஒப்பனை அறைகளும், ஓய்வு அறைகளும் உள்ளன. தளத்தின் முன்பகுதியில் 'ஏர்-கண்டிஷன்' செய்யப்பட்ட ஒப்பனை அறையும் உள்ளது. 'ரீ-ரிகார்டிங்' அரங்கம் ஒன்றும் உள்ளது. இன்னொரு 'ரீ-ரிகார்டிங்' அரங்கம் கட்டப்பட்டு முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளது.

முதலில் பார்த்த படப்பிடிப்புத் தளத்தைத் தவிர இன்னொரு சிறிய படப்பிடிப்புத் தளமும் இங்கே உள்ளது.

ஸ்டுடியோவின் பின் திசையில் கண்ணுக்கு எட்டிய வரையில் தெரியும் நிலப்பரப்பு முழுவதும் அரசு ஸ்டுடியோவுக்குச் சொந்தமானதுதான். நம் கண்ணுக்கு எட்டிய வரை தெரியும் நிலப் பகுதியின் பரப்பு எவ்வளவு என்று வினவுகிறோம்.

''முப்பத்திரண்டு ஏக்கர். இவ்வளவு பெரிய நிலப்பரப்பு வேறு எந்த ஸ்டுடியோவுக்கும் கிடையாது''—என்று பதில் வருகிறது.


மறுபடியும் நமக்கு ஒரு சிறு ஐயம். ''திரைப்

படத்தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடங்கள், இப்போது உள்ள அரசு ஸ்டுடியோ கட்டடங்கள்—இவை அனைத்தையும் சேர்த்துத் தானே முப்பத்திரண்டு ஏக்கர் நிலப் பரப்பு?''—என்று மீண்டும் கேட்கிறோம்.

'' இல்லை, இல்லை! ஸ்டுடியோவின் தோட்டங்கள் அமையப் போகும் பகுதிமட்டும் 32 ஏக்கர் ''.

வியப்போடு அந்த நிலப் பரப்பின் மீது கண்களைச் சுழல விடுகிறோம். இப்பகுதியில் நவீன முறையில் தோட்டங்களையும், பூஞ்சோலைகளையும் அமைக்க அரசு முப்பது லட்ச ரூபாய் வழங்கியுள்ளது என்றும் அறிகிறோம்.







வடகிழக்குக் கோடியில் தோட்டம் அமைக்கும் பணிகள் ஓராண்டுக் காலத்திற்கு முன்பிருந்தே நடைபெற்று வருகின்றன. ஆளுயரத்திற்கு வளர்ந்திருக்கும் யூக்கலிப்டஸ் செடிகள், சலசலக்கும் நீரோடைகள், செய்குன்றங்களாக மாறிடும் பகுதிகள், சிறிய குளம், ஐந்தடி உயரம் வளர்ந்திருக்கும் கோரைகள், புதுவகை மரங்கள் முதலியன தோட்டம் அமைக்கும் பணிகள் விரைந்து நடைபெற்று வருவதை நமக்கு எடுத்துரைக்கின்றன.

இன்னும் சில ஆண்டுகளில் மாபெரும் தோட்டங்களும், பூஞ்சோலைகளும் உருவாகிடும் காட்சிகள் நம் கண்முன்னே தோன்றுகின்றன.

இப்பொழுதுள்ள தேவைகளை எண்ணிப் பார்த்தால், விரைவில் புதிய படப்பிடிப்புத் தளங்கள் பல எழுப்பப்படும். அதுவும் நவீன வசதிகளுடன் எழுப்பப்படும் வாய்ப்புகள் ஏராளம் உண்டு. எனவே, மிக விரைவில் ஆசியாவில் மிகப் பெரிய ஸ்டுடியோவை இங்கு நாம் பார்க்கத்தான் போகிறோம்.





* * *

அரசு ஸ்டுடியோ உருவான வரலாற்றைக் கொஞ்சம் பார்ப்போமே . . . . ..

1945 ஆம் ஆண்டில் சென்னை தங்கசாலையில் திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவு சிறு அங்கமாகத் தோன்றியது.

1960 செப்டம்பர் 15 ஆம் நாளில் பெரிய அளவில் வளரத் தொடங்கியது. 1966 ஆம் ஆண்டு மே திங்களில் அடையாறுப் பகுதிக்குத் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி மாற்றப்பட்டது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியில் வணிக முறையில் இயங்கும் ஸ்டுடியோ அமைக்கப்படுவதற்கு முன்பே—மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள படப்பிடிப்புத் தளத்திலிருந்து முதலில் உருவாக்கப்பட்ட ஒரு தமிழ்ப் படம் 'தாலாட்டு' என்ற படமாகும். வணிகத்துறைப்பிரிவு அதாவது 'அரசு ஸ்டுடியோ' 1969 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டது.

இதுவரை அரசு ஸ்டுடியோவில் அமிர்தா பிலிம்சின் தெலுங்குப் படமான 'செல்லலு காபுரம்' சஞ்சீவி பிலிம்ஸ் 'நீதிரி ஜாயத்தி' (தெலுங்குப் படம்); 'வெகுளிப்பெண்' (தமிழ்ப்படம்); 'ஆடைஜாத்தியம்' (மலையாளப்படம்) முதலிய படங்களின் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கருணை பிலிம்சின் 'அன்புக்கு ஒரு அண்ணன்' படத்தின் உச்சக்கட்டக் காட்சிகள் அரசு ஸ்டுடியோவில்தான் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு அரசு திரைப்படப் பிரிவின் செய்தி விளக்கப் படங்

கள் எல்லாம் அரசு ஸ்டுடியோ வில்தான் எடுக்கப்பட்டுள்ளன.

எல்லாராலும் பாராட்டப் பட்ட 'மியூசியம்' (ஆங்கிலப் படம்) மீன் வளத் துறையின் 'நெடுங்கடல் மீது' குடும்ப நலத்துறையின் ''நாம் இருவர்; நாம் பெறுவது இருவர்'', போன்ற படங்கள் அரசு ஸ்டுடி யோவில்தான் தயாரிக்கப் பட்டவை.

* * *

அரசு ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்த்து வரும்பொழுது ஒரு படத் தயாரிப்பாளரைச் சந் திக்கிறோம்.

'' அரசு ஸ்டுடியோவைப்பற்றி உங்கள் கருத்தைச் சொல்ல முடியுமா ? '' —கேட்கிறோம்.

'' இந்த அமைதியான சூழ் நிலை வேறு எங்கே கிடைக்கும்? மற்ற ஸ்டுடியோக்களில் படப் பிடிப்பு நடந்தால் நடிகர், 'அடுத்த ஸ்டுடியோவில் அரை மணி நேரப் படப்பிடிப்பு— இதோ வந்துவிடுகிறேன்; கொஞ்ச நேரம் காத்திருங்கள்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவார். ஆனால், இங்கே அப்படிச் செய்யமுடியாது '' என்று அவர் பேசிக்கொண்டே போகிறார்.

அடுத்து நாம் பார்க்க வேண் டிய இடங்கள் ஏராளமாக இருப்பதால் அவருடன் பேச் சைத் தொடராமல் விடை பெற்றுக் கொள்கிறோம்.

அரசு ஸ்டுடியோவுக்காகப் பல புதிய பகுதிகளை நிர்மாணிக்கக் கட்டட வேலைகள் விரைவில் துவங்கும் என்பதன் அடை யாளமாக அடிப்படைப் பணி கள் நடைபெற்று வருவதைப் பார்க்கிறோம்.

அரசு ஸ்டுடியோ நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என் பதைச் சுற்றுப்புற அமைப்பு களே நமக்குத் தெரிவிக் கின்றன.

இந்த வளர்ச்சியின் வேகம் இப்படியே தொடர்ந்தால் இன் னும் இரண்டு மூன்று ஆண்டு களில் 'ஆசியாவிலே மிகப் பெரிய ஸ்டுடியோ அரசு ஸ்டுடியோ' என்ற பெயர் உரு வாகியே தீரும்.

தமிழ்நாடு எத்தனையோ துறைகளில் வளர்ச்சி அடைந் திருக்கிறது. மற்ற மாநிலங் களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்து பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது.

அரசு ஸ்டுடியோ அந்த வகை யிலும் ஒரு சிறந்த அமைப்பாக வளர்ந்து வருகிறது.

# வெண்பாப் போட்டி

**15.** ஈற்றடி: **இறையும் தமிழ்கேட்கும் இங்கு.**

முடிவுத் தேதி 10—8—1971

**16.** ஈற்றடி: **இனிக்குமே நெஞ்சம் எமக்கு.**

முடிவுத் தேதி 20—8—1971

பரிசு : ஓராண்டு '**தமிழரசு**' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'' தமிழரசு '' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை–2

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவுத் தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!

# செங்குளமே வாழி!

புலவர் மு. சிக்கந்தர்



எங்கள் குலப் பெண்முகத்திற் குவமை யாகும்
எழில்மலரால் ஆதவனை வரவேற் கின்ருய்!
திங்களையும் அல்லியினுல் வரவேற் கின்ருய்!
தேடிவந்த நீரையெலாம் தேக்கி வைப்பாய்!
அங்கிருந்தே வயல்களுக்குக் கொடைகொ டுப்பாய்!
ஆமை, நண்டு, மீன், தவளை எல்லாம் வாழ
இங்கிதமாய் இடமளிப்பாய்! குள்ள மாய்நீ
இருப்பதனுல் குளமென்ருர் போலும்! வாழி!

பறவையெலாம் உனைத்தேடி வருதல் கண்டால்
'பலி'கொடுப்பாய் உன்தகுதிக் கேற்ற வண்ணம்
நிறைகுளமாய் நீயிருந்தால் படகை ஒட்டி
நிம்மதியைப் பெறுவதற்கும் இடம ளிப்பாய்!
குறைந்துநீர் வற்றிடினும் குறையி டத்தில்
கொடைதருவாய் வெள்ளரியின் விதையைப் போட்டால்
கறைபோக்கிக் குளிப்பதற்கும் உதவு கின்ருய்
கருணைமிகு குளமேநீ வாழ்க! வாழ்க!

எப்பொழுதும் பசித்தபின்னர் உண்ணல் நன்றே
என்கின்ற நீதியினை உணர்த்தத் தானே,
செப்பரிய திருக்குளமே நீரு மின்றிச்
சிலகாலம் நீயிருப்பாய்! எனினும் இங்கே
ஒப்பில்லாத் தென்றலுக்கும் விருந்து வைப்பாய்!
உலவவிட் டெனைத்தொட்டு மகிழ வைப்பாய்!
தெப்பத்தேர் சலுத்திடற்கு மக்கள் கூடும்
திருநாளுக் கேங்கிடுவாய்! வாழி! வாழி!

# பாவம், இவருடைய பயிர் முழுவதும் நோய்க்கு இரையாகி விட்டது!

டைதேன் Z-78 உபயோகித்து அறுவடையைப் பெருக்குங்கள்.




## ரூ. 30 மட்டும் செலவழித்து இந்த மாபெரும் நஷ்டத்தைத் தவிர்த்திருக்கலாம்!



சொற்ப செலவில் டைதேன் Z-78 வாங்கி உபயோகித்தால் உங்கள் விலைமதிப்பற்ற பயிருக்குப் பாதுகாப்பளிக்க முடியும். டைதேன் Z-78 பயிர்களின் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் அதிசய சக்தி வாய்ந்தது. இது செடிகளின் இலைகளுக்கோ, பூக்களுக்கோ, காய்களுக்கோ ஒருவித தீங்கும் விளைவிக்காது. விளைச்சலை பெருக்க உதவுவதுடன் இது பயிரின் தரத்தையும் உயர்த்துகிறது.

**இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்**
பம்பாய்-25, இந்தியா

DITHANE என்ற பெயரும் ஃப்ளாஸ்க் சின்னமும் ரோம் அண்ட் ஹாஸ் கோ/ பிலாடெல்பியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு. எஸ். ஏ. யிலும் இதர நாடுகளிலும் ரெஜிஸ்டர் செய்யப் பட்டுள்ளன.

# அன்னைத் தமிழில் அறிவியல் நூல்கள்

கல்வி தாய்மொழி வாயிலாகக் கற்கப்படுகையில் அக்கல்வி கற்கின்ற மனத்தில் ஆழ்ந்து பதியும் என்பதும், மக்களிடையே துரிதமாகப் பரவும் என்பதும் கல்வியின் உண்மை நிலையினை அறிந்தோரின் முடிந்த கருத்தாகும். ஆனால் தமிழின் வாயிலாகக் கல்வி பயில வேண்டுமாயின் தமிழில் போதிய நூல்கள் இல்லாமை ஒரு பெரும் தடையாக இருந்து வருகிறது. இத் தடையைப் போக்கத் தமிழில் நூல்கள் இயற்ற வேண்டிய எல்லாவித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மொழி பெயர்ப்பின்போது மொழியின் சில அடிப்படை உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். எழுத்து என்பது ஒலியின் குறியீடு. எழுத்து தானே ஓர் ஒலியைக் கொண்டிருப்பதில்லை. அம் மொழியின் வழக்கில் தொடர்ந்து ஓர் ஒலியை அதன் மீதேற்றிப் பயன்படுத்துகின்றனர். அதுபோன்றே சொல் என்பது பொருளின் சொல்லீடு. இதே அடிப்படையில்தான் அறிவியற் சொற்களும் அமைக்கப்படல் வேண்டும்.

ஆங்கில மொழியில் பயன்படுத்தப் பெறும் அறிவியற் சொற்கள் பெரும் பாலும் கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில்உள்ள வேர்ச்சொற்களுடன் முன்னொட்டுகளையும், பின்னொட்டுகளையும் இணைத்து அமைக்கப்பட்டனவாயுள்ளன. அச்சொற்கள் சொல்லப்படவேண்டிய கருத்தை முழுதும் பிரதிபலிப்பதில்லை. பிரதிபலிக்கவும் இயலாது; எடுத்துக் காட்டாக (தாவர இயலில்) (Protoplasm) என்ற சொல் இரண்டு அசைகளைக் கொண்டது.

கிரேக்கம் { Proto—முன்னர்
Plasma—வடிவம்.

**சண்முகசுந்தரம்.** எம்.எஸ்ஸி

தமிழில் நேர் சொல்லாக்கம்செய்ய—முந்தை வடிவம் என்றாகும். இச்சொல் Protoplasm என்பதற்குக்கருதப்படவேண்டியஎல்லா விளக்கத்தையும்சொல்வதில்லை. பொருள், கொண்டு கூட்டியே எண்ணப்படுகிறது. மற்றொரு சொல் (தாவர இயல்) Bract; இச் சொல் (Bracket) என்பதன் மரூஉ. பூக்காம்பை அடைத்தது போல் இருக்கிறது என்ற கருத்தில் அமைக்கப்பட்ட சொல். Bracket என்ற சொல் அடைப்பு என்ற பொருள் மட்டுமே உடையது.

ஆனால் இதற்கு இப்போதுள்ள மொழி பெயர்ப்பு பூவடிசெதில் என்பதாகும். இது ஒரு சொல்லீடாகாது. விளக்கமேயாகும். இது போன்ற பொருத்தமற்ற மொழியிலக்கணம் பிறழ்ந்த சொற்கள் இப்போதுள்ள தமிழாக்க நூல்களில் மலிந்துள்ளது. சொல்மொழி பெயர்ப்பாளர்கள் சொல் விளக்கம் தராமல் சொல்லீடுகளை உருவாக்க வேண்டும். சொல்லவேண்டிய கருத்துக்குத் தேவையான வேர்ச்சொல்லைக் கண்டறிந்து பின்னர் அதைப் பொருத்தமான விகுதி, ஈறு, முன்னொட்டு, பின்னொட்டு இவைகளுடன் இணைத்து இரண்டு மூன்று அசைகளுடன் சொற்களை அமைக்கவேண்டும்.

பிற மொழிகளைப் போலன்றித் தமிழில் அறிவியற் சொல்லீடுகளை உண்டாக்குவது எளிமை. ஏனெனில் பல ஆங்கிலச் சொல்லீடுகளின் வேர்ச் சொற்கள் தமிழில் உள்ள வேர்ச்சொற்களாகும். இந்த ஒற்றுமை, தாவர இயலில் பெரிதும் மலிந்துகிடக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காட்டுகிறேன்.

1. Poly என்ற சொல் பல என்பதைக் குறிக்கிறது. (கிரேக்கம்).

2. Gamy என்ற சொல்லின் வேர்ச்சொல் Gamos என்பதாகும். தமிழில் அதன் வேர்ச் சொல் காமன் என்பதாகும்.

Gamos—காமம், விருப்பம், புணர்ச்சி,

3. Iso என்ற சொல்லின் வேர்ச்சொல் Isos. தமிழில் அதன் வேர்ச்சொல்இசை.

Iso—ஒத்தது

இசை—ஒத்தது.

4. Heteros என்பது பிற, வேறு என்னும் பொருளுடையது. அதன் தமிழ் வேர்ச்சொல் எதிர் என்பதாகும். Heteros என்பதில் H எழுத்து ஒலி இன்றி நிற்கும்.

5. Allo என்பது தமிழ் வேர்ச்சொல்லான அல்லாத, அல்லா என்னும் சொல்லுடன் ஒப்புமையுடையது. இது போன்ற சொற்கள் ஏராளம்.

தமிழில் அறிவியற்சொல்லீடுகளை உருவாக்குகையில் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிகளை மனத்தில் கொண்டால் நல்ல சொற்கள் உருவாக இயலும்.

முதலாவதாக, முன்னர் குறிப்பிட்டுள்ளதைப் போல் ஆங்கில அறிவியற் சொற்களில் வேர்ச்சொல்லைக் கண்டறிந்து பின் அதற்கு ஒப்ப ஒரு தமிழ் வேர்ச்சொல்லுடன் விகுதி, ஈறு, முன்னொட்டு, பின்னொட்டு இவற்றுடன் இணைத்துச்சொல்லாக்குதல்வேண்டும். ஆங்கில

வேர்ச்சொல் பொருத்தமன்றியிருப்பின் வேறு பொருத்தமான தமிழ் வேர்ச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

இரண்டாவதாக, அறிவியற் சொல்லீடுகள் பொதுவான வழக்குச் சொல்லாக இல்லாமல் இருப்பது நல்லது. எனவே வழக்கொழிந்த நல்ல தமிழ்ச் சொற்களைச் சிறிது உருமாற்றிப் பயன்படுத்தலாம்.

மூன்றாவதாக, ஆங்கில அறிவியற் சொற்கள் சிறப்புப் பெயரின் அடிப்படையில் தோன்றியிருப்பின் அதே சிறப்புப் பெயரைப் பயன்படுத்தித் தமிழில் சொல்லாக்கம் செய்ய வேண்டும்.

நான்காவதாக, சிறப்புப் பெயர்களை அப்படியே தமிழ் எழுத்தில் பயன்படுத்த வேண்டும். அவைகளுக்குத் தமிழ் சொல்லாக்கம் செய்யக் கூடாது. எடுத்துக்காட்டாக, Ranunculaceae—என்பது ஒரு தாவரக் குடும்பப் பெயர். அது அப்படியே தமிழ் எழுத்தில் கூடிய அளவில் ஒலி மாற்றாமல் எழுதப்படவேண்டும்.

ஆனால் சிறப்புப் பெயர்கள் எவை, பொதுப் பெயர்கள் எவை என்பதைக் கண்டறிவதில் ஐயம் ஏற்படக்கூடும். அவைகளின் வேறுபாட்டைக் கண்டறிய கீழ்க்கண்ட இலக்கணம் பெரிதும் பயன்படும். நிகழ்ச்சிகளின் பெயர்களும் உறுப்புகளின் பெயர்களும் பொது வழக்கில் அறியப்படும் பொருள்களின் பெயர்களும் மட்டுமே பொதுப் பெயர்களாகும். ஏனையவை சிறப்புப் பெயர்களாகும். இப்பொழுது இலக்கணத்திற்குச் சில ஒழிபுகள் உண்டு. மேற்கண்ட விதிகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட சொற்களில் சிலவற்றைக் கீழே தருகிறேன்.


**நல்வாழ்த்துக்கள்**

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்**

**1/4, சூரியநாராயண செட்டி தெரு**
**சென்னை-81**

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarach


1. உயிர்கள் யாவும் நுண்ணிய மூலப் படிகளால் கட்டப்பட்டு ஒரு குறிப்பிட்ட அமைப்பைப் பெறுகின்றன. கட்டடங்கள், கற்களின் அடுக்குகளினால் உண்டாவது போல உயிர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்கற்கள்—மூலப் படிகள் ஆங்கிலத்தில் Cell எனப்படும்.

Cell—என்பதின் சொற்பொருள் வெற்றிட அறை என்பதாகும். இந்த Cell என்னும் பெயர் இதை முதன் முதலில் கண்டறிந்த ராபர்ட்ஹூக் என்பவரால் இடப்பட்டது. அவர் கொண்ட பொருள் வெற்றிட அறை என்பதேயாகும். Cell உயிர்ப்பொருளைத்தாங்கி நிற்கும் உயிர்மூலம் என்பதை அறிவியலார் உணர்ந்த பின்பும் வெற்றிட அறை என்னும் பொருளுடைய Cell என்னும் சொல்லே இன்னமும் பின்பற்றப்படுகிறது. ஆனால் Cell என்பது உயிர் மூலம் என்பதை யுணர்ந்து—

வயம்

என்னும் பெயரைப் பயன்படுத்தலாம்.

வயம்—மூலம், வெற்றி, வலிமை, திறம்.

இதற்கு உயிர் அணு என்றும், செல் என்றும் நூல்களில் பயன்படுத்துகின்றனர். உயிர் அணு என்பதில் உள்ள உயிர், அணு ஆகியவை இரண்டும் அறிவியற் சொல்லாக வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. எனவே இது பொருத்தமன்று. மேலும் இது இரண்டு தனிச் சொற்களாகும். இம்முறையில் சொல்லாக்கம் செய்வது சரியல்ல.

2. உயிர்கள் காற்றை உள்ளிழுத்து வெளியிடுவதிலும் அதன் விளைவாக உட்கொண்ட உணவுகள் சிதைவுறுதலும் அதன்மூலம் உண்டாகின்ற சக்தி கொண்டு உயிர் இயக்கங்கள் நடைபெறுதலும் நிகழ்கின்றன. காற்றை உள்ளிழுத்து வெளிவிடும் செயல் ஆங்கிலத்தில் Respiration—எனப்படுகிறது. கிரேக்க வேர்ச்சொல்லான Spirare என்பதிலிருந்து இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது.

Re—மறுபடியும்

Spirare—மூச்சுவிடுதல்.

இதற்குப் பொருத்தமான தமிழாக்கம் உயிர்ப்பு என்பதாகும். இப்போது சுவாசித்தல் என்ற சொல்லைத் தமிழ் நூல்களில் பயன்படுத்துகின்றனர்.

3. வேர்கள், தண்டு, கிளைகள், இலைகள் இவைகளின் தொகுதி ஆங்கிலத்தில் Shoot System எனப்படுகிறது.

Shoot—பாய்தல், சுடுதல், எழும்புதல்.

மறைந்திராது வெளிப்போந்து அமைகின்ற தொகுதி என்ற கருத்தில் இச்சொல் அமைக்கப் பட்டுள்ளது. இதற்குப் பொருந்திய தமிழ்ச் சொல் எடுப்பு என்பதாகும்.

Shoot System என்பதை எடுப்புத்தொகை என்று அழைக்கலாம். தமிழ் நூல்களில் பயன் படுத்தப்பெறும் சொல் தண்டுத் தொகுதி என்பதாகும். தண்டு என்ற சொல் ஆங்கி லத்தில் Stem என்பதையே குறிக்கும்.

4. தாவரங்களின் வெளியுறுப்புகளின் ஊடாக குறிப்பாக இலைகளின் வழியாக நீர் ஆவிநிலையில் வெளிப்படுதல் ஆங்கிலத்தில் Transpiration என்று அழைக்கப்படுகிறது. இதற்கு வேர்ச்சொற்கள் இலத்தீன் மொழியி லிருந்து எடுக்கப்பட்டவை.

Trans—குறுக்காக (எதிரிடையாக).

Spirare—மூச்சுவிடுதல்.

மூச்சுவிடுதலுக்கு எதிரான—வேறுபாடான ஒரு செயல் என்ற கருத்தில் இச்சொல் அமைக் கப்பட்டுள்ளது. இதன் பொருத்தமான சொல்லாக்கம் ஆவிப்பு என்பதாகும்.

ஆவி—நீராவி.

ஆவித்தல்—ஆவியாக வெளிப்போதல்.

(ஒப்பு நோக்குக)—உயிர்த்தல்—உயிர்ப்பு.

இதற்குத்தமிழ் நூல்களில் கையாளப்படும் சொல் ''நீராவிப் போக்கு'' என்பதாகும். இது ஒரு சொல் விளக்கமே யொழிய சொல் லீடாகாது. ஆங்கிலத்தில் Steam Passage என் பதற்குத்தான் நீராவிப் போக்கு என்ற சொல் லாக்கம் பொருந்தும்.

5. தாவரங்களில் ஒருவகைத் திசுத்தொகுதி நிலத்தினின்றும், நீர், கனிக உப்புக்கள் முதலி யவைகளை வேர்கள், தண்டு, கிளைகள், இலை கள் என்றவாறு கீழிருந்து மேல்நோக்கி எடுத் துச் செல்லும் பணியைச் செய்கிறது. இத் தொகுதி ஆங்கிலத்தில் Xylem எனப்படு கிறது. இதன் வேர்ச்சொல் கிரேக்கத்தின் (Xylon) என்பது. அது மரம் என்னும் பொருளுடையது. மரம் விளைவது என்பது இதன் அளவைக் கொண்டே கருதப்படுவதால் இச்சொல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழில் இதற்கு விளை என்பது மிகவும் பொருந்தி வரும்.

விளை—விளைவு.

இப்போதுள்ள தமிழ் நூல்களில் இதற்கு சைலம் என்று பயன்படுத்தப் படுகிறது. Xylem என்பது பொதுப் பெயரானதால் இச்சொல் தமிழாக்கம் செய்யப்படவேண்டும்.

தமிழ்ச் சொல்லாக்கத்தில் பெரும் பிரச்சினை சிறப்புப் பெயர்களை ஒலிமாற்றம் நேராமல் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதுவதா கும். இத்துறையில் இதுகாறும் செய்யப்பட்ட சொற்கள்போற்றக்கூடியனவாகஇல்லை. தொல் காப்பியத்தில் கூறப்பட்டவிதிகளைக் கடைப் பிடித்தால் சொல்லாக்கத்தில் பெரும் வெற்றி காணலாம். தொல்காப்பியத்தில் கூறப் படுவது ஒலி வடிவ இலக்கணமேயாகும். அது பொதுவானது. தமிழுக்கு மட்டுமே என்று கருதுவது தவறு. தமிழில் உள்ள சார்பு எழுத்துக்களான குற்றியலுகரம் குற்றியலி கரம், ஆய்தம் ஆகியவைகளுடன் அளபெடை யையும் இணைத்து ஆங்கிலச் சொற்களை ஒலி மாற்றம்நிகழாமல்தமிழில்எழுத ஆங்கிலத்தில் போலல்லாமல் தமிழில் ஒலி இலக்கணம் இல்லை. ஆனால் இன்றைய தேவையை உணர்ந்து ஆரம்பக் கல்வி நிலையிலிருந்து எழுத்து, ஒலி இலக்கணங்களை மாணவர் களுக்குப் பயிற்றுவித்தால் நமது முயற்சியில் பெரும் வெற்றி காணலாம். எடுத்துக் காட்டாக ஆரம்பப் பள்ளி மாணவன், கஃபு என்பதை ஆங்கில உச்சரிப்புடன் ஒலிக்கப் பழகவேண்டும். அவ்வாறே ஆங்கிலத்தில் எழுதுகின்ற அடிப்படை ஒலி வேறுபாடுகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டே அவன் ஒலிக்கப் பழகவேண்டும். எடுத்துக் காட்டாக Man என்பதை மேஅன் என்று எழுதி அதை Man என்பதற்கான சரியான ஒலி வடிவாக அவ னுக்குப் பழக்க வேண்டும். ஆரம்பக் கல்வி பயிலும் மாணவன் படிக்கும் அரிச்சுவடியின் அமைப்பே தவருக உள்ளது. அது

அ, ஆ, இ, ஈ, உ, ஊ ஃ
க, கா . . . . . . . . . . . . . க்
ங, ஙா . . . . . . . . . . . ங்
ச, சா . . . . . . . . . . . . . ச்
. . . . . . . . . . . . . .
ன, னு . . . . . . . . . . . ன்

என்ற வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. இது பிழையுடையதாகும். சரியான அமைப்புக் கீழ் கண்டவாறு இருத்தல் வேண்டும். இதில்


அ, ஆ, இ, ஈ . . . . . . ஔ
க், க, கா, கி . . . . . . கௌ
ங், ங, ஙா, ஙி . . . . . . ஙௌ
ச், ச, சா, சி . . . . . . . . சௌ
. . . . . . . . . . . . . . . . . .
ன், ன, னு, னி . . . . னௌ

என்ற ஒரு தொடரும்.

ஃக, ஃச, ஃட . . . . . . . . . . . . . . . . . . .

என்ற வல்லினங்களுக்கு ஒரு தொடரும் தனித் தனியாகக்கற்பிக்கப்பட வேண்டும். அத்துடன் குற்றியலுகரம், குற்றியலிகரம், அளபெடை இவைகளுடன் இணைந்த வெவ்வேறு சொற் களும், அவற்றின் ஒலிகள் ஆங்கில மொழியில் பெரிதும் வருகின்ற ஒலிகளுக்கு ஒப்ப வருவ தாக அமைத்துக் கற்பிக்க வேண்டும்.

இதுபோன்ற முறைகளைப் பின்பற்றி முயற்சி மேற்கொண்டால் தமிழில் நல்ல நூல்களை நிச்சயம் உருவாக்க இயலும். கற்றறிந்தோர் முயலுவாராக.



குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464.20465
கதர்-கைத்தொழில் அங்காடி
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

# பதவி உயர்வு

## சோம. மகாதேவன்

கீழ்க்கட்டிலிருந்து, சங்கரியம்மாள் வாய் ஓயாது பேசிக் கொண்டிருப்பதை, மாடியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அமுதாவுக்கு ஆங்காரமே வந்து விட்டது. படிக்கட்டு விளக்கையும் போட்டு விட்டு, ஆவேசத்தோடு நாலு படிகள் இறங்கி, குனிந்து சங்கரியம்மாளைப் பார்த்தாள். அவளது உதடுகள் துடித்தன.

''அத்தோடதான் நிறுத்துங்க. மரியாதைக்குப் பேசாம இருந்தா நீட்டிக்கிட்டே போறீங்களே! பேரன் பேத்தி எடுக்கப்போற வயசிலே இது நல்லா இருக்கா ?'' என்று படபடப்போடு கேட்டாள்.

''நீ மாடி வீட்டுக்காரி. நீட்டி முழக்கினுச் செல்லும். கீழே நிக்கறவ சொன்னு எடுக்குமா ?'' என்று, கீழே நின்று கொண்டு, சங்கரியம்மாளும் இடைவெளி விடாமல் ஆரம்பித்தாள்.

அமுதாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

இந்த வயதில், இப்படியும். அடுத்த வீட்டுப் பொருளின் மீது ஆசை வைத்து ஆலாய்ப் பறப்பாளா ஒரு பெண்?

''இரவல் கொடுத்ததையெல்லாம் கேட்காம இருந்தா சிரிச்சுப் பேசுவீங்க. கேட்டா பொறுமிப் போறீங்களே'' என்றுள் அமுதா.

இவள்தான் சிறியவள். சங்கரியம்மாளுக்கு வயதுக்கான பக்குவம் இருப்பதில்லே.

'' ஆமடியம்மா ..........நீ பெரிய சீமாட்டி, உங்கிட்ட இரவல் வாங்கித்தானே பிழைக்க வேண்டியிருக்கு! அது என்ன மாயமோ—இந்தச் சின்ன உத்தியோகத்திலே, எங்கே இருந்துதான் வருதோ ரேடியோவும் பேனும்'' என்று சொல்லித் தொட்டதைத் தொடர்ந்தாள்.

அமுதாவுக்குக் கோபம் பொங்கி வந்தது.

' அப்படியே பாய்ந்து, சங்கரியம்மாளைக் கீழே தள்ளிப் புரட்டி எடுக்க வேண்டும்' என்றுதான் அவள் நினைத்தாள்!

இருந்தாலும் ஆபீசர் மனைவியாச்சே.

இந்த எண்ணத்தில் தானே இவள் இவ்வளவும் பேசுகிறுள்!

'' நினைச்சதை வாங்க வக்கு இல்லையின்னு முட்டிக்கணும். அதுக்கு என்ன செய்யறது? உங்க முன்னுலே குடி இருந்தாலே எரிச்சிப் போடுவீங்க'' என்று ஆத்திரத்தோடு சொன்ன அமுதா, திரும்பிப் படியேறி வந்து, முன் பக்கத்துத் தளத்திலேயே முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

இங்கே குடிவந்த நாளையிலேயிருந்து இப்படியா ?

மனதார, நினைத்த பொருள்களை வாங்கிக் கண்ணெதிரே கொண்டு வரமுடியாது. சுட்டெரித்துப் போடுகிறுள் மகராசி. பின்னுலேயே இரவல் கேட்டும் வந்துவிடுவாள். கொடுப்பதைத் திருப்பிக் கேட்காமல் இருக்க முடியுமோ? கேட்கும்போது, இப்படித்தான் பொறுமல் வந்துவிடுகிறது.

ஒவ்வொன்ருக எங்கிருந்தோ வருகிறதாமே.

நினைவைத்தான் பாருங்களேன். இங்கே என்ன இந்த மாதச் சம்பளத்தை வைத்தா பிழைப்பு நடக்கிறது! பேசுகிருளே பெரிய மனுசி!



இன்றைக்கு எல்லாமே கூடித்தான் வருகிறது.

அவர் வரட்டும். இரண்டிலொன்று தீர்ந்தாக வேண்டும்.

கீழே ஆளரவம் கேட்டது.

அமுதா—எழுந்து எட்டிப் பார்த்தாள்.

கீழ்வீட்டு மேலதிகாரியோடு அவர் வந்து விட்டார். தினமும் இப்படித்தான்—இரவு பத்து மணிக்கு மேலானுலும் இருவரும் ஒன்ருகவேதான் வருவார்கள்.

அடுத்தடுத்துக் குடியிருந்து கொண்டு, முன்னுல் எழுந்து வர முடியாதாமே!

உள்ளே நுழைந்ததும், இருவரும் படிக்கட்டின் பக்கத்திலே நின்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அடடா பக்கத்தில் நின்று பேசும்போது, இவருக்குத்தான் என்ன பணிவு—குழைவு.

புதுப்புது ரசனையோடு நாளும் எதைத்தான் பேசித்தொலைப்

பார்களோ! கால் கடுக்க நின்று லும், ரசித்து, இடையிடையே சிரித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறாரே இவர்! இந்தச் சாமர்த்தியம் வேறு யாருக்கு வரும். ஆனால் வீட்டிலொருத்தி பசியோடு காத்துக்கொண்டிருக்கிறாளே என்ற உணர்வு, இடையிலே சங்கரியம்மாள் வந்து நுழையும் வரையிலும், வரவே வராது.

சுந்தரம் வேகமாக மாடிப் படியேறி வந்தான்.

அமுதா சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள்.

இன்றைக்கு இரண்டிலொன்று தெரிந்தாக வேண்டுமே?

உடுப்பையும் கலையாமல், அவனும் ''அமுதா'' என்றழைத்துக் கொண்டே அவளைத் தேடி வந்து விட்டான்.

அவள் கோபத்தோடு திரும்பினாள்.

''ஏன்—எங்கிட்டே வந்து பேசறதுக்கும் மிச்சம் வச்சிருக்கிங்களா?'' என்று கேட்டாள்.

''ரொம்பக் கோபமாக்கும்'' என்று சொல்லி நெருங்கி வந்தான் சுந்தரம்.

''ஆமா—நிறையவே பேச வேண்டியிருக்கு உங்ககிட்ட. முதல்லே சாப்பிடுங்க. எனக்குப் பசிக்குது'' என்று சொல்லிச் சாப்பாடு போடுவதில் முனைந்தாள் அமுதா.

சுந்தரத்துக்குத் திகைப்பாக இருந்தது.

ஒரு நாளும் இல்லாது, இன்றைக்குக் கண்டிப்பாக உத்தரவு போடுகிறாளே அமுதா! சங்கரியம்மாளுக்கும் இவளுக்கும் சொற்போர் நடந்திருக்குமோ! நடந்திருக்கும். முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா?

ஒன்றும் பேசாமலே சாப்பிட உட்கார்ந்தான் சுந்தரம்.

அமுதாவும் வாயைத் திறக்காமலே பரிமாறினாள்.

* * *

மனத்துக்குள் பரபரத்தவனாய்க் கட்டிலில் உட்கார்ந்திருந்தான் சுந்தரம்.

இவனுக்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டு, அடுப்படியில் வேலையை முடித்துக்கொண்டிருந்தாள் அமுதா.

இவள் எப்போது வருவது?

எவ்வளவு ஆவலோடு—அந்த மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லப் படியேறி வந்தான் சுந்தரம்?

அதைச் சொல்ல விடுகிறாளா இவள்?

என்ன செய்வது? இந்த ஈராண்டுகளில் இவனைத் தனக்குள்ளே சிறை வைத்திருக்கிறாளே!

கையில் பால் கிண்ணத்தோடு அறைக்குள் நுழைந்தாள் அமுதா.

அந்தக் கடுகடுப்பு மறைந்து முகத்திலே புன்னகை மலர்ந்திருக்கிறது.

சுந்தரத்துக்குத் தெம்பு வந்தது.

''வாயைத் திறக்கலாமா தேவியாரே'' என்று சிரிக்காமல் கேட்டான்.

''வாயைத் திறந்து, முதல்லே இந்தப் பாலைச் சாப்பிடுங்க, ஆறிப்போகும்'' என்று சொல்லி அவன் கையிலே பால் கிண்ணத்தைக் கொடுத்துவிட்டுக் கட்டிலிலே உட்கார்ந்தாள் அமுதா.

''இப்ப உனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரு செய்தியைச் சொல்லப் போறேன்'' என்று ஆரம்பித்தான் சுந்தரம்.



''நானும்தான் உங்களுக்கு முடிவா ஒண்ணு சொல்லப் போறேன்'' என்று விடுகதை போட்டாள் அமுதா.

சுந்தரம் அவளைப் பக்கத்திலே இழுத்துக்கொண்டான்.

''எனக்கு ஒரு வாரத்திலே பதவி உயர்வு கிடைக்கப் போகுது'' என்றான் உற்சாகத்தோடு.

''எனக்குத் தெரியுமே, உங்களுக்குக் கிடைக்காம இருக்க முடியுமா?'' என்று சாதாரணமாகவே சொன்னாள் அமுதா.

சுந்தரத்தின் முகம் வாடிவிட்டது.

''எனக்கு உயர்வு கிடைப்பதில் உனக்கு மகிழ்ச்சியே இல்லையா?'' என்று கேட்டான்.

அமுதா சிரித்தாள்.

''உங்களுக்கு வர்ற உயர்விலே எனக்குத்தான் முழுப் பங்கு இருக்கு'' என்றவள், அவனது கழுத்தைத் தனது தளிர்க்கரங்களால் வளைத்துக் கொண்டு, ''கொஞ்ச நாளாவே, நீங்க எப்படியெல்லாம் இருக்கணும், உங்க உருவத்துக்கு, உங்க படிப்புக்கு, சிறப்பைக் கொடுக்கக் கூடியது எந்தப் பதவின்னு யோசிச்சுக்கிட்டே இருந்தேன். முடிவும் செய்யதாச்சு. இதுக்கு முன்னாலே நீங்க, இந்தப் பதவி உயர்வு அடையப் போறது எனக்கு ஒரு பொருட்டாவே தோணலே'' என்றாள்.

''இப்ப—நமக்கு என்ன குறை இருக்கு'' என்று கொஞ்சும் முகம் பார்த்துக் கேட்டான் சுந்தரம்.

''இந்த அலுவல் உங்களுக்குப் பிடிச்சுப் போச்சு. எனக்குப் பிடிக்கலே. கொஞ்ச நாளையிலே—யந்திரத்தோட யந்திரமா—எல்லாமே மரத்துப் போகும்'' என்றாள் அவள்.

''வாழ்க்கையே இதுதானே, இதிலே சலிச்சுக்கிட்டா—என்ன

ருசி இருக்கும்'' என்று கேட்டான் அவன்.

''உங்களையே மறந்து, இந்த ஊழியத்திலே மூழ்கிப் போயிட்டிங்க. யாருக்கும் பணியாம நம்மாலே சுதந்திரமா வாழ முடியும்'' என்ற அமுதா எழுந்து சென்று, பக்கத்து அலமாரியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வந்து, 'நீங்க எப்படி இருக்கணுமோ—அப்படி இருக்கிறதுக்கு உத்தரவு வந்திருக்கு. படிச்சுப் பாருங்க. இனிமே நீங்கதான் இந்நாட்டு மன்னர்'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே, கடிதத்தை அவன் கையில் கொடுத்தாள்—அமுதா.

இரவு வெகு நேரம் வரையிலும் அந்த அறையின் விளக்கு அணையவில்லை.

* * *

மறுநாள் காலை எட்டுமணியளவில், மாடியிலிருந்து இறங்கி வந்து, படிக்கட்டின் ஓரமாக நின்று கொண்டு '' சார் '' என்று குரல் கொடுத்தான் சுந்தரம்.

'' என்ன சுந்தரம், அதுக்குள்ளே புறப்பட்டாச்சா ?'' என்று கேட்டுக் கொண்டே பனியனோடு வெளியே வந்தார் தெய்வநாயகம்.

'' இல்லை சார், வந்து....'' என்று, சொல்ல நினைப்பதைச் சொல்ல முடியாமல் தயங்கினான் சுந்தரம்.

'' என்ன— இன்றைக்கும் ஆபீசுக்கு மட்டமா ? சுந்தரம் பிரமோசன் வர்ற சந்தர்ப்பத்திலே ரொம்பக் கவனமா இருக்கணும். நேற்றுக்கூட உனக்குச் சொல்லலையா ?'' என்று ஆரம்பித்தார் தெய்வநாயகம்.

சுந்தரம் குறுக்கிட்டான்.

'' அதில்லை சார், இந்த வேலையையே ராஜினமா செய்யறதா முடிவு செய்திருக்கேன்'' என்றான்.

தெய்வநாயகம் திகைத்துப் போய் விட்டார்.

'' வேலை கிடைக்கிறது கடினமா இருக்கிற காலத்திலே யாராவது தனக்கு இருக்கும் வேலையை விடுவாங்களா? நானே உன்னை எவ்வளவு தயார் பண்ணியிருக்கேன்! இப்ப என்ன வந்திருச்சு உனக்கு?'' என்று படபடப்போடு கேட்டார் தெய்வநாயகம்.

சுந்தரம் மேலே ஏறிட்டுப் பார்த்தான்.

அமுதா படிகளில் இறங்கி வந்தாள்.

வீட்டிற்குள்ளிருந்து சங்கரியம்மாளும் வந்து நின்றாள்.


அமுதா, சுந்தரத்தின் பக்கத்தில் வந்து நின்று, தெய்வநாயகத்தைப் பார்த்துச் சொன்னாள்.

'' இவர் வேலையிலே கண்ணு இருந்திட்டதினாலே, தன்னைப் பற்றி எதுவுமே உங்க கிட்டச் சொல்லலே. எங்க அத்தைக்கு இவர் ஒரே பிள்ளை. சின்ன வயசிலேயே மாமா இறந்திட்டாரு. அத்தைதான் இவரை வளர்த்து ஆளாக்கிப் படிக்க வச்சாங்க. இப்ப அத்தை—கிராமத்திலே தனியா நின்று சிரமப்படுறப்ப, இவர் யாருக்காக உத்தியோகம் பார்க்கணும் ?'' என்று கேட்டாள்.

'' இது என்னம்மா பைத்தியக்காரத்தனமா இருக்கு ? அம்மாவையும் இங்கே அழைத்து வந்தால் போச்சு; அவங்க ஏன் அங்கே தனியா இருக்கணும்?'' என்றார் திகைப்பு நீங்காமலே.

அமுதாவே சொன்னாள்.

'' எங்க கிராமத்திலே, ஆறு ஏக்கர் நன்செய் இருக்கு. முப்போகம் விளையுது. பெரிய மாடிவீடு, தென்னந் தோப்பு இருக்கு. எல்லாத்தையும் விட்டு விட்டு அத்தை இங்கே வருவாங்களா ? அதுனாலேதான், அத்தைக்குத் துணையா, இந்த வேலையை எழுதிக் கொடுத்திட்டு நாங்க போறோம். எங்க நிலத்திலே முறையோட பாடுபட்டா ஊருக்கே சோறு போடலாமே!'' என்ற அமுதா திரும்பிப் பார்த்தபோது, சங்கரியம்மாள் ' பொசுக் 'கென்று வீட்டிற்குள்ளே போய்விட்டாள்!



# காதலனைத் தின்னும் காதலி

'' காதல் போயிற் சாதல் '' என்றார் பாரதியார். இதற்கு மாறாக, காதல் கைகூடினால் சாவை அணைத்துக் கொள்கிற ஒரு விந்தையும் இங்கு நடைபெறுகிறது !

ஆம். காதலித்துக் கூடி இன்பத்தில் திளைத்து அவ்வின்பத் திளைப்பிலிருந்து மீண்டதும் காதலனைப்பிடித்துக் காதலியே, கொன்று தின்றுவிடுகிற 'விந்தை'யை நாம் தேளின் வாழ்க்கையிலே காணலாம்.

ஆண் தேள், பெண் தேளை விரும்பி, அதன் அருகிற் சென்று, ஒரு வகையான காதல் நடனம் புரியும். பின்னர், ஆணும் பெண்ணும் கைகோத்துக் கொள்வதுபோல், ஆண் தேள் தனது கொடுக்குகளால் பெண் தேளின் கொடுக்குகளைப் பிடித்துக்கொண்டு, முன்னும் பின்னுமாகவும் சுற்றிச் சுற்றியும் நடந்து கொண்டிருக்கும். பின் இரண்டும் தமது வால்களை நிமிர்த்தி உராயச் செய்யும். அதன் பிறகு, ஆண் தேள், மண்ணில் ஒரு சிறிய பள்ளத்தை ஏற்படுத்தி, இரண்டு தேள்களும் அதில் இறங்கிக் காதல் கேளிக்கையில் ஈடுபடும். கேளிக்கை முடிந்ததும், பெண் தேள் ஆண் தேளைப் பிடித்துக் கொன்று விடும்.

# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் | 5,68,606 | 09 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் | 44,943 | 18 |
| இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 36,827 | 33 |
| நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் | 33,134 | 25 |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் | 20,234 | 86 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் | 13,628 | 45 |
| தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் | 12,360 | 25 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் | 10,261 | 94 |
| மறை திரு. ஆர். அருளப்பா, சென்னை | 10,000 | 00 |
| திரு. இராமச்சந்திரன், புதுப்பேட்டை, பண்ணுருட்டி. (தொழில் அமைச்சர் அலுவலகம் மூலமாக) | 21 | 00 |
| தென்சென்னை மின்விநியோகக் கூட்டுறவு | 4,000 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழப்பாவூர், திருநெல்வேலி மாவட்டம். | 700 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், பாளையங் கோட்டை. | 1,400 | 00 |
| துணைப்பதிவாளர், கழுகுமலை | 64 | 50 |
| துணைப்பதிவாளர், அலிவார்த்திநகர் | 242 | 64 |
| மாவட்ட சுகாதார அலுவலர், திருநெல்வேலி | 45 | 00 |
| துணைப் பதிவாளர், திருச்செந்தூர் | 65 | 00 |
| லயன்ஸ் கிளப், அம்பத்தூர் | 104 | 00 |
| திரு. ஐ. துரையப்ப ஆசாரி, மேட்டுப்பாளையம். | 6 | 00 |
| திரு. வி. ஆர். சுப்ரமணியம், பெரியகுளம். | 5 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கோடைக் கானல். | 3,000 | 00 |

| | ரூ. | காசு. |
|---|---|---|
| காசில் அப்துல் காதர், அரசர்குளம் | 30 | 00 |
| பீடிட்டியூட்ஸ் சமூக சேவை நிலையம் | 395 | 80 |
| திருமதி பழனிசாமி பத்மாவதி, பொன்மலை | 5 | 00 |
| திரு ஆர். வி. தனபாலன், பி.ஏ., பி.எல். | 11 | 00 |
| திரு எ. எம். டி. நாச்சியப்பன், எம்.எல்.ஏ. (ஆத்தூர்). | 250 | 00 |
| சிட்டாடல், லாண்டன்ஸ் ரோடு | 5,000 | 00 |
| அமால்கமேட்டட் காப்பி எஸ்டேட் | 1,001 | 00 |
| கத்தோலிக்க அசோசியேஷன், சென்னை | 500 | 00 |
| டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளி | 1,001 | 00 |
| திருமதி தனம் கதிர்வேலு (பெங்களூர்) | 5 | 80 |
| திரு சிப்பாய் சுப்பையா (அன்பூன்) | 10 | 00 |
| திரு என். எம். பழனியப்பச் செட்டியார் (மைசூர்). | 21 | 00 |
| தொழிலமைச்சர் அலுவலகம், விழுப்புரம் வசூல் | 5 | 00 |
| தோமன்பட்டி தையல்காரர் சங்கம், (பிற்பட்ட வகுப்புத்துறை அமைச்சர் மூலமாக.) | 5 | 00 |
| திரு. எஸ். மாதவன் | 500 | 00 |
| துணைப்பதிவாளர், எட்டையாபுரம் | 20 | 00 |
| செயலாளர், தமிழ்நாடு ஊழியர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட், உதகை. | 500 | 00 |
| பொதுமேலாளர், நீலகிரி கூட்டுறவு என்டர் பிரைசஸ் லிமிடெட், உதகை. | 1,000 | 00 |
| மாவட்ட நிருவாக இயக்குநர், தேவர்சோலை (நீலகிரி) தேயிலைத் தோட்டம். | 100 | 00 |

| | | |
|---|---|---|
| நிருவாக அலுவலர், அதிகாரத்தி ஊராட்சி, நீலகிரி. | 100 | 00 |
| துணைப்பதிவாளர், சாத்தான்குளம் | 133 | 50 |
| திரு எம். பி. காசி விசுவநாதன், துணைப்பதிவாளர் தூத்துக்குடி. | 269 | 00 |
| துணைப்பதிவாளர், கயத்தாறு | 65 | 00 |
| துணைப்பதிவாளர், உடங்குடி | 42 | 00 |
| துணைப்பதிவாளர், பெருங்களூர் | 41 | 00 |
| துணைப்பதிவாளர், காயற்பட்டினம் | 65 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மாவூர், நெல்லை. | 200 | 00 |
| துணைப்பதிவாளர், ஈரோடு | 76 | 00 |
| துணைப்பதிவாளர், திசையன்விளை | 80 | 25 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 132 | 50 |
| துணைப்பதிவாளர், விளாத்திகுளம், திருநெல்வேலி. | 87 | 75 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம். | 100 | 00 |
| துணைப்பதிவாளர், புதுக்கோட்டை | 47 | 00 |
| வட்ட ஆட்சியாளர், செங்கோட்டை | 1,317 | 55 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செங்கோட்டை. | 350 | 00 |
| சதர்ன் ஆட்டமாட்டிக் இன்டஸ்டிரீஸ், கிண்டி. | 51 | 00 |
| இண்டஸ்டிரியல் ரப்பர் புராடக்ட்ஸ், கிண்டி. | 25 | 00 |
| ஸ்டாண்டர்டு பென்சில் பாக்டரி, கிண்டி | 25 | 00 |
| மெட்டலிசிரோ பிரைவேட் லிமிடெட், கிண்டி. | 51 | 00 |
| லாமினுக்ஸ் கார்ப்பரேஷன், கிண்டி | 201 | 00 |
| எம். ஆர். எலக்ட்ரானிக் காம்பெனன்ட்ஸ். | 200 | 00 |
| ஜெம்கோ பிரைவேட் லிமிடெட் | 25 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், முசிரி | 430 | 00 |
| நிருவாக அலுவலர், ஷோலூர், ஊராட்சி ஒன்றியம். | 200 | 00 |
| நிருவாக அலுவலர், கெட்டி ஊராட்சி ஒன்றியம். | 101 | 00 |
| நிருவாக அலுவலர், கோத்தகிரி, ஊராட்சி ஒன்றியம். | 250 | 00 |
| நிருவாக அலுவலர், ஊராட்சி ஒன்றியம், ஹலிகால். | 201 | 00 |
| ஸ்ரீ கணேஷ் டாக்கீஸ், குன்னூர் | 414 | 45 |
| அமிரிஷ் அண்டு ஹரிஷ் கம்பெனி, குன்னூர். | 343 | 60 |
| வட்டார ஆட்சியார், மேலூர் | 1,775 | 00 |
| உதவி மாவட்ட ஆட்சியாளர், செங்கற்பட்டு. | 2,026 | 00 |
| துணைப்பதிவாளர், பாடூர், திருநெல்வேலி | 15 | 00 |
| போர்ட்ஸ் அண்டு கம்பெனி, எண்ணூர் | 25 | 00 |
| நிருவாக அலுவலர், கீழ்க்குண்டல் ஊராட்சி ஒன்றியம். | 101 | 00 |
| நிருவாக அலுவலர், பிக்காத்தி ஊராட்சி ஒன்றியம். | 100 | 00 |
| மதீசன் பசன்குட் கம்பெனி லிமிடெட் | 200 | 00 |
| கவுடர் டாக்கீஸ், வெலிங்டன் | 200 | 77 |
| திரு அந்தோனிசுவாமி, குன்னூர் | 250 | 00 |
| டிலைட் டாக்கீஸ் | 313 | 80 |
| வி. என். தண்டபானி நாவலர் மண்டபம், (போக்குவரத்து அமைச்சர் மூலமாக.) | 5 | 00 |
| கால்நடை உதவி மருத்துவர்களும், மருத்துவ நிலைய உதவியாளர்களும்—வால்பாறை. | 25 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், எல்லபுரம். | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருத்தணி. | 425 | 00 |
| மாவட்டத் துணை ஆட்சியாளர், புதுக்கோட்டை. | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொரடாச்சேரி. | 1,028 | 00 |
| துணைப்பதிவாளர், ஸ்ரீவைகுண்டம் | 143 | 75 |
| நியூ ராயல் டாக்கீஸ், நெல்லை | 37 | 40 |
| நகரசபை ஆணையர், தூத்துக்குடி | 2,892 | 00 |
| நிர்வாக அலுவலர், கொணராத்துறை ஊராட்சி. | 100 | 00 |

(தொடரும்)

# எவ்வழி நல்லவர் ஆடவர்
# அவ்வழி நல்லை வாழிய நிலனே!

## வெற்றிகள் குவிந்தால் போதுமா?



 பசுமைப் புரட்சி பரவுகிறது!

 புகுமுக வகுப்புவரை இலவசக்கல்வி!

 தொழில்துறையில் புதிய புதிய முயற்சிகள்!

 சட்டத்தின் துணையோடு ஏழை, எளிய மக்களுக்கு நிலப்பட்டா!

 வீட்டுமனைப் பட்டா!

 தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகள்!

 எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால் திட்டங்கள்!

அரசு

ஆடவர்

ஆரணங்கு

பொறுப்பை
உணர்த்தும்
சிவப்பு முக்கோணம்.

சாதனைப் பட்டியல் இப்படி வெற்றிகளைக் குவித்தாலும் முழுமையான பயனை நாம் நுகரமுடிகிறதா?



நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்னைகளை உருவாக்குவது,
**மக்கள்தொகைப்பெருக்கம்தானே!**



இதைக்
## கட்டுப்படுத்த வேண்டாமா?

**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்**
**இரண்டுக்குமேல் எப்பொழுதும் வேண்டாம்.**

வெளியீடு: இயக்குநர், சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து




**இனியவை இருபது**

'இனியவை இருபது' என்று முதல்வர் கலைஞர் தலைப்புக் கொடுத்துக் கட்டுரை எழுதிய தன் பொருள் எனக்கு இப்போது தான் புரிகிறது. சரியாக 20 இதழுடன் கட்டுரையை முடித்து விட்டாரே!

—மு. சரவணன், கடலூர்.

'இனியவை இருபதை' இவ் வளவு விரைவில் முடித்துவிட் டாரே ! இன்னும் எழுதுவார் என்று எதிர்பார்த்திருந்த எங் களை ஏமாற்றிவிட்டாரே!

—மல்லிகா, மனோன்மணி, தென்காசி.

''இனியவை இருபது'' பய ணக் கட்டுரைத் தொடரைப் படித்து ரசித்தவர்களில் நானும் ஒருவன். சுவைமிகுந்த தொடர் கட்டுரை. அதற்குள் முடிவ டைந்து விட்டதை எண்ணி ஏங்குபவர்களில் நானும் ஒருவன். விரைவில் நூல் வடிவில் வெளி யிடுமாறு வேண்டுகிறேன்.

—எஸ். சுந்தரம், மதுரை-3.

**வறுவலுக்கு அச்சாரம்!**

'ஒட்டக வறுவல்' அற்புதம்! நமது நாட்டில் அந்த வறுவல் தயாரிக்க எந்த உணவு விடுதி யாவது முன்வந்தால் இப்போதே 'அச்சாரம்' தருவதற்கு நான் தயார் !

—ப. மணிமாறன், பம்பாய்-19.

**கனவும் நனவும் !**

'அண்ணா கனவு நிறைவேறியதை'ச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

—பாண்டுரங்கம், காஞ்சிபுரம்.

**கவிதை மின்னல் !**

புலவர் பொன்னிவளவனின் 'நெருப்புச் சிரிப்பு' எனது இத யத்தில் மின்னிக்கொண்டே இருக்கிறது, சொல்வளம் மிக்க கவிதை.

—புலவர்பொன்னம்பலம், பழனி.

**தக்காளியால் வந்த....!**

தக்காளி பயிரிட நினைத்த நான் இப்போது தக்காளி போன்ற பெண்ணைத் தேடத் தொடங்கிவிட்டேன். எல்லாம் உங்கள் 'செக்கச் சிவந்த தக்கா ளியால்' வந்த வினை!

—ஏ. அம்புரோசு, தூத்துக்குடி.

**அப்பாவிக்கு அனுதாபம் !**


பாவம்! பொன்மொழியார்! எழுத்துலகத்துக்குச் சேவை செய் யும் அந்த மனிதருக்கு இப்படிச் சோதனை வரக்கூடாது. மனை யரசியால் அல்லலுக்கு ஆளான அந்த அப்பாவிக்கு எனது அனு தாபத்தைத் தெரிவியுங்கள் !

—ச. கண்மணி, சென்னை-7.

**சிறுகதையின் சிறப்பு !**

'தலைவன் கட்டுகிறான் பாலம்' —கதை சிறியதுதான் என்றாலும் அதன் கருத்து, மிகமிகப் பெரி யது! முதல்வரின் மாபெரும் திட் டத்தைச் சுவைபடத் தெரிவிக் கும் இந்தக் கதை என் இதயத் தைத் தொட்டுவிட்டது.

—ராதாமணி, வடகோவை.



‘நாதர்முடி மேலிருக்கும்
நாகப் பாம்பே !
நச்சுப் பையை வைத்திருக்கும்
நல்ல பாம்பே ’’

என்று பாடிப் பரவசமடைந்தார் பாம்பாட்டிச்சித்தர் : நச்சுப் பையை வைத்திருக்கும் அந்நாகப் பாம்பைக் கண்டு விட்டால் எல்லாருக்குமே குலை நடுக்கம் தான். ‘பாம்பென்றால் படையும் நடுங்கும்’—என்பது தானே நம் நாட்டுப் பழமொழி!

இப்படிக் குலைநடுங்க வைக்கும் நாகப் பாம்பின் நஞ்சு, தீராத நோய் பலவற்றைத் தீர்க்கும் சிறப்பு மிக்க ‘சஞ்சீவி’ யாக—அருமருந்தாக இருக்கிறது என்றால் பலருக்கு வியப்பாக இருக்கும்; சிலருக்கு வேடிக்கையாக இருக்கும்.


நாகப் பாம்பின் விஷத்தில், மயக்கந்தரக் கூடிய இரு வகையான புரதச் சத்துக்கள் உள்ளன. நாகப் பாம்பு கடித்ததும் கடிபட்டவர் இறந்து போவதற்கு மயக்க மூட்டும் இந்தப் புரதச் சத்துக்களே காரணமாக உள்ளன. மேலே கூறிய இரு வகையான புரதச் சத்துக்களையும் தனித் தனியே பிரித்தெடுப்பதில் அறிவியலறிஞர்கள் வெற்றி பெற்ற பின்னர், இதிலிருந்து மயக்க மூட்டாத மற்றொரு புரதச் சத்தையும் பிரித்தெடுத்தனர்.

மயக்கமூட்டாத இந்தப் புரதச் சத்தைக் கொண்டு சிலவகையான புற்று நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று பம்பாயில் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிறுவனத்தினர் தெரிந்து தெளிவுபடுத்தியுள்ளனர். சோதனைக் குழாய்களிலும், சில விலங்கினங்களின் உடல்களிலும் செய்த ஆராய்ச்சிகள் மூலம் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். இது தவிர, சில வகையான கொடிய சரும நோய்களைத் தணித்துக் குணப்படுத்தவும் நாகப் பாம்பின் நஞ்சு பயன்படுவதாக ஆராய்ச்சிகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாம்பின் நஞ்சு மஞ்சள் நிறமுடைய தடிப்பான நீர்போன்றிருக்கும்; அதற்கு மணமோ, சுவையோ இல்லை. இந்த நஞ்சு நம் உடம்பின் மேல்தோலிலுள்ள வெட்டுக்காயங்கள் அல்லது புண்களில் பட்டால் கெடுதி விளையும். இத்தகைய நாகப் பாம்பின் கொடிய நஞ்சுதான் புற்றுநோய்களைத் தீர்க்கப் பயன் படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகில் ஊர்வன இனத்தைச் சேர்ந்தவற்றுள் பாம்பும் ஒன்று. இந்தப் பாம்புகளில் நஞ்சுள்ளவை—நஞ்சற்றவை என இரு பிரிவுகளுண்டு.

இந்தியாவில் 350 இனப் பாம்புகள் உள்ளன. இவற்றில் 70 இனங்கள் நஞ்சுடையன. இவ்வாறு நஞ்சுடைய பாம்புகளிலும் 30 வகையானவை கடலில் வாழ்வன. இவற்றில் ஒரு சாதிக் கடற் பாம்பைத் தவிர,




ஏனைய யாவும் கொடு நஞ்சுடையன.

நிலத்தில் வசிக்கும் பாம்புகளில் 40 வகையான பாம்புகள் மனிதனுக்கு மரணத்தை விளைவிக்கும் நச்சுப் பாம்புகள். இவற்றில், நாகப் பாம்பு, கண்ணாடி விரியன், சுருட்டைப் பாம்பு, கட்டு விரியன் ஆகிய நான்கும் கொடு நஞ்சுடையன.

கொடிய நஞ்சுடைய பாம்புகளிலிருந்து நஞ்சை எப்படிச் சேகரிக்கிறார்கள் என்பதையும், அந்த நஞ்சை எவ்வாறு ‘புற்றுநோய் நிவாரணி’ யாக மாற்றுகிறார்கள் என்பதையும் காணலாம்.

கொடிய நச்சுப் பாம்புகளை, கண்ணாடிக் கிண்ணங்களின் வாய்களை ரப்பரால் மூடிக் கட்டி, அந்த ரப்பரைக் கடிக்கச் செய்கிறார்கள். அவ்வாறு கடிக்கச் செய்யும் பொழுது, அவை நஞ்சைக் கக்குகின்றன. நஞ்சு, கிண்ணத்தில் விழுகின்றது. பின்னர் இந்த நஞ்சை வெய்யிலில் காயவைத்துக் கொள்வார்கள். பின்னர், இந்த நச்சுக் கட்டியைச் சிறிது சிறிதாகத் தண்ணீரில் கரைத்து, அந்தக் கரைசலைக் குதிரையின் உடம்பினுள் சிறுகச் சிறுகச் செலுத்துவார்கள். அப்போது, குதிரையின் உடம்பில் இந்தக் கொடிய நஞ்சை முறிக்கக் கூடிய ஒருவித ‘நஞ்செதிர்ப்புச்’ சத்துப் பொருள் உண்டாகிறது.

தொடக்கத்தில் குதிரையின் உடம்பிலே செலுத்தப்படும் நஞ்சின் அளவு மிகமிகக் கொஞ்சமாக இருக்கும். குதிரைக்கு இதனால் ஒருவிதக் கெடுதலும் உண்டாகாது. நாளாவட்டத்தில் நஞ்சின் அளவைச் சிறிது சிறிதாக அதிகப்படுத்திக் கொண்டே வருவர். பின்னர், அக் குதிரையைக் கொல்லக் கூடிய நஞ்சைவிட இருமடங்கு நஞ்சைச் செலுத்தினாலும் அக் குதிரைக்கு எத்தகைய கெடுதலும் உண்டாகாது. அவ்வளவு நஞ்சையும் முறிக்கக் கூடிய சத்து அக்குதிரையின் இரத்தத்தில் உண்டாகிவிடும்.

பிறகு, குதிரையின் இரத்தத்தை எடுத்து, அதனை நன்கு உறையச் செய்து, மேலே தேங்கி நிற்கும் நிணநீரைச் சிறு கண்ணாடிப் புட்டிகளில் அடைத்து வைக்கப் பெறும். இந்த நிணநீரில் பாம்பின் நஞ்சை முறிக்கக் கூடிய சத்து நிறைந்திருக்கும். இதனையே சில வகைப் புற்று நோய்களைத் தீர்ப்பதற்கான சிறந்த மருந்தாகப் பயன் படுத்துகின்றனர்.

இவ்வாறு சில வகையான புற்று நோய்களுக்கும், சில வகையான சரும நோய்களுக்கும் இணையற்ற மருந்தாகப் பயன்படுகின்ற நாகப் பாம்பின் நச்சு பற்றிய ஆராய்ச்சி வளர்ந்தால் இன்னும் அது எத்தனை எத்தனை நோய்களைத் தீர்க்கப் பயன்படுமோ !

—சாமி

# சேவல்



பொழுதின் விடிவைச் சொல்வதற்கே-மணிப்
பொன்னிறச் சேவல் கூவுதுபார்
அழகாய்த் தன்னிரு சிறகடித்தே-மிக
ஆனந்த மாகக் கூவுதுபார்.

செக்கச் சிவந்த பூங்கொத்தும்-ஒளித்
தீயெனக் கொண்டையில் மின்னுதுபார்
கொக்கரக் கோவென வாய்திறந்தே-அது
கூவிடும் அழகைக் கண்டிடுவாய்.

தலையைக் குனிந்தே விரைவாக-அது
தாவிக் குதித்துச் செல்வதுபார்.
தொலைவில் நின்றிடும் சேவலுடன்-அது
துடித்துச் சண்டைக்ள் செய்வதுபார்.

கடமை உணர்வைச் சேவலிடம்-நீ
கற்றுக் கொள்ளல் மிகநன்றும்
அடுத்தவ ரோடு சண்டையின்றி-மிக
அன்பாய்ப் பழகிடு அதுநன்றும்!

கூரிமாசன்


தோப்பிலே கூட்டம் போடலாமா? நம்ப வீட்டிலேயே போட்டிருக்கலாம்!
வேலன் காலிலே அடிபட்டதற்கு முத்துதான் காரணம்!
குரங்கு தேங்காயைத் தள்ளிவிட்டதுன்னு சொன்னே; இப்ப முத்து என்கிறே! குரங்கு பேரு முத்துவா?
முத்துதான் திருவள்ளுவர் மன்றச் செயலாளர்
நல்லபையன் என்று எல்லாரும் சொன்னாங்க... அவனா உன் காலில் தேங்காயைப் போட்டான்
முத்துதான் தோப்பிலே கூட்டம் போடச் சொன்னது அதனாலேதான்.....
குரங்கு போட்டதற்கு அவன் என்ன செய்வான்?
எங்களுக்கு என்னமோ முத்துவைப் பிடிக்கலே அப்பா!
அவசரப்பட்டு எதையும் முடிவு செய்யக் கூடாது... எல்லாருடனும் ஒற்றுமையாய்ப் பழகணும்
அண்ணன் காட்டிய வழி * கதை: நம்பியின் தம்பி * படம்: குமார் 3
திருஞானம் உள்ளே போனதும்
வேலா அப்பா எப்பொழுதும் இப்படித்தான்! முத்து நல்ல பையனும்... நீதான் அடுத்து மன்றத்துக்குச் செயலாளரா வரணும்
ஆண்டுவிழா முடிந்தபிறகுதானே செயலாளர் தேர்தல் நடக்கும்!
நாங்கள் இருக்கிறோம்; எப்படியாவது உன்னைச் செயலாளராக ஆக்கிடுவோம்
அதோ! எல்லாரும் இங்கே வர்றாங்க
வேலா நீ ரொம்ப அடிபட்டதாக அந்த பெஞ்சிலே படுத்துக்க....
நான் போர்வை எடுத்தாறேன்
ஆ... அம்மா
தொடரும்